பக்கங்கள்: இருபத்திநான்கு+II =26

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 19 வெள்ளிக்கிழமை (02.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 127

## விடுதலைப் புலிகள் போன்று செயற்பட சிலர் இப்போதும் முயற்சி

# 30 வருடங்கள் அனுபவித்த வேதனைகள் தமிழர்களுக்கு இனியும் தேவை தானா?

## யாழ்.தேர்தல் கூட்டத்தில் ஜனாதிபதி கேள்வி



யாழ்ப்பாணம், ஏப்ரல் 02

விடுதலைப் புலிகளைப்போன்று செயற்படுவதற்குச் சிலர் இப்போது முயன்று வருகின்றனர். எனவே, தமிழ்மக்களாகிய நீங்கள் புத்திசாதுரியத்துடன் நடந்துகொள்ள வேண்டும். 30 வருட காலமாக நீங்கள் அனுபவித்து வந்த வேதனைகள் இனியும் தேவையா என்பதை நீங்கள்தான் தீர்மானிக்கவேண்டும்.

- இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் பொதுமக்கள் முன்னிலையில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். (23ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கூட்டமைப்பின் கோஷங்களில் சிக்காதீர்; வடக்கு, கிழக்கு மக்களிடம் பிக்குகள் கோரிக்கை!

கொழும்பு, ஏப்.2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கும் வடக்கு - கிழக்கு மீள் இணைப்பு, சுயாட்சி மற்றும் பிரிவினைவாதம் போன்ற கோஷங்களுக்குள் சிக்கிவிடவேண்டாம் என்று தேசிய பிக்குகள் முன்னணி வடக்கு - கிழக்கு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த நாடு மூவின மக்களுக்கும் சொந்தமானது என்ற அடிப்படையில் வடக்கு - கிழக்கு மக்கள் அனைத்து மக்களுடனும் ஐக்கியப்பட்டு நிற்கவேண்டும் என்றும் பிக்குகள் முன்னணி கூறியுள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய பிக்குகள் முன்னணியின் தலைவர் வண.தம்பர அமில தேரரே இவ்வாறு கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் தேசிய பிக்குகள் முன்னணியின் கருத்து என்னவென்று (23ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை

கொழும்பு, ஏப்.2

கொழும்புக்கும் தமிழகத்திற்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (24ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் ஐ.தே.க. முதன்மை வேட்பாளரின் வாகனங்கள் ஈ.பி.டி.பியினரால் தாக்கப்பட்டன!

### கடற்படையினர் விரைந்து நடவடிக்கை

யாழ்ப்பாணம். ஏப்.02

கரைநகர் வலந்தலைச் சந்தியில் நேற்று நள்ளிரவு 12 மணியளவில் தமது வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டதாகவும் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டதாகவும் ஐ.தே. கட்சியின் முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் தலைமையில் வந்த குழுவினரே தாக்குதல் நடத்தினர் எனக் கடற்படையினரிடம் தாம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து திருமதி விஜயகலா மகேஸ்வரன் (24ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. தமிழ் அரசியல் பேரவை ஐ.நா. செயலருக்குப் பாராட்டு

### நிபுணர் குழு அமைக்கும் முயற்சிக்காக

கொழும்பு, ஏப். 02

இலங்கையின் இறுதி யுத்த காலத்தில் இடம்பெற்றவை எனக் கருதப்படும் யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாகச் சர்வதேச நிபுணர்கள் குழுவின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் முயற் (23ஆம் பக்கம் பார்க்க)

## பம்பைமடு தடுப்பு முகாமிலிருந்து 1,528 முன்னாள் போராளிகள் நாளை விடுவிக்கப்படுவர்

### ஜனாதிபதி நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்

வவுனியா, ஏப். 2

வவுனியா, பம்பைமடு தடுப்பு முகாமில் இருந்து 1,528 முன்னாள் போராளிகளை விடுவிக்கும் செயற்பாட்டை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்துவைத்தார்.

வவுனியா நகரசபைக்கு முன்பாக நேற்று மாலை நடைபெற்ற கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி, இந்தச் செயற்பாட்டைத் தொடக்கிவைத்தார். (23 ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி

**யாழினி கணேசராஜசர்மா**

அவர்கள் 28.03.2010 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் 'நுண்கலைமாணி' (B.F.A.) பட்டம் பெற்றதையிட்டு இவரைப் பாராட்டுவதோடு இவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று சீரும் சிறப்புட னும் வாழ வேண்டுமென மனமார வாழ்த்துகின்றோம்.

அரியாலை பிரப்பங்குளம்
மகாமாரி அம்மன் இளைஞர்கள்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 04.03.2010 வியாழக்கிழமை அன்று சிவபதடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்

**தம்பு அருணாசலம்**

**(செல்வராசா)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (01.04.2010) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (03.04.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

-இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

மனைவி,
பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 1935 * 01 * 02



இறப்பு 2010 * 03 * 03


**திருமதி மார்க்கண்டு பவனேஸ்வரி**

*அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (02.04.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார் த்தனையைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

தகவல்
பிள்ளைகள்,மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

'பாலகிரி'
சூராவத்தை, சுன்னாகம். (96298)


## சுரேஷ் க. பிறேமச்சந்திரன்



எம் மண்ணில் நாம் வாழ,
எம் மண்ணை நாம் ஆள
தளராது குரல் கொடுப்போம்.

3

இலங்கை தமிழரசுக் கட்சி

தமிழ் தேசியக் கூட்டமைப்பு



## தொடர்பு கொள்ளவும்

நான்கு சில்லு வாகனங்கள் ஓடக் கூடிய சாரதி ஒருவர் உள்ளார். (சாரதி அனுமதிப் பத்திரம்: AD தரம் உள்ளவர்) தேவைப்படுவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு 0778439536 (96293)

## Personal Class

புதுவருடத்தை முன்னிட்டு தரம்-3-A/L வரையான மாணவர்களுக்கு English Personal class உம் Spoken with Grammer உம் கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்தும் கற்பிக்கப்படும். (மேலதிக விவரங்களுக்கு ஆசிரியரைத் தொடர்புகொள்ளவும். அனுமதி மட்டுப்படுத்தப்பட்டவை-முந்தவும்)

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. T.P.:077-1372280

## வீடு வாடகைக்குத் தேவை

சாவகச்சேரியில் பிரபல நிறுவனம் ஒன்று பழம் பதனிடும் தொழிற்சாலையை ஆரம்பிக்க வீட்டுடன் ஐந்து பரப்புக் காணி வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0773865475


## வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஏப். 2

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 813ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "N" என்ற ஆங்கில எழுத்தும் 11/13/32/49 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவுசெய்யப்பட்டன. போனஸ் இலக்கமாக 67 தெரிவாகியது.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. நான்கு இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இரண்டு பேருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்க வுள்ளது.

மூன்று இலக்கங்களையும் போனஸ் இலக்கத்தையும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 4 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கும்.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 290 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத் திருக்கும் 14,181 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,97,938 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)

## சாவகச்சேரியில் பரிசளிப்பு நிகழ்வு

கடந்த வருடம் ஐந்தாம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற கொமஷல் வங்கி சாவகச்சேரி கிளையில் கணக்கு வைத்துள்ள மாணவர்களுக்கு வங்கியின் 'அருணலு' சேமிப்புத் திட்டத்தில் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு வங்கி மண்டபத்தில் இடம்பெறுமென வங்கி கிளை முகாமையாளர் எஸ். வி.குருபாதம் அறிவித்துள்ளார். (1-207)

## நிறுவனத் தலைவர்களுக்கான கண்காணிப்புக்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 2

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாவட்டக் கண்காணிப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இந்தக் கூட்டம் நேற்றுக் காலை 9 மணிக்குப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் கூட்டம் நடைபெற வில்லை எனத் தெரிவிக்கப் பட்டது. (ஒ-12)

## சேவை நலன் பாராட்டு



திருமதி

**சறோஜினிதேவி குலேந்திரராஜா**

(ஆசிரியர் தரம்01)

ஆசிரிய சேவையை நேற்றுவரை 38 ஆண்டுகள் நற்சேவையாற்றி பாடசாலைத் தேவைகளை நிறைவுடன் செயற்படுத்தி மாணவர்கள், ஆசிரியர்களின் செயற்பாடுகளில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்ட எமது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய ஆசிரியர் தனது ஓய்வு காலத்திலும் நிறைவான ஆரோக்கியத்துடன் சகல சௌபாக்கியங்களும் பெற்றுவாழ இன்றைய பிறந்த நாளில் (02.04.2010 வெள்ளி) மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

அதிபர் ,ஆசிரியர்கள்,மாணவர்கள்,
யா/மயிலணி சைவ மகாவித்தியாலயம்.

(96300)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**கந்தையா**

**இலட்சுமணன்**(NSK)

*(சமாதானநீதிவான்)*

திதி: வளர்பிறை சதுர்த்தி

பிறப்பு 02*04*1943 இறப்பு 26*03*2008

பட்டதெல்லாம் பகிர்ந்துகொண்டோம் ஐயா!
படும்துன்பம் சொல்ல ஆளில்லையே!!
ஆண்டு இரண்டில் ஆறாத்துயர் கொண்டு
அலைகின்றேன் அபலையாய் நான் !!!
ஓம் சாந்தி சாந்தி சாந்தி !!!

வட்டுக்கோட்டை

உங்கள் மனைவி
வள்ளியம்மை.

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் பொதுச்சேவை முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றும் திருமதி நிற்கந்தா அவர்களின் தாயாராகிய

**இரத்தினம் அனுக்கிரகவதி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாராது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கடற்றொழில் ,நீரியல்வளத்துறைத் திணைக்களம்,
மாவட்ட அலுவலகம்,
யாழ்ப்பாணம். (96304)

உதவிப்பணிப்பாளரும்,
உத்தியோகத்தர்களும்.

## மரண அறிவித்தல்

*திருமதி வரதராசா சிவக்கொழுந்து*



பண்ணாகத்தைச் சேர்ந்த வரதராசா சிவக்கொழுந்து நேற்று (01.04.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஓய்வு பெற்ற அதிபர் சம்பந்தமூர்த்தி- அன்னப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகளும் அமரர் இராமலிங்கம் வரதராசாவின் (சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன்மிசன் பாடசாலை ஆசிரியர்) அன்பு மனைவியும், முருகமூர்த்தி, (இணுவில் பாடசாலை ஓய்வுபெற்ற அதிபர்- லண்டன்), பாஸ்கரமூர்த்தி (லண்டன்), சுபலட்சுமி, கமலாதேவி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னலட்சுமி, உமாதேவி, தியாகராசா, சரவணமுத்து, சிவசுப்பிரமணியம், அமரர் சபா பதிப்பிள்ளை, சிவகுருநாதன், சரவணமுத்து ஆகியோரின் அருமை மைத்துனியும் சிவராசா (அவுஸ்ரேலியா) சுசீலா, கோகிலா (ஜேர்மனி) தேவகி (மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை), துரைராசா(மின் இணைப்பாளர்) ஆகியோரின் பாச மிகு தாயாரும் சுகுணவல்லி (கணக்காளர் -அவுஸ்ரேலியா), காலகாலன் (வவுனியா), அமரர் அசோக்குமார், கருணானந்தன் (மூளாய்), நவமணிதேவி (அரசினர் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு) ஆகியோரின் அருமை மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2010) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம்,
சுழிபுரம் (96453)

தகவல்:
வ.துரைராசா (மகன்).


## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010 யாழ் மாவட்டம்

உங்களோடு ஒருவராய், உங்களோடு உடனிருந்து,
உங்களுக்கு உதவிட .... சிரேஷ்ட சட்டத்தரணி
**அப்பாத்துரை விநாயகமூர்த்தி** LL.B முன்னாள்
பாராளுமன்ற உறுப்பினர் அவர்களை ஆதரிப்போம்



1

கொக்குவில் நந்தாவில் வாழ் மக்கள்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு
(இலங்கை தமிழரசுக்கட்சி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 • தொலைநகல்.: 222 9944

# மீண்டும் ஒரு வரலாற்றுத் தவறுக்கு தயாராகின்றதா தென்னிலங்கை?

நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் தடை செய்யப்பட வேண்டும் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மைக்காலத்தில் தெரிவித்திருந்த கருத்து சரியானது என இலங்கை அரசுத் தரப்புக் கூறியிருக்கின்றது.

இந்தக் கருத்து வெளிப்பாடு இரண்டு முக்கிய விடயங்களை நமக்குத் தெளிவாக உணர்த்தி - உரைத்து - நிற்கின்றமை கவனிக்கத்தக்கதாகும்.

ஒன்று - இவ்விடயத்தில் கடந்தகாலப் பட்டறிவிலிருந்து சரியான பாடத்தைப் படித்துக்கொள்ள தென்னிலங்கை தவறிவிட்டது அல்லது அந்த அனுபவத்தை ஒரு பாடமாக ஏற்றுக்கொள்ள தென்னிலங்கை அடியோடு விரும்பவில்லை என்பது.

அடுத்தது - இலங்கை இனப்பிரச்சினைக்கு, அதில் பாதிக்கப்பட்ட தரப்பான - சிறுபான்மை இனமான - தமிழர்களுக்கு, நியாயமான தீர்வு ஒன்றை வழங்கும் எண்ணமோ, தாராண்மையோ, திடசங்கற்பமோ, பற்றுறுதியோ தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பெரும்பான்மை இனத்துக்கு அடியோடு இல்லை என்பது.

இலங்கையில் தமக்கு நியாயமான தீர்வும், கௌரவமான வாழ்வும் வேண்டி தமிழர்கள் நடத்தும் தற்போதைய போராட்டம் சுமார் ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான சரித்திர நீட்சியைக் கொண்டது.

தமது உரிமைக்கான போராட்டத்தைத் தமிழர்கள் முதல் மூன்று தசாப்தங்களுக்கு அமைதி வழியில்தான் - அஹிம்சை மார்க்கத்தில்தான் - காந்தீயப் பாதையில்தான் - அறவழியில்தான் - முன்னெடுத்தார்கள்.

அச்சமயத்தில் - 1983ஜூலையில் - தமிழர்களின் அந்த நியாயமான போராட்டத்துக்குப் பதிலடியாகப் பெரும் இனக்கலவரக் கொடுமையைக் கொடூர வன்முறைப் புயலாகத் தமிழர் சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விட்டது தென்னிலங்கை.

அப்படிக் கொடூரம் இழைத்த பின்னரும் கூட தென்னிலங்கை ஆட்சிப்பீடம் தன்னைத் திருத்திக்கொள்ளாமல் - இப்போது நடக்கின்றமை போல - ஒருதலைப்பட்சமாக, கண்மூடித்தனமாக, மேலும் மோசமாக நடந்துகொண்டு, இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் அரசியல் நடவடிக்கைகளில் தமிழர்களின் மிதவாதத் தலைமைகள் ஆக்கபூர்வமாகப் பங்குபற்றுவதற்கு இருந்த வாய்ப்பு வசதியையும் எதேச்சாதிகாரமாகச் செயற்பட்டு, ஒரேயடியாக அதனை அடைத்தது; அடக்கியது.

நாடாளுமன்றில் தனக்கிருந்த அளவுக்கு அதிகமான பெரும்பான்மையை இவ்விடயத்தில் தனக்குச் சாதகமாக்கிகொண்டு சர்வாதிகாரமாக அப்போதைய ஜெயவர்த்தனா அரசு நடந்துகொண்டது.

தமிழர் தரப்போடு கலந்தாலோசனை நடத்தாமல், ஒருதலைப்பட்சமாக அரசமைப்புக்கான ஆறாவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் அப்போது, தமிழர்களின் மிதவாதத் தலைமையாகத் திகழ்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றுக்குச் செல்வதற்கு இருந்த வாய்ப்பை அந்த அரசு தடைசெய்தது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தமிழர் தரப்புக் கைப்பற்றி நாடாளுமன்ற அரசியலிலும் தமிழர்கள் மும்முரமாக - முக்கியமாக - முழுப் பங்களிப்போடு - ஈடுபட்ட காலம் அது.

1983ஜூலைக் கலவரம் என்ற இன வெறியாட்டம் இலங்கைத் தீவு எங்கும் ஈழத் தமிழர்களுக்கு எதிராக மிகக் கொடூர வன்முறையாகக் கட்டவிழ்ந்த போது, அந்தக் கொடூரத்துக்குக் காரணமானவர்களைத் தேடிக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை வாங்கிக் கொடுக்கவேண்டிய கடப்பாடுடைய அரசு, அதை விடுத்து, தனது கவனத்தைத் தமிழர்களின் அபிலாஷைகள் பக்கம் திருப்பி, அதை அவர்கள் எட்டுவதற்கான வாய்ப்பை நிரந்தரமாக மூடி அடைத்துவிடலாம் என்ற தந்திரோபாய எண்ணத்துடன் அரசமைப்பிற்கான ஆறாவது திருத்தத்தைக் கொண்டுவந்தது.

அதன்மூலம், பிரிவினைக்கு எதிராக நாடாளுமன்றத்திலும் சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும் என்ற சட்ட ஏற்பாட்டைப் பலவந்தமாகப் புகுத்தி, அதன் வாயிலாக அதுவரை நாடாளுமன்ற அரசியலில் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்குபற்றி வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்றப் பங்களிப்புக்கு முழு வேட்டு வைத்து முற்றுப்புள்ளியிட்டது ஜெயவர்த்தனா அரசு.

அந்த நடவடிக்கையின் பெறுபேற்றைத்தான் கடந்த மே மாதம் வரையில் மிக மோசமான - மிகக் கொடூரமான - மிகக் கோரமான - பேரழிவு யுத்தமாகக் கடந்த 26 ஆண்டுகளாக இலங்கை எதிர்கொண்டது.

நாடாளுமன்றம் மூலமான அரசியல் பங்களிப்புக்குத் தமிழர்களுக்கு இருந்த வாய்ப்பை மூடி அடைத்ததன் மூலம் ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்ட மார்க்கத்தை அகலத் திறக்கச் செய்து, அதைத் தூண்டி வளர்ப்பதற்குத் தனது பங்களிப்பை ஆற்றியது தென்னிலங்கை.

ஈழத் தமிழர்களின் நாடாளுமன்ற அரசியல் பங்களிப்புக்கு முட்டுக்கட்டை போட்ட அந்த நடவடிக்கை மூலம் வரலாற்றுத் தவறிழைத்தது அப்போதைய ஜெயவர்த்தனா அரசு என்றே இப்போதும் விமர்சிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்க் கூட்டமைப்பைத் தடைசெய்யும் யோசனை பற்றிய அரசுத் தரப்பின் தற்போதைய சிந்தனை மீண்டும் அதேபோன்ற ஒரு வரலாற்றுத் தவறை இழைப்பதற்கு இந்த அரசுத் தலைமையும் தயாராகி வருகின்றதோ என்ற சிந்தனையைத்தான் நமக்குத் தந்து நிற்கிறது.

பட்டறிவுப் பாடத்தைப் படியாதோரைப் பட்டறிந்து தெளியவிடுவதைத் தவிர வேறு என்ன மார்க்கமுண்டு?

# இலங்கையில் மனிதாபிமானப் பணியில் ஈடுபடும் சர்வதேச அமைப்புகள் நிதிப்பற்றாக்குறையில்!

## அதனால் இடம்பெயர்ந்தோருக்கான சேவைகள் பாதிப்பு

கொழும்பு, ஏப். 2

இலங்கையில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள சர்வதேச அமைப்புகள் பாரிய நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்வதன் காரணமாக மோதல்களால் இடம்பெயர்ந்தவர்கள் புதிய நெருக்கடியைச் சந்திக்கும் அபாயம் உருவாகியுள்ளது என ஐ.நா. வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த எகனமிஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஐ.நா. இதுவரை காலமும் நேரடியாக மனிதாபிமான அமைப்புகளுக்கு வழங்கி வந்த நிதியுதவியை இனிமேல் ஜனாதிபதி செயலணி ஊடாக வழங்க வேண்டும் என அரசு தெரிவித்துவிட்டதன் காரணமாகவே இந்த நெருக்கடியான சூழ்நிலை உருவாகியுள்ளது.

இது தொடர்பாக 'த எகனமிஸ்ட்' மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையின் உள்நாட்டு மோதல் முடிவடைந்து ஒரு வருட காலமாகின்றபோதிலும் மோதல் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் நிலைமை இன்னும் அவலம் மிகுந்ததாகவே உள்ளது.

அவர்கள் தற்போது புதிய நெருக்கடியொன்றை எதிர்கொள்கின்றனர்.

இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் ஐக்கிய நாடுகளின் ஏற்பாட்டை இலங்கை அரசு நிராகரித்துள்ளமையைத் தொடர்ந்து சர்வதேச அமைப்புகள் நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றன.

இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான அலுவலகம் அவசர உயிர் காப்பு நடவடிக்கைகளுக்காக மூன்று மாத உதவித் திட்டமொன்றை அறிவிக்கவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான அலுவலகத்தின் அவசர நிதியத்திலிருந்து வழங்கப்படும் இந்த உதவியை இடம்பெயர்ந்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுத்த ஐ.நா. எண்ணியுள்ளது.

எனினும் குறுகிய கால நிதியுதவியை விட அதிகமாகத் தேவையென மனிதாபிமான அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

நிரந்தர வீடுகள் கட்டப்படும் வரை இடம்பெயர்ந்த மக்கள் தமது கிராமங்களில் தற்காலிகக் கூடாரங்களின் கீழ் வாழப்போகின்றனர் என ஐ.நா. வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான நம்பிக்கையோ அல்லது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வசதியோ இல்லை என்றும் அவை சுட்டிக்காட்டுகின்றன.

கடந்த சில வருடங்களாக ஐ.நாவின் மனிதாபிமான அலுவலகம் வருடாந்த மனிதாபிமான செயற்றிட்டமொன்றை உருவாக்கி அதனடிப்படையில் நிதியுதவிகளை வழங்கிவந்தது.

இந்தத் திட்டத்தில் சுகாதாம், கல்வி என ஒவ்வொன்றிற்கும் தேவை யான நிதி மதிப்பீடு செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

எனினும் இவ்வருடம் மார்ச் மாதம் இலங்கை அரசு இந்தத் திட்டத்தைக் கைவிடத் தீர்மானித்தது.

ஐ.நாவின் மனிதாபிமான அலுவலகத்தினால் மனிதாபிமான அமைப்புகளுக்கு நேரடியாக வழங்கப்பட்ட நிதியை எதிர்காலத்தில் ஜனாதிபதியின் சகோதரர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான ஜனாதிபதி செயலணி ஊடாகவே வழங்க வேண்டும் என அரசு தெரிவித்துவிட்டது.

'இலங்கையர்கள் ஐ.நாவின் தயவிலேயே வாழ்க்கை நடத்துகின்றனர். ஐக்கிய நாடுகளே அவர்களுக்கு உணவு மற்றும் உடையை வழங்குகின்றன - என்ற கருத்து நிலவுவது கவலையளிக்கின்றது' - என இலங்கையின் மனித உரிமை அமைச்சின் செயலாளர் ராஜீவ விஜயசிங்ஹ தெரிவித்தார்.

யுத்தம் மிகத் தீவிரமாக நடந்துகொண்டிருந்த காலத்தில் கூட அரசு உணவு வழங்கியது எனக் குறிப்பிடும் அவர், உரிய உணவை நாங்கள் வழங்குகிறோம் - என்றார்.

இலங்கையில் செயற்படும் ஐ.நா.வின் அமைப்பிற்கும் அரசிற்கும் இடையிலான உறவுகளில் காணப்படும் நெருக்கடியும் அரசின் இந்த முடிவிற்குக் காரணம் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்து தனக்கு ஆலோசனை வழங்குவதற்கான குழுவை நியமிக்கப்போகிறார் என ஐ.நா.செயலாளர் நாயகம் பான் - கீ - மூன் அறிவித்தபின்னர் ஐ.நா. அமைப்புகளுடனான இலங்கையின் உறவு மேலும் மோசமடைந்துள்ளது.

வடபகுதிக்கான தனது திட்டம் குறித்துத் தெரிவிக்கும் நீண்ட ஆவணங்களை ஜனாதிபதி செயலணி இந்த வாரம் வெளியிட்டுள்ளது.

மனிதாபிமானத் திட்டங்களிலிருந்து அபிவிருத்தியை நோக்கிச் செல்லவேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இது மிக நீண்ட - தெளிவற்ற - திட்டம். எவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்படவில்லை என்கின்றன ஐ.நா.அமைப்புகள். - இப்படி அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையுங்கள்!

## ஜனாதிபதியிடம் ஆனந்தசங்கரி மீள வற்புறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 02

மக்கள் மத்தியில் செயற்படும் ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களையுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி திரும்பவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கடிதம் மூலம் கோரியிருக்கின்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை வேட்பாளராக யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் ஆனந்தசங்கரி நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இவ் விடயம் தொடர்பாக அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

நம்மத்தியில் செயற்படும் ஆயுதக் குழுக்களிடம் உள்ள ஆயுதங்களைக் களையுமாறும் அவர்கள் விரும்பின் அரச பாதுகாப்பைஅவர்களுக்கு வழங்கலாம் எனவும் தங்களிடம் பல தடவைகள் கோரியிருந்தேன்.

என்னால் பல தடவைகளும் பொது மக்களால் இதிலும் கூடிய தடவைகளும் இத்தகைய கோரிக்கை விடப்பட்டபோதும், அதைச் செய்வதில் அரசு ஏன் தயக்கம் காட்டுகிறது என எனக்கு விளங்கவில்லை. ஆரம்பத்திலேயே நடவடிக்கை எடுத்திருப்பின் பல உயிர்களும் அரசின் நற்பெயரும் காப்பாற்றப்பட்டிருக்கும்.

இரு வாரங்களுக்கு முன் கப்பம் கேட்டுக் கடத்தப்பட்ட 17வயது மாணவன் ஒருவன் அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளான். சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டும் சிலர் தேடப்பட்டும் வருகின்றனர்.

போதிய சாட்சியமின்றி முன்பு குற்றவாளிகள் தப்பியமைபோல இந்த விடயத்திலும் குற்றவாளிகளைத் தப்ப விட்டுவிடக் கூடாது என்பதே எனது கவலை.

தயவுசெய்து முறைதவறி ஆயுதம் வைத்திருப்போரின் ஆயுதங்களை உடனடியாகக் களைவீர்களேயானால் அது எவ்வித பயமுமின்றி சாட்சிகள் முன்வந்து சாட்சியமளிக்க உதவும். முரண்படுபவர்களுடன் மோதவோ பயப்படவோ வேண்டியும் நேராது. - என்று உள்ளது. (அ-சி)

# மழை வேண்டி பதிகப் பாராயணம்

அகில இலங்கை திருமுறை மன்றத்தினரின் ஏற்பாட்டில் இந்து ஆலயங்களில் மழை வேண்டிப் பதிகப்பாராயணம் செய்யப்பட்டு வருகின்றது.

கடுமையான வெப்பத்தை தணித்து மழையை வேண்டி நடைபெறும் இந்த திருமுறைப் பாராயணத்தை ஆலயங்களில் மட்டுமல்லாது இல்லங்களிலும் பாராயணம் செய்து மழையை இறைஞ்சுமாறு அகில இங்கை திருமுறை மன்றத்தினர் கேட்டுள்ளனர்.

ஆலயங்களில் அடியார்கள் மேகராக குறிஞ்சிப் பண்ணில் அமைந்த நீலம்பதிகாரப் பதிகங்களை பாராயணம் செய்து வருகின்றனர்.

மன்றத்தில் பதிகங்களைப் பெற்று ஆலங்களிலும் வீடுகளிலும் பாராயணம் செய்யுமாறு மன்றத்தினர் கேட்டுள்ளனர். (ஒ-10)

# கால் கோல் விழா

அனலைதீவு சதாசிவ மாகவித்தியலத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் புதிய வகுப்பறை திறப்பு, மலர்வெளியீடும் எதிர்வரும் வைகாசி மாதம் நடைபெறவுள்ளன. இதற்கான கால்கோல் விழா எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## நாளை

பங்குனி 20 03.04.2010
சனிக்கிழமை

| | |
|---|---|
| திதி | : பஞ்சமி<br>பி.இ. 4.04 வரை |
| நட்சத்திரம் | : அனுஷம்<br>மு.இ.09.42 வரை |
| சுபநேரம் | : 03.10-04.40 வரை |
| ராகுகாலம் | : 09.10-10.40 வரை |

# சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்கிறது அரசு

## புதிய தேர்தல் முறைமையின் கீழ்

கொழும்பு, ஏப்.2

நாடாளுமன்றத் தேர்தலின் பின் தற்போதைய தேர்தல் முறைமை இல்லாதொழிக்கப்பட்டு சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் தொகுதிவாரித் தேர்தல் முறை கொண்டுவரப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்டு, உரையாற்றிய அமைச்சர் டளஸ் அழகப்பெரும இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

பயங்கரவாதம் என்ற புற்றுநோய் ஒழிக்கப்பட்டதுபோல், தற்போதைய தேர்தல் முறைமையும் ஒழிக்கப்பட்டு தொகுதிவாரித் தேர்தல் முறைமை கொண்டுவரப்படும்.

தொகுதிவாரித் தேர்தல் முறைமையின் கீழ் அனைவரது உரிமைகளும் பாதுகாக்கப்படும். குறிப்பாக, சிறுபான்மை இன மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பும் உரிமை இதன் மூலம் முற்றாகப் பாதுகாக்கப்படும்.

இந்தத் தேர்தல் முறைமையைக் கொண்டுவருவது நாட்டுக்கு நாம் செய்யும் பெரிய புண்ணியமாகும். இந்தப் பெரிய காரியத்தைச் செய்ய இந்த நாட்டு மக்கள் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்கவேண்டும்.-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 25 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டம் பெற்ற



செல்வன்

**தங்கராசா பிரசன்னா** (B.A.)

அவர்களை மேலும் பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

அம்மா, அப்பா, அத்தை, கேசவன்,
தங்கைகள்:பிரசாந்தி, பிரியங்கா (யாழ்.பல்கலைக்கழகம்),
பிறின்சிகா (தர்க்கா கல்வியியற்கல்லூரி),
சியாந்திகா (2012 A/L), மருமகன்: அக்ரயன்

அச்சுவேலி, தெற்கு.

## வீடு விற்பனைக்குண்டு

நல்லூர்க் கோயில் சுற்றாடலில் யாழ். மாநகரசபை எல்லைக்குள், முத்திரைச்சந்திக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட அழகான வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777432645

* எனது பக்கம் தரகர் தேவையில்லை.

## விற்பனைக்கு

40 kw ஜெனரேட்டர், y 30 லோடர் விற்பனைக்கு உண்டு.

தொ.பே. 0778118036

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைமாணி (B.A.) இந்து நாகரிகம் பட்டம் பெற்ற **சின்னராசா ரமணன்** அவர்களையும், நுண் கலைமாணி (B.F.A.) பட்டம்பெற்ற திருமதி **ஸ்கந்தராஜா பத்மலோஜினி** அவர்களையும் மனப்பூர்வமாக வாழ்த்துவதோடு இவர்கள் இருவரும் மென்மேலும் உயர் பட்டங்கள் பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்

என்றும் வாழ்த்துவோர்

**சி.சுரேஷ்குமார், ஜெயசித்திரா,**
**அஜித், அஜித்தா, கிருஷாந்தி**

மாவை கலட்டி,
தெல்லிப்பழை.

# வடமராட்சி மண்ணின் மைந்தன்
# எஸ்.எக்ஸ். குலநாயகம்

**நாலு தசாப்தங்கள் ( 40 ஆண்டுகள்)**
**அரசியல் வாழ்வில்**
**தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர்.**

**"குலம் - இனத்தின் சிறுமையைக் களைய உழைத்தவன்**
**தன் இல்லத்தின் வறுமையைப் போக்க நினைத்திலன்."**

**குலநாயகம் எனும் குணநாயகம்**

கனடாவில் இருந்து கனகமனோகரன் - பக்கம் 03



## இலங்கைத் தமிழரசுக் கட்சி

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

## எஸ். எக்ஸ். குலநாயகம்

X 12

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

# செல்லத்துரை புவனேஸ்வரி




திதி (அபர பட்ச சதுர்த்தி)

"எங்கள் குடும்ப விருட்சத்தைப் போற்றி வளர்த்து
அன்பின் அடித்தளமாய் அமைந்து, ஒளி விளக்காய்
எமக்கு வழிகாட்டி அன்போடும், பண்போடும்
பெருமையுடனும் எமைப் பேணிக் காத்து
எம்மை நல்வழி நடத்தி தெய்வத்துள் சரணடைந்த
எம் குடும்ப குலவிளக்கே!"

*ஆறுவதற்கு நீங்களில்லை அமைதியுண்டா சொல்லம்மா - எமை*
*நீங்கள் பிரிந்து செல்ல மனம் உங்களுக்கு வந்தது ஏனம்மா?*
*பேச வார்த்தை வரவில்லை பாவம் செய்த ஜென்மம் நாமோ?*
*தாயவளே வருவீர்களா? இல்லையெனில் துயர்தானே*
*நாதியற்று நாம் போனோம் நல்லவளே நீங்கள் எங்கே?*
*நலமின்றி நாம் வாழ முடியுமா சொல்லுங்கள் தாயே,*
*விதி உங்களை விளையாடியதா விடையெதுவும் தெரியவில்லையே,*
*வழியின்றித் தவிக்கின்றோம் விழிநீரைக் காணிக்கையாக்கி.*

இலங்கை, யாழ்ப்பாணம், 2ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் இலக்கம் 14, முதலாம் குறுக்கத்தெரு, ரெங்கநகர்(கே.கே.நகர்) திருச்சி தமிழ்நாட்டை வதிவிடமாகவும் கொண்ட எங்கள் தெய்வத்தின் பேரிழப்புச் செய்தி கேட்டு உடன் ஓடிவந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அம்மாவின் பிரிவால் வாடி நின்ற எங்களுக்கு நேரிலும் தொலைபேசியிலும் மின்னஞ்சல் மூலமும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி சுவரொட்டியும், கண்ணீர் அஞ்சலி பிரசுரமும் வெளியிட்டோருக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும், மலர் வளையங்கள், மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும் அம்மாவின் திருச்சி வீட்டிற்கும் ஏனைய பிள்ளைகள் வீட்டிற்கும் சுவிஸிலும், வெளிநாட்டிலும், இலங்கையிலும் தெய்வத்தின் உறவினர்களின் வீட்டிற் கும் நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் நாம் செய்வ தறியாது திகைத்துப்போயிருந்த வேளையில் எமக்கு உணவு தந்து, தேநீர், மென் பானங்கள் வழங்கி உதவிகள் செய்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும்.

அன்னையின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் இறுதிச்சடங்கு நடைபெற உதவி செய்து "ஓயாமாரி" மயானம் வரை வந்து அன்னையின் உடல் தீயுடன் சங்கமமாகும் வரை, இறுதி வரை இருந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், வாகன வசதிகள் செய்த அனைவருக்கும் -

அன்னை, மருத்துவமனையில் இருந்தபோது பகல் இரவு பாராது எங்கள் தேவை அறிந்து ஓடி, ஓடி உதவியவர்களுக்கும் நாங்கள் அறியாவண்ணம் எங்களுக்குத் தெரியாமல் பல உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் 01.04.2010 இல் இராமேஸ்வரத்தில் சபிண்டீகரணக் கிரியைகள் நடைபெற்று இன்று(02.04.2010) வெள்ளிக்கிழமை திருச்சி வீட்டில் இடம்பெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளு மாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்)

ஈரவிழிகளுடன்...
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், உற்றார்,**
**உறவினர், நண்பர்கள்**

(சி/506364)

*தொடர்புகளுக்கு:-*
ந.புனிதாம்பிகை(புனிதா -மகள்)
00914312351967
ஜெ.சுமன்(பேரன்)
00919894192134

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கொமர்ஷல் வங்கியின் "அருணலு" சிறுவர் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்து தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நேற்றுமுன்தினம் யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை முதற்படத்திலும், வங்கிக்கிளை முகாமையாளர் ஏ.எம்.ஏ.குபேரகுலேந்திரன், இடைக்காடு மகா வித்தியாலய அதிபர் ஏ.அருந்தவபாலன் ஆகியோர் உரைநிகழ்த்துவதை முறையே இரண்டாம், மூன்றாம் படங்களிலும் சித்திபெற்ற மாணவி ஒருவருக்கு வங்கிக்கிளை முகாமையாளர் பரிசில் வழங்குவதை நான்காவது படத்திலும் பரிசில் பெற்ற மாணவர்களையும் வங்கி அதிகாரிகளையும் இறுதிப் படத்திலும் காணலாம்.
(படங்கள்: சுகந்தன்)



## கலாசாரப் போட்டியில் தேசிய விருது

வண்ணை, ஏப்.2

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 2009 ஆம் ஆண்டில் நடத்திய இளைஞர் தேசிய விருது வழங்கலுக்கான கலாசாரப் போட்டியில் மாவட்ட தேசிய மட்டங்களில் சிறுகதைப் போட்டியில் முதலிடத்தை குருநகரைச் சேர்ந்த செல்வி மரியாம்பிள்ளை எலிஸ் ஏன்ஜெல்ஸ் பெற்றுக்கொண்டார்.





தேசிய விருது வழங்கல் நிகழ்வு அண்மையில் மகரகம தேசிய இளைஞர் மன்றத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி புனித திரேசா பாடசாலை ஆசிரியரான இவர், கவிதை, கட்டுரை மற்றும் இலக்கியத்துறைகளிலும் மிகுந்த ஈடுபாடுகொண்டவர். (ஒ-160)

பாராளுமன்றத் தேர்தல் 2010
யாழ் மாவட்டம்

—உங்கள் மத்தியில் நான் ஒரு புது முகம் எனக்குத் தேவை உங்கள் அறிமுகம்

தனித்துவத்துடன்
மக்கள்
சேவையை
நோக்கி.........





# குடாநாட்டில் மீண்டும் டெங்கு; அவதானமாக நடக்குமாறு அறிவுறுத்து

## ஒரு பெண் உயிரிழப்பு; நாளாந்தம் நோயாளர் அனுமதி

யாழ்ப்பாணம், ஏப்.2

குடாநாட்டை மீண்டும் அச்சுறுத்தத் தொடங்கியுள்ளது உயிர்க்கொல்லி நோயான டெங்கு. கடந்த இரண்டொரு மாதங்கள் டெங்கு நோயின் தாக்கம் தணிந்திருந்த போதும் மீண்டும் அது விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியுள்ளது.

நேற்று முன்தினம் வரணி, மாசேரியைச் சேர்ந்த இளம் பெண்ணான எஸ்.சுஜித்தா (28 வயது) என்பவர் உயிரிழந்துள்ளார். நோய்ப் பாதிப்புக்குள்ளான நிலையில் அவர் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தபோதும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழக்க நேரிட்டது.

இவ்வாறான மரணங்கள் தொடராமல் தடுக்க, நோய்த் தாக்கத்துக்கு உள்ளாவோர் உடனடியாக உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று மருத்துவ வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன.

இதேவேளை, கடந்த ஜனவரியில் இருந்து மூன்று மாதங்களில் 15பேர் டெங்குக்குப் பலியாகி இருந்த போதும் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மரணத்தை அடுத்து அந்த எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது என்று யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது நாளாந்தம் ஐந்துக்கும் மேற்பட்ட டெங்கு நோய்த் தாக்கத்துக்கு ஆளானவர்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும்-

கடந்த ஜனவரி மாதம் 13 பேரும், மார்ச் மாதம் 3 பேரும் உயிரிழந்துள்ளார்கள் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதே வேளை, சுற்றுப்புறச் சூழலைப் பேணி நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளையும் பொது மக்கள் எடுக்க வேண்டும் என்று சமூகநலன் விரும்பிகள் அறிவுறுத்துகின்றனர்.

(ஒ-9)

## முட்டாள் தினத்தில் நேற்று முட்டாள்களின் செயல்கள்....!

யாழ்ப்பாணம், ஏப்.2

முட்டாள்கள் தினமான நேற்று யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் குறிப்பிட்ட சிலர் முட்டாள்தனமான காரியங்களில் ஈடுபட்டு பொதுமக்களுக்குப் பெரும் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளன.

நந்தாவில் அம்மன் கோயிலுக்கு முன்னால் செல்லும் வீதியில் கழிவு எண்ணெய்யைச் சிலர் ஊற்றிவிட்டுச் சென்றதால் அவ்வழியே மோட்டார் சைக்கிளில் சென்ற பலர் வழுக்கி வீழ்ந்து காயமடைந்துள்ளனர். தலைக் கவசம் அணிந்திருந்ததால் உயிராபத்துக்கள் ஏற்படவில்லை.

யாழ்.நகர்ப் பகுதியிலும் பாடசாலைக்குச் சென்ற மாணவ, மாணவிகளின் சீருடைகள் மீது நீல நிறத் திரவத்தினால் குளிப்பாட்டப்பட்டுக் காணப்பட்டனர்.

இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் வீடு திரும்பினர்.

இதைப்போன்று பல சம்பவங்கள் முட்டாள்கள் தினம் என்ற பெயரில் நிகழ்ந்துள்ளன.

யாழ்.மண்ணில் பண்பாடு, நாகரிகம், ஒழுக்கம், மனிதத்துவம் என்பன மெல்ல மெல்ல செத்துக்கொண்டிருப்பதையே இச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுவதாகப் பலரும் வேதனையுடன் தெரிவித்தனர்.

(ஒ-க)

### இரணைமடுக் குளத்து நீரைக் கொண்டு

# யாழ்.மாவட்டம் முழுவதற்கும் குடிதண்ணீர் வழங்குவதற்கு முழு முயற்சி எடுத்துள்ளேன்

### குழாய் நீர் விநியோகத் திட்ட ஆரம்ப நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஏப்.2

கிளிநொச்சி-இரணைமடுக் குளத்து நீரை முழுமையாகப் பயன்படுத்தி யாழ்.மாவட்டம் முழுவதற்கும் முழுமையாக குடிதண்ணீர் வழங்குவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுத்துள்ளார்கள்.

இத்திட்டத்தை விரைந்து நடத்தி முழுமை அடையச் செய்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எனக்கு உறுதியளித்துள்ளார்.

சமூக சேவைகள் சமுகநலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

நவாலி வடக்கு குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு ஹேமலதா ஞாபகார்த்த நிறுவனத் தலைவர் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நவாலி வடக்கு, தேத்தா மரத்தடி ஞானவைரவர் ஆலயத்தில் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாநகர சபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் இணைந்து குடிதண்ணீர் திட்டத்தைத் திறந்து வைத்தனர். இந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்த விருந்தினர்கள் அனைவரும் மாலை அணிவித்து வீதி வழியே அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வில் சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்:

கடந்த பல ஆண்டுகளாக மக்களுக்காக சேவையாற்றி வருபவன் நான்.அமைச்சுப் பதவியை ஏற்ற நாள்முதல் இன்றுவரை சகல பிரதேச மக்களின் கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர்,வேலைவாய்ப்பு மற்றும் அனைத்து விடயங்களிலும் முழு மூச்சுடன் செயற்பட்டு வருகின்றேன் -என்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நூற்றாண்டு விழா காணும் நவாலி மகாவித்தியாலய அபிவிருத்திக்கு "2லட்சம் ரூபா" நிதிக்கான காசோலையை அதிபர் இரா. வசந்தகுமாரிடம் கையளித்தார்.

தொடர்ந்து வடக்கு மாகாண தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உதவிப் பொதுமுகாமையாளர் எந்திரி.தி.பாரதிதாசன் பேசுகையில்:

சுன்னாகம், பொக்கணையூடாக நவாலி வடக்கு மக்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குகின்றோம். விரைவில் இரணைமடுக் குளத்து நீரை அமைச்சரின் உதவியுடன் குடாநாடு முழுவதும் வழங்கவுள்ளேன்- என்றார்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் உரையாற்றுகையில்:

நூற்றாண்டு காலமாக குடிதண்ணீர் பிரச்சினை நவாலி மக்களுக்கு உள்ளதை நான் அறிவேன்.பிரதேச சபையால் ஏனைய பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படுகிறது.

இன்று நவாலி மக்களுக்கு குடிதண்ணீர் குழாய் மூலம் கிடைப்பது மகிழ்ச்சி தரும் விடயம்- என்றார்.

இறுதியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் எந்திரி தி.பாரதிதாசனும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். (ஒ-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணவில்லை



கொழும்பில் தனியார் வைத்தியசாலையில் தொழில் பார்க்கும் சுதுமலை தெற்கு, யூதா கோயிலடி, மானிப்பாயைச் சேர்ந்த அன்னா செல்வராசா சுபாஷினி வயது 21, வெள்ளை நிறம், நடுத்தர உயரமும் மெல்லிய தோற்றமும் உடையவர்.

கடந்த 28.03.2010 ஞாயிறு அன்று யாழ். வைத்தியசாலையில் இருந்து புறப்பட்டவரைக் காணவில்லை. [குங்குமக் கலர் புள்ளியிட்ட வெள்ளைப் பஞ்சாபியுடன்] இவரைக் கண்டவர்கள், தகவல் தெரிந்தவர்கள் மேற்படி விலாசத்தில் அல்லது 0774214940 இலக்கத் தொலைபேசியில் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

யூதா கோயிலடி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய். [96251]

தேவசகாயம் அன்னா செல்வராசா
[தந்தை].

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. அ. பொன்னையா அவர்கள்
(மானிப்பாய் வடக்கு)

*(Ex. Tea Maker, Upper Balagalla Estate)*

உரிமையாளர், "*Your Shop*", மானிப்பாய்

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் பண்புள்ள உள்ளத்தை
எம்மால் மறக்கவே முடியாது. உங்கள்
ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

135/5 A, ஸ்ரீ சரணங்கரா வீதி, தெகிவளை Tel: 0722 447608

### 50 மைல் தூர சைக்கிள் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப் 2

யாழ்ப்பாணம் கிறீன் கிங்ஸ் சன சமூக நிலையத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் 50 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(201)

### ஈஸ்வரனின் இடத்திற்கு புத்தரும் வந்தார்!

ஒட்டுசுட்டான், ஏப் 2

வன்னியில் கற்சில மடுவில் தான் தோன்றிஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள இடத்தைத் துப்புரவு செய்து, அந்த இடத்தில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

வன்னியில் இவ்வாறு பல்வேறு இடங்களிலும் திடீர் திடீரெனப் புத்தர் தோன்றி வருகின்றார்.

அந்த மண்ணில் தமிழர்களின் பாரம்பரிய நினைவுச் சின்னங்கள், பழமை வாய்ந்த ஆலயங்கள் அழிக்கப்பட்டு விடுமோவென்று அங்குள்ளவர்கள் கலக்கமடைந்துள்ளனர்.

(ஒ-341)

## அவனின்றி அணுவும் அசையாது என்பதை உணர்வோம்

உலக வாழ்வின் அநித்தியத்தை ஒருவன் உள்ளவாறுணர்ந்து அதற்கேற்ப ஒழுகி உண்மை ஞானம் உதிக்கப்பெற்றால் துக்கம் நீங்கி மன அமைதியும் சந்தோஷமுமடைந்து உய்வான் என்பதற்கு ஐயமில்லை. அறிவின்மை காரணமாக நம்மவருள் அநேகர் சிறிது நேரத்திற்கு மாத்திரம் இன்பந்தரக் தக்கவைகளை இடைவிடாது இயன்ற மட்டும் தேடி அடைந்து அனுபவிப்பதற்கு படுங்கஷ்டம் கொஞ்சமல்ல. நிலையுள்ள இன்பத்தை நாடி நீங்காத அன்புடன் எம்பெருமானை நினைப்பவர்களுடைய தொகை மிகவும் சிறிதாயிருப்பதால் இவர்களுடைய சொல், செயல், சிந்தனை முதலியவைகளைப் பார்த்து நகைப்பவர்களுக்கு மிகவும் வசதியாயிருக்கிறது. ஆனால் கடைசியாய் உண்மையும் நன்மையேயன்றி வேறொன்றும் நிலையுறாது என்பது நிச்சயம்.

ஞானக்கதிர்

நாம் நற்கதியடைய விரும்பினால் இப் பிரபஞ்சத்தில் ஏன் வந்து பிறந்திருக்கிறோம் என்பதை முதலில் ஆராய்ந்தறிதல் வேண்டும். அப்படிச் செய்து பிறவியின் நோக்கத்தை அறியும் வரையும் பிழையான வழியிலிருந்து விலகிப் பெருமானைப்போற்றிப் பெறற்கரும் பேறு பெறுதல் முடியாத காரியம். திருவருளைத் தந்து இரட்சிக்கும்படி சிவபெருமானைக் கேட்பதைவிட்டு மனைவி, மக்கள், காணி, பூமி முதலியவைகளை தரும்படி கேட்க நம்முடைய மனம் எப்பொழுதும் நம்மை ஏவினபடி இருப்பது இயல்பு. அழியும் பொருள்களில் ஆசைவைத்து அவற்றைப் பெறுவதன் பொருட்டு அல்லலுறாதிருப்பது இலகுவான காரியமல்ல. பிறக்கும்பொழுது ஆடை, ஆபரணம் முதலியவைகளின்றி எப்படி இவ்வுலகில் உதித்தோமோ அவ் வண்ணமே இறக்கும் பொழுதும் இருப்போம். என்னும் எண்ணம் எப்பொழுதும் நம்மிடத்திலிருத்தல் வேண்டும். நாம் பாடுபட்டுதேடும் பணம் முதலியவைகள் எல்லாம் உண்மைப் பயனை நல்காதென்பதை ஊன்றி உணர்ந்து பரம்பொருளை மாத்திரம் பற்றும் பழக்கம் மனதிற் பதிதல் வேண்டும்.

## நனைந்த விழிகள் ஏங்க ஓராண்டு.......



செல்வி வேணுரேகா
திரவியம்
(திதி: பங்குனி அபரபக்க சதுர்த்தி)

பிறப்பு 25.07.1984

இறப்பு 13.04.2009

பெற்றெடுத்த தாயினும் பெரியதாக
அன்புகாட்டி அரவணைத்தே
பிரியமாகப் பேணியே வளர்த்த தாய்
அன்னபாக்கியம் கனடாவில்
மனம் பேதலிக்கவே
புண்ணியம் பலபுரிந்த புனிதமாகவே
பேர்வாங்க வேண்டுமென்று
எண்ணியே வளர்த்த
தந்தையும் கலங்க
கண்ணியம் கொண்ட அண்ணா
கனடாவில் எதிர்காலம் கொண்டேங்க
நந்தா விளக்கணைய ஏன்
சென்றாய் என அக்கையும் ஏங்க!
எக்கணமும் பிரியாது வணங்கும்
எங்கள் குல தெய்வங்கள் தான்
வேணுரேகாவை பார்த்தருள் தாரும்!!!

குடும்பத்தினர்.

தோட்டத்துவளவு,
வதிரி, கரவெட்டி.

(96289)

## எமது பாசமிகு யாழ்.மாவட்ட வாக்காளப் பெருமக்களே!

## உங்களிடம் எமது அன்பான வேண்டுகோள்



1 பெரியண்ணன் (ஜோண்)



5 மகாலிங்கம் (மகாமினி)



7 தங்கவேலு



3 அராலி சந்திரன் (பகீரதன்)



9 கோணேஸ்வரன்



10 நீர்வேலி செல்வம்



8 அரியரட்ணம் (அரியம்)



11 சிவா (சிவநாதன்)

மெழுகுவர்த்திக்கே உங்கள் வாக்கு. கடமை, கண்ணியம், நேர்மை, மனவுறுதி, துணிச்சல், தியாகம், கடின உழைப்பு ஆகியவற்றை ஒருங்கே கொண்ட எமது வேட்பாளர்களுக்கே உங்கள் வாக்கு.

- ★ தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாக்கவும்
- ★ மாகாண ஆட்சிக்கு சுயநிர்ணய அதிகாரங்களைப் பெறுவதற்கும்
- ★ வடக்கு - கிழக்கில் நிலவும் இராணுவ ஆட்சியை நீக்கி குடிமக்கள் ஆட்சியை நிலை நாட்டவும்
- ★ வடக்கு - கிழக்கில் கடத்தல்கள், பயமுறுத்தல்கள் கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும்
- ★ வடக்கு - கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் வளமான வாழ்க்கைக்காகவும் அயராது உழைப்போம்.




6 ஸ்ரீதரன் (தோழர் சுகு)



12 ரவி (தங்கராசா)

போடுங்கள் புள்ளடி மெழுகுதிரிக்கே





2 மோகன் (சிவராசா)



4 கங்கா (ஜெயக்குமாரன்)

(96296)

## பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சுவேலியில் 'மக்கள் சேவை நிலையம்' திறந்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அரச அதிபர் கே.கணேஸ் நிலையத்தை நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மேகன்றாஸ் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் நிற்பதையும் முதல் இரு படங்களில் காணலாம். இறுதிப்படத்தில் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களும் நிலைய ஊழியர்களும் காணப்படுகின்றனர்.

# இடம்பெயர்ந்த 22 ஆயிரம் குடும்பங்களுக்கு இதுவரை ரூபா 25ஆயிரம் கொடுப்பனவு

## யாழ். அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.2

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 22 ஆயிரம் குடும்பங்களுக்குத் தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார். நிக்கொட் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள இந்த வாழ்வாதாரக் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்ட பயனாளிகள் இச்சிறுதொகை மூலம் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முயற்சிகளை ஆரம்பித்து வாழ்வில் ஓர் அடியாவது முன்வைப்பதற்கு முழுமுயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்றும் அரச அதிபர் சம்பந்தப்பட்டவர்களையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அரச அதிபர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக ஆஸ்ரேலிய நாட்டின் நிதி உதவியுடன், வன்னியிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவு தொகை வழங்க ரூபா 550 மில்லியன் நிகொட் திட்டப் பணிப்பாளர் மூலமாகக் கிடைக்கப்பெற்றது. இந்நிதியில் 15 பிரிவுகளின் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்களின் சிபார்சுகளின் பிரகாரம் தகுதியான 22 ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 25ஆயிரம் ரூபா வழங்கும் அனைத்து செயற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன என்பதை அறியத்தருகிறோம்.




இக்கொடுப்பனவைப் பதினைந்து நாள்களுக்குள் வழங்குவதற்கு சகல உதவிகளையும் நல்கிய அனைத்துத் தரப்பினருக்கும் இக்கொடுப்பனவு நடவடிக்கைகளில் பங்களித்த சகலருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.- என்றார். (ஒ-16)

### வலி.கிழக்குப் பிரதேச சபையின்

# வாசிப்பு மாத பொது அறிவுப் போட்டி; கூடுதல் புள்ளிகள் பெற்று பரிசுபெறுவோர்

அச்சுவேலி,ஏப்.2

வலி.கிழக்குப் பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர் மத்தியில் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் கூடிய புள்ளிகளைப் பெற்று பரிசில் பெறுவோர் பெயர், விவரம் அறிவிக்கப்பட்டள்ளது.

**கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் - ச.பொன்மாறன் (அச்சுவேலி மத்திய கல்லூரி), இரண்டாம் இடம் - ச.தனுசியா(அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் - சி.சுவர்ணா (அச்சுவேலி புனித திரேசாள்)

**ஆறுதல் பரிசு**

ந.கோகுலராஜ்(இடைக்காடு ம.வி), ப.சரவணன்(அச்சுவேலி ம.க), சி.குஜின்லா (அச்சுவேலி புனித திரேசாள்).

**மேற்பிரிவு**

முதலாமிடம் - இ.கஸ்தூரிராஜன் (அச்சுவேலி ம.க), இரண்டாமிடம் - ச.பிறின்சலா (அச்சுவேலி புனித திரேசாள், மூன்றாமிடம் - ந.தக்சனா(அச்சுவேலி புனித திரேசாள்)

**ஆறுதல் பரிசு**

கே.ஜெஸ்வின் நிவேதா - (அச்சுவேலி புனித திரேசாள்), செ.தனுஸன்(அச்சுவேலி ம.க.), கு.தர்சிகா(அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை)

(ஒ-11)

# குளங்களைத் தோண்டி கால்நடைகளுக்கு நீர்!

சாவகச்சேரி,ஏப்.2

தென்மராட்சிப் பகுதியில் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் கடந்த திங்கள் சுமாரான மழை பெய்தது.

கால்நடைகளுக்கு குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. வரணிப் பகுதியில் குளங்களில் நீர் வற்றி வரட்சி நிலவுகிறது.

கால்நடைச் சொந்தக்காரர்கள் குளங்களின் நடுவே நிலத்தைத் தோண்டி ஆழப்படுத்தி நீரை ஊறச் செய்து கால்நடைகளின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-131)


தேர்தல் - 2010 (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA)

* பாதுகாப்பு என்ற போர்வையில் மூடிக் கிடக்கின்ற தமிழர் பிரதேசங்களை மீளவும் மக்களிடமே மீட்டுத்தரப் போராடுவோம்.
* மூன்று தசாப்தகால யுத்தத்தைக் காரணங்காட்டி தடைப்பட்டுப்போன அபிவிருத்தித் திட்டங்களையும் புதிய திட்டங்களையும் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ள வழிவகுப்போம்.
* பெரும் நெருக்கடிக்குள் சிக்கியுள்ள உள்ளூர் உற்பத்திகளை நவீன முறையில் சீரமைத்து, ஊக்குவித்து அவற்றுக்கான சர்வதேசச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவோம்.
* படித்து முடித்த பின்னும், தகுதியிருந்தும், வேலை தேடும் படலத்திலேயே தம்மைத் தொலைத்து நிற்கும் இளைஞர்,யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முன்னிற்போம்.



உங்கள் விருப்பு வாக்கை இலக்கம் 6 இற்கு அளித்து என்னை அமோக வெற்றியடையச் செய்யுங்கள்.

X

இலங்கைத் தமிழரசுக் கட்சி

உதயன் நிர்வாக இயக்குநர்

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

தொழிலதிபர் ஈ.சரவணபவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சலமோன் அந்தோனிப்பிள்ளை

மண்ணில் 10.07.1924
விண்ணில் 02.04.2006

"சுமை சுமந்து சோர்ந்திருப்போரே
என்னிடம் வாருங்கள்"
ஆண்டுகள் நான்கு கடந்தாலும்
ஆறவில்லை உன் நினைவு
மறுபடியும் உன் பூமுகம் காண
மனம் ஏங்குதையா?
வாழ்வில் எம்முடன் வாழ்ந்து
மடிந்துபோன ஐயாவின்
ஆன்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்.

இல.58, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 0212229361

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(96273)

# வீடு வாடகைக்கு

இல.20, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 10 அறைகள் கொண்டதும் குளியல், கழிவறை வசதிகளுள்ளதுமான மேல்மாடி வீடு உடன் வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு, விடுதிக்கு மிகவும் உகந்தது.

தொடர்புகளுக்கு:
T.P:0776613901

# முகாமைத்துவ வேலை வாய்ப்பு

கனேடியன் கிளை நிறுவனமொன்றிற்கு யாழ்.மண்ணில் முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை.

தகைமை: G.C.E.O/L, G.C.E.A/L

தொடர்புகளுக்கு:-
021-4900350
021-4900001
021-4905001

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## சுப்பிரமணியம் இராஜேந்திரன்

[வலி.மேற்கு பிரதேசசபை ஊழியர்; சுழிபுரம்]

தோற்றம் 13.07.1962
மறைவு 02.03.2006

சுழிபுரம் வழக்கம்பரை சிவபூமி
இல்லத்தில் அன்னதானம் வழங்கப்படும்.

இ.மோகன்,
சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி.
(96245)
மனைவி: இ.நந்தி.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## காசிப்பிள்ளை கந்தையா

திதி: சங்கடஹர சதுர்த்தி
(02.04.2010)



தோற்றம் 16.03.1932
மறைவு 14.03.2009

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகி விட்ட
எமது அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மாரீசன்கூடல்,
இளவாலை.
(96282)

# கண்ணீர் அஞ்சலி

இக்கட்டான காலகட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலைக் கூடாகவும் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, இணுவில் மக்லியோட் வைத்தியசாலைக் கூடாகவும் சத்திர சிகிச்சை சேவையைத் திறம்படச் செய்து கொண்டிருக்கும்
Dr.M. சிவகுமார்,
பொதுச்சத்திர சிகிச்சை நிபுணர் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி முருகுப்பிள்ளை கற்பகநாயகம்** அவர்கள்

ஆண்டவன் அடியில் சேர்ந்ததையிட்டு மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை இணுவில், மக்லியோட் வைத்தியசாலைச் சமூகம் மிகவும் ஆழ்ந்த கவலையைத்தெரிவித்துக்கொண்டிருக்கிறது. அன்னாரின் இழப்பால் துயரப்படும் குடும்பத்தினர் யாவரும் அறுதல் அடைய இறைவனை வேண்டிக் கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவன் அருள்புரிவார்

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை,
இணுவில் மக்லியோட் வைத்தியசாலைச் சமூகம்.

(96242)




யாழ்ப்பாணம், ஏப் 2

சாவகச்சேரி நுணாவில் மேற்கு, கொல்லன்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை அகில இலங்கை கலாசார சபையின் 'சொல்லின் சிகரம்' பட்டி மன்றம் பொன் சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (204)

* * *

யாழ்ப்பாணம், ஏப் 2

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

* * *

யாழ்ப்பாணம், ஏப் 2

பண்டாரக்குளம் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (204)

## ஆன்மீக ஒன்றுகூடலும் சாது சங்கமும்

யாழ்ப்பாணம், ஏப்2

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியின் ஏற்பாட்டில் ஆன்மீக ஒன்று கூடலும், சாது சங்கமும் இன்று வெள்ளிகிழமை பிற்பகல் 4 மணிக்கு மானிப்பாய் வீதியிலுள்ள சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் 'குரு தேவரைச் சரணடைவோம்' என்னும் தலைப்பில் ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தஜி மகராஜ் ஆன்மீக உரை நிகழ்த்தவுள்ளார். (204)

## 144 மீனவர்களுக்கு வலைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப் 2

குருநகர் துறையூர்ப் பகுதி கடற்தொழிலாளர்கள் 144 பேருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீன்பிடி வலைகளை வழங்கினார்.

கடந்த 30 ஆம் திகதி குருநகர் பகுதியில் அமைந்துள்ள வடகடல் நிறுவனத்தில் கடற் தொழிலாளர் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தர்மலிங்கம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் வைத்து அமைச்சர் இந்த மீன்பிடி வலைகளையும் கையளித்தார். (ஓ-23)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 * 12 * 1935



மறைவு 19 * 03 * 2006

## அமரர் மாணிக்கம் பாலசிங்கம்

கதிரவன் ஒளிரமுன் கண்விழித்தெழுந்து
எதிலுமே நெறியோடு ஏற்றாய் உழைத்து
பதிதனில் எமையே புகழுற வைத்த
உதிரத்தில் உறைந்த உறவினை மறப்போமா?

என்றும் நினைவுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வீரபத்திர கோயிலடி,
வியாபாரி மூலை.

(இ/566346)

# மரண அறிவித்தல்கள்

## இராமர் செல்லையா

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய ஊழியர்)



தில்லையம்பதி கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கு; உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட இராமர் செல்லையா நேற்று முன்தினம்(31.03.2010) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான இராமர்-சின்னக்குட்டி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான நன்னித்தம்பி- செல்லம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ் சென்ற சின்னம்மா மற்றும் இரத்தினம்மா, காலஞ்சென்ற கனகம்மா ஆகியோரின் சகோதரனும், மகேந்திரம்(கனி-டென்மார்க்), யேந்தி, கெங்கேஸ்வரன் (சிவா- டென்மார்க்), கங்கேஸ்வரி( டென்மார்க்), கெங்கேஸ்வரி (லதா-நோர்வே), சோபனா(நியூசிலாந்து), விக்கினேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராணி(டென்மார்க்), பிறேமதயாளன்(ரகு-சாரதி,இலங்கை போக்குவரத்துச் சபை), விஜி (டென்மார்க்),சௌந்தரம் (டென்மார்க்), பாலச்சந்திரன் (டென்மார்க்), மேனன்(நியூசிலாந்து), சிவாஸ்கர்(கனடா) ஆகியோரின் மாமனும்,அஜந்தன், சாரகாஜினி(டென்மார்க்), ஜெதுகுலன், சுஜித்துவன்(மாணவர்கள் புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்), யூலியா, அனிக்கா, அலெக்ஷியா (டென்மார்க்), கிருஷாந், அபிஷாந் (டென்மார்க்), லுவின்(நியூசிலாந்து), சிவஞ்சன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(02.04.2010) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (96279)

## ஆசைப்பிள்ளை தியாகராசா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நெட்டிலிப்பாய், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை தியாகராசா 31.03.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில். (96278)


CSC®
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION




வெள்ளிவிழா

75% நேரடி ஸ்கொலர்சிப் விசேட சிறப்புச் சலுகை

- Office Application
- Web Design & development
- Adv. Digital Pre-Press
- Digital Video Production
- Adv. Java Programming
- Tally Accounting Training
- Hardware & Networking
- Computer Graphic Design

ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P: 021-3734088


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச படைகளும் விடுதலைப் புலிகளும் கட்டுப்பாட்டுடன் செயற்படவேண்டும்

முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு அண்மையில் இராணுவம் மேற்கொண்ட ஷெல் தாக்குதலால் ஒன்றரை வயது குழந்தையைப் பலி கொண்டதோடு 18 அப்பாவிப் பொது மக்களும் படுகாயமடைந்துள்ளனர். அதைத் தொடர்ந்து இடம் பெற்ற இன்னுமொரு சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டதாகவும், சில வீடுகள் சேதத்துக் குள்ளானதாகவும் அறிய வருகிறது. இதேபோன்ற சந்தர்ப்பத்தில் ஒரு குழந்தையை அல்லது தமது உறவினர் ஒருவரை இழப்பவர்களாலேயே இந்த இழப்பின் வேதனையை உணர முடியும்.இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் யார்? விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அகப்பட்டுக் கொண்டார்கள் என்பதைத் தவிர இவர்கள் சமூகத்திற்குச் செய்த குற்றம் என்ன? இவ்வாறு துன்பப்படும் மக்களின் துன்பத்தைப் போக்கி நிம்மதிப் பெருமூச்சு விட வைக்க முடியாவிட்டால் நாம் பௌத்த தர்மத்திற்கு கட்டுப்பட்டு வாழ்கிறோம் என்று எவ்வாறு கூறமுடியும்? எது நடப்பினும் யுத்தம் தொடர வேண்டுமென்று வாதாடுகின்றவர்கள் இன்றும் நம் நாட்டில் வாழ்கின்றார்கள். இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தொடர்ந்தும் முட்டுக்கட்டையாக இருப்பவர்களும் அவர்களே.

துரதிஷ்டவசமாக நம் நாட்டின் நிலைமை இதுதான். இந்த நாட்டையும் அந்த நாட்டின் மக்களையும் நேசிக்கும் நாட்டுப்பற்றாளனாகிய நான் ஓர் உயிரைத்தன்னும் வீணாக இழக்க விரும்பவில்லை. நம் நாட்டில் சரியாக கணிப்பிடின் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளார்கள். அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடக்கின்ற இந்த யுத்தத்தில் 50 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் வடகிழக்கில் இடம் பெயர்ந்து பல துன்பங்களை அனுபவித்துள்ளனர். முறையான உணவு, உடை,இருப்பிடம், சுகாதார வசதி அன்றி வாழ்வதோடு தமது சொத்துக்களை முற்றாக இழந்தும் உள்ளனர். இவர்கள் அனைவரும் அப்பாவிப் பொதுமக்களே. விடுதலைப் புலிகள் தமிழ் மக்கள் அனைவரையும் ஒரு சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்றதுபோல் ஆகிவிட்டது. இன்று தாம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது என நன்கு அறிந்தும் உண்மை நிலையை நேர்மையாக மக்களுக்கு தெரிவித்து ஒருதலைப்பட்சமாகவேனும் யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி, ஆயுதங்களை கைவிட்டு, ஜனநாயக பாதைக்குத் திரும்ப வேண்டும். அதேபோன்று அரசும் செயற்பட்டு விமானத் தாக்குதலை கட்டுப்படுத்த வேண்டும். விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுடன் செயற்படாத பட்சத்தில் அவர்கள் இழப்பதற்கு எதுவும் இல்லை. ஆனால் அரசாங்கம் தம் மக்கள் எப்பகுதியில் வாழ்ந்தாலும் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கத் தவறுமேயானால் அரசாங்கம் தனது மதிப்பை இழந்துவிடும்.

மிக விரைவில் கிளிநொச்சியிலும் மக்கள் இடம் பெயர வேண்டிய நிலைமை உருவாகும்.ஏற்கனவே பல்வேறு இடங்களில் இடம்பெயர்ந்த மக்கள் பலாத்காரமாக கிளிநொச்சிப் பகுதிக்கு அனுப்பப் பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான இடம் பெயர்ந்தவர்களுக்கு தங்குமிடம், உணவு, சுகாதார வசதி ஆகியவை செய்யப்பட வேண்டும். அதேவேளை விடுதலைப் புலிகள் தமது இரும்பு கதவைத் திறந்து மக்கள் தம் இஷ்டம் போல் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு பிரவேசிக்க அனுமதிக்க வேண்டும். குடாநாட்டில் இருந்து வன்னியில் பலாத்காரமாகக் குடியேற்றப்பட்டவர்கள் அனுமதி வழங்கப்பட்டால் தம் சொந்த வீடுகளுக்கே திரும்பிச் செல்லும் வாய்ப்பு உண்டு.

அதேபோன்று அரசும் விடுதலைப் புலிகளின் பிரதேசத்திலிருந்து தப்பி வரும் மக்கள் தமது பகுதியை வந்தடைய ஏதுவாக ஆதரித்து உதவ வேண்டும்.

ஆகவே யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு பகுதியினரும் கட்டுப்பாட்டுடன் செயல் பட வேண்டும். இக்கட்டான இக் கட்டத்தில் சில தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கள் வெளிநாடு செல்வதற்கும் தொடர்ந்து பிறநாட்டில் சுற்றுலா செய்வதற்கும் ஏதுவாக அண்மையில் நாடாளு மன்றத்தில் மூன்றுமாதகால விடுமுறை கேட்டுப் பெற்றமை கண்டிக்கப்பட வேண்டும்.


*(தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி வன்னியில் போர் தொடங்கிய பின்னர் வெளியிட்ட பத்திரிகை அறிக்கைகளில் ஒன்று)*


## தமிழர் விடுதலைக் கூட்டணி

X 1

### விடியலின் சின்னம் உதயசூரியன்! வீழ்ந்த எம்மக்களுக்கு கரம்கொடுப்போம்!!


1
வீ.ஆனந்தசங்கரி
தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி (சட்டத்தரணி)


2
சீ.கோபிதாசன்
தொழிலதிபர்


3
த.திருஞானசம்பந்தர்
Rtd புகையிரதநிலைய அதிபர்


4
ச.பத்மநாதன்
விவசாயி



5
செ.மகாலிங்கம்
Rtd திட்டமிடல் பணிப்பாளர்


6
செ.முத்துலிங்கம்
ஆசிரியர்


7
அ.முருகேசு
Rtd அதிபர்


8
இ.இரத்தினமணி
சமாதான நீதவான்


9
சு.இராஜஇராஜேஸ்வரி
Rtd ஆசிரியை


10
கு.சதாசிவமூர்த்தி
Rtd அதிபர்
பலாலி ஆசிரியர் கலாசாலை


11
இ.சாந்தசொருபன்
பொறியியலாளர்


12
வ.சண்முகராசா
Rtd இலிகிதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: **வித்யா**

### மேடம்



உள்ளம் மகிழும் செய்தி ஒன்று இல்லம் தேடி வரும். உத்தியோகத்தர்கள் கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடிவரலாம். நீண்ட நாள்களாக தள்ளி வைத்த வெளியூர் பயணங்கள் செல்லலாம். பல ஆண்டுகளாக அல்லது நாள்களாக பார்க்காமல் இருந்த ஒருவரைப் பார்க்கலாம். உற்சாகம் பெருகும்.

### இடபம்



மற்றவர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். சக ஊழியர்கள், நண்பர்கள் அனுசரணையாக இருப்பர். சுய தொழில் செய்வோர் கடும் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். கடிதங்கள் மூலம் நல்ல செய்திகள் வரலாம். உறவினர் ஒருவரின் அனுபவத்தைப் பார்த்து நீங்கள் பாடம் கற்றுக் கொள்வீர்கள்.

### மிதுனம்



பிரியமான நண்பர்கள் கூட, தொழில் ரீதியான விடயங்களில் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படலாம். திட்டமிடாத வேலை ஒன்றை செய்வீர்கள். ஆடை, ஆபரண தொழில் புரிவோர் கடும் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது நல்லது. கூட்டுத் தொழில் புரிவோர் மன உளைச்சல்களுக்கு ஆளாகலாம்.

### கடகம்



அயலவர் மத்தியில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். வழக்கு விவகாரங்களில் நல்ல திருப்பங்களைக் காணலாம். உடன் பணிபுரியும் ஒருவரின் வீட்டிற்கு ஏதாவது ஒரு வேலையாக செல்ல நேரிடலாம். அரசியல்வாதிகள் மேலிடத்தின் பாராட்டுக்களைப் பெறுவர். பெண்கள் விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும்.

### சிங்கம்



சிக்கல்கள் வராமல் எந்த விடயத்தையும் சமயோசிதமாக செய்து முடிப்பீர்கள். விருந்து, விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். யாருடைய பணமாவது உங்களின் கைகளில் புரளலாம். தொழில் ரீதியான அலைச்சல்களால் வெறுப்பு ஏற்பட்டாலும், அதனால், பெறும் வருவாயினால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

### கன்னி



அயலவர் உங்களிடம் அன்பாக நடந்து கொள்வர். மனைவி, குழந்தைகள் விரும்பிய பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். நீங்கள் தெரியாமல் செய்த தவறை மேலதிகாரிகள் சுட்டிக் காட்டலாம். சில வேலைகளை செய்ய தீவிரமாக முயற்சித்தாலும், அதை செய்ய முடியாமல் ஏதோ ஒரு வகையில் தடை ஏற்படலாம்.

### துலாம்



இழுபறியாக இருந்த வேலைகள் முடிவுக்கு வரலாம். உடன் பிறப்புக்கள் உங்கள் மனம் கோணாமல் நடந்து கொள்வர். போட்டி, எதிர்ப்புகளை முறியடிப்பது தொடர்பான சிந்தனைகள் மனதை ஆள்கொள்ளும். பல நாள் ஆசை ஒன்று நிறைவேறும். நாளை வரும் என, நினைத்த பணவரவு ஒன்று இன்றே வந்து சேரலாம். கோபம் குறைக்கவும்.

### விருச்சிகம்



கடன் மிகுதி ஒன்றை உடனே திருப்பிக் கொடுக்க நேரிடலாம். மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்க்க வேண்டும். சங்கடம் தரும் அல்லது மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். உங்களின் தொழில் ரீதியான செயற்பாடுகளை சிலர் விமர்சிப்பர்.

### தனுசு



உறவினர்களுடன் மனம் விட்டு பேசி சொந்த விடயங்களை பகிர்ந்து கொள்வீர்கள். வெறுப்பு, விரக்தி விலகி தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுகளைப் பெற வாய்ப்பு உண்டு. பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற்று பெருமை அடைவர். அடகு வைத்த பொருள்களை மீட்கலாம்

### மகரம்



சிலர் உங்களுக்கு நல்ல ஆலோசனைகள் கூறி வழிநடத்துவர். பேராசை இல்லாமல் எதிலும் நேர்மையாகச் செயற்பட வேண்டும். கடன் மிகுதிகளை, கட்டண மிகுதிகளை செலுத்துவீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றுக்காக அங்கும், இங்கும் அலையலாம். விருந்தினர் ஒருவரின் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும்.

### கும்பம்



கடினமாக முயற்சித்து செய்த வேலை ஒன்றுக்கு பாராட்டுக் கிடைக்கலாம். நேர்மை, நாணயமாக செயற்படுவதால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். கடன் மிகுதி ஒன்று திரும்ப கிடைத்தாலும், அதில் ஒரு பகுதியை மற்றொருவருக்குக் கொடுக்கலாம். மருத்துவ சிகிச்சைக்கு செல்லும் சிலருக்கு துணையாக செல்லலாம்.

### மீனம்



அடுத்தவர்கள் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டிய நாள். தொழில் ரீதியான சிக்கல்களால் உற்சாகம் குறையலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபரை சந்திக்க முடியாமல் போகலாம். வாகனங்கள் திடீரென பழுதாகி தொந்தரவு கொடுக்கலாம். ஏமாற்றங்களை தவிர்க்க எதிலும் எச்சரிக்கை அவசியம்.


## பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது நண்பியும் சம்பத் வங்கி
ஊழியருமான
**தர்சினி சின்னத்துரை**
B.B.A. (Hons) Fm.Spl
அவர்கள் 27.03.2010 அன்று
யாழ்.பல்கலைக் கழகத்தில்
இடம்பெற்ற 25 ஆவது
பட்டமளிப்பு விழாவில்
Bachelor of Business
Administration பட்டத்தை
பெற்றுள்ளமைக்கு எமது மனம்
நிறைந்த பாராட்டுக்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு,
மேலும் பல பட்டங்களைப்
பெற்றுச் சிறப்புடன் வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
London **வாழ் நண்பர்கள்.**

(96253)


## தங்க ஆபரணம் யாருடையது?

கே.கே.எஸ் வீதியில் கண்டெடுக்கப்பட்ட தங்க ஆபரணம் உடுவில் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் பிரதேச செயலகத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும் என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (1)

## முல்லைத்தீவில் இரு ஆலயங்கள் திறக்க அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.2

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரு ஆலயங்கள் பூஜைகளுக்காக திறந்து விடப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் சிவன் ஆலயம் கடந்த வெள்ளிக்கிழமையும் வற்றாப்பளை கண்ணகை அம்பாள் கோயில் இன்றும் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வற்றாப்பளை, ஒட்டுசுட்டான் ஆகிய பகுதிகளில் மக்கள் குடியமர்த்தப்பட்டு வருவதையடுத்து இவ் ஆலயங்கள் திறக்க அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)


## பாராட்டி வாழ்த்து



யாழ். பல்கலைக்கழகத்தில்
நடைபெற்ற 25 ஆவது
பட்டமளிப்பு விழாவில் M.A.
முதுகலைமாணிப் பட்டம் பெற்ற
**திரு இளையதம்பி**
**ஆனந்த நடராஜா**
( பிரதி அதிபர்,
சண்டிலிப்பாய்
இந்துக்கல்லூரி)
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதோடு மேலும் பல
பட்டங்கள் பெற்றுச் சிறப்புடன்
பல்லாண்டு வாழ இறையாசி
வேண்டி வாழ்த்துகிறோம்.

சின்னக்குளம்,
கந்தரோடை,
சுன்னாகம்.

**அம்மா, அக்காமார்,**
**அண்ணா, பெறாமக்கள்,**
**மருமக்கள்.**

(96231)


## ජාතික සම්පත
ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 09
திகதி - 31.03.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **J** அதிர்ஷ்ட இலக்கம் **5** வெற்றி இலக்கம் **2 1 5 2 1**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | பரிசுத்தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | J | 5 | 2 | 1 | 5 | 2 | 1 | ரூ. 20,594,154.00 | - |
| 1 பரிசு | | 5 | 2 | 1 | 5 | 2 | 1 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 2 | 1 | 5 | 2 | 1 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | | | | 1 | 5 | 2 | 1 | ரூ. 10,000.00 | 30 |
| 4 பரிசு | | | | | 5 | 2 | 1 | ரூ. 1,000.00 | 288 |
| 5 பரிசு | | | | | | 2 | 1 | ரூ. 50.00 | 2868 |
| 6 பரிசு | | | | | | | 1 | ரூ. 20.00 | 27355 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | பரிசுத்தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 2 | 1 | 5 | 2 | | ரூ. 1,000.00 | 27 |
| 8 பரிசு | | | 2 | 1 | 5 | | | ரூ. 100.00 | 286 |
| 9 பரிசு | | | 2 | 1 | | | | ரூ. 50.00 | 2878 |
| 10 பரிசு | J | | | | | | | ரூ. 20.00 | 11233 |
| 11 பரிசு | J | 5 | | | | | | ரூ. 100.00 | 1256 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,128,260.00

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ. 21,096,211.00





## ජයවිරු
ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 505
சீட்டிழுப்பு திகதி: 31.03.2010

வெற்றி எழுத்து: **F** வெற்றி இலக்கங்கள்: **28 29 30 37**

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 12,812,638.40 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 10 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 201 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 405 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 10200 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 50/- | 5906 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 147517 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 30/- | 23644 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,281,960.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 12,950,437.60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சியில் படையினரின் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.2

டெங்கு ஒழிப்பு வாரம் கடந்த செவ்வாய்க்கிழமை படையினரால் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வு கொடிகாமத்தில் நடைபெற்றது. எதிர்வரும் ஐந்தாம் திகதிவரை தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.2

மாகாண பொது நிர்வாக செயலகத்தினால் கடந்த வருடம் நடத்தப்பட்ட வகுப்பு III முகாமைத்துவ உதவியாளர்களுக்கான வினைத்திறமைகாண் கணனி மற்றும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

மாகாணப் பிரதி பிரதம செயலாளரினால் பரீட்சைப் பெறுபேறுகள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

# நீங்காத நினைவுகள்

திதி:சதுர்த்தி

02.04.2010



அமரர் கந்தசாமி தர்மராசா
2 ம் ஆண்டு நினைவு தினம்
வையத்துள்:09.01.1934
தெய்வத்துள்:26.03.2008





அமரர் தர்மராசா கனகாம்பிகை
12 ம் ஆண்டு நினைவு தினம்
வையத்துள்:13.04.1935
தெய்வத்துள்:02.11.1997

வாழ்வாங்கு வாழ உயிர் தந்தாய்...உறவென்னும் உடல் தந்தாய்...
கல்வியெனும் சிறகு தந்தாய்..பண்பெனும் மாலை தந்தாய்...
அன்பெனும் ஆடை தந்தாய்...ஏற்றம் எனும் ஏணி தந்தாய்...
உருவத்தெய்வமாய் எம்முடன் இருந்தாய்...அருவத் தெய்வமாய் சடுதியில் வானுறைந்தாய்...
மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய் ...ஏழேழு ஜென்மங்களிற்கும் உம்...
மக்களாய் தோன்றும் வரம் தருவாய்...

பிளாக் வீதி,
சங்கானை.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்
Computer World


# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## வேலுப்பிள்ளை இராஜரட்ணம்

(உரிமையாளர், R.B. புக்கிங் சென்ரர்- செல்வம்)

திதி : 02.04.2010



மண்ணுலகில்
24 . 04 . 1953

விண்ணுலகில்
08 . 04 . 2004

ஆண்டாறு ஆனாலும் ஆறவில்லை
எம் துயரம்
வேதனைகள் எமைச் சூழ நித்தம்
உங்கள் நினைவுகளுடன் நகர்த்துகின்றோம்
நாள்களை
மீண்டும் மானிடப்பிறவி உண்டெனில்
பிறந்திடுவோம் தந்தையே உம் பிள்ளைகளாய்
பிரியமான உம் துணையாள் பசுமையான
உங்கள் நினைவுகளை நித்தம் நெஞ்சில் சுமக்கின்றாள்.
நேசம் கொண்ட எம் தெய்வமே!
எங்கள் கண்ணீர்த் துளிகள் உங்கள்
பாதக்கமலங்களில்
காணிக்கைப் பூக்களாய் சமர்ப்பிக்கின்றோம்.

நினைவுடன் உம் உறவுகள்

மனைவி- இ.யோகராணி (இந்தியா), மகன்- இ.பிரபாகரன் (ரஞ்சித்- லண்டன்),
மகள்மார்- இ.டொறின் (இந்தியா), அ.றொசிற்றா (இந்தியா),
மருமக்கள்- க.அரவிந் (லண்டன்), பி.றூபி (லண்டன்).

(96189)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வெளியீடு: உதயன்-கல்விச்சுடர்


## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை - 05

### வினாத்தாள் - I


நேரம் : 45 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.**

01. முதலிற் தரப்பட்ட கோலத்தினை முகம் பார்க்கும் கண்ணாடியூடாகப் பார்க்கும் போது தோன்றும வடிவத்தினைத் தரப்பட்ட மூன்று விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழக்கீறிடுக.




02. கீழ்தரப்பட்டுள்ள உருவினை மேலிருந்து பார்க்கும்போது தோன்றும் வடிவம் எது எனபதைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழக் கீறிடுக.




03. அருகில தரப்பட்ட உருவில் நிறந்தீட்டப்பட்டுள்ள சிறிய முக்கோணங்கள் போன்று எத்தனை சிறய முக்கோணங் களை வெட்டிப்பெறமுடியும்?



1) 8 2) 16 3) 32


மூ கீழே தரப்பட்ட தரவுகளை அவதானித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கீறிடுக

| | | | |
|---|---|---|---|
| சவர்க்காரம் | கர்ப்பூரம் | உப்பு | உப்பு |
| உப்பு | உப்பு | உப்பு | சவர்க்காரம் |
| கர்ப்பூரம் | தீப்பெட்டி | உப்பு | சவர்க்காரம் |
| ரூபா 148.00 | ரூபா 120.25 | ரூபா 132.00 | ரூபா 106.00 |

04. சவர்க்காரக்கட்டி ஒன்றின் விலை யாது?
1) ரூபா 35.00 2) ரூபா 44.00 3) ரூபா 31.00

05. தீப்பெட்டி ஒன்றின் விலை யாது?
1) ரூபா 3.25 2) ரூபா 2.75 3) ரூபா 3.00

மூ தரப்பட்ட உருக்களையும் அவற்றின் பெறுமானங்களையும் இனங்கண்டு கீழ் வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினைத் தெரிவுசெய்து அதன் கீழக் கீறிடுக.




06. ③ யின் பெறுமானம் யாது?
1) 6 2) 5 3) 4

07. (முகம்) இன் பெறுமானம் யாது?
1) 3 2) 5 3) 6


* கீழ் கூட்டிற்குள் தரப்பட்ட எழுத்துக்களையும் இலக்கங்களையும் அவதானித்து 8ஆம், 9ஆம் வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கீறிடுக.

| AYAZR53MP7QR2668SVL9RNX47BC85R |
|---|

08. மேலே இடம்பெற்றுள்ள எழுத்துக்கள் எத்தனை?
1) 12 2) 17 3) 15

09. கூட்டிற்குள் இடம்பெற்றுள்ள இலக்கங்கள் எத்தனை?
1) 17 2) 14 3) 12

* தரப்பட்ட தரவுகளை அவதானித்து 10ஆம் வினாவிற்கு விடை தருக?




10. A,B என்னும் இரு தட்டுக்களும் சமநிலையில் இருப்பதற்கு ட தட்டில் வைகக வேண்டிய படிக்கல் எது?
1) 2) 3)



* பின்வரும் கூற்றுக்களை ஒழுங்கமைக்கும்போது மூன்றாவதாக வரும் கூற்றுக் குரிய இலக்கத்தின் கீழ்க் கீறிடுக.

11. 1 ரு அதற்குள் இரண்டு முட்டைகள் இட்டது.
2 ரு பல நாட்கள் முட்டைகளை அடைகாத்ததும் குஞ்சுகள் பொரித்தன.
3 ரு பெண்குருவி முட்டையிடும் காலம் வருவதனை உணர்ந்து கொண்டது.
4 ரு கூட்டிற்குள் பொருத்தமான வாழ்விடத்தினை அமைத்துக் கொண்டது.
5 ரு புற்களையும் தும்புகளையும் கொண்டு அழகிய கூடு ஒன்று கட்டியது.
1) 3 2) 2 3) 4

12. 12ஆம், 13ஆம் வினாக்களில் வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்து அதன் கீழக் கீறிடுக.

12. அதிகசத்து, பானம், குளிர்மை
1) 2) 3)



13. சுத்தம், அழகு, இரும்பு
1) 2) 3)



* பின்வரும் வினாக்களில் வரும் சரியான விடைகளை இனங்கண்டு அதன் கீழ்க் கீறிடுக.

14. வெற்றிலை என்ற சொல்லைப் பிரித்தெழுதும் சரியான முறை,
1) வெற்றி + இலை 2) வெறுமை + இலை 3) வெற் + இலை

15. அழகிய, வண்ணவண்ண, மெல்லிய போன்ற சொற்கள் வாக்கியங்களில் என்னவாக இடம்பெறும்?
1) அடுக்குமொழியாக 2) பெயர்ச்சொல்லாக 3) அடைமொழியாக

16. ஏகபுத்திரன் என்றால் ஒரேயொரு மகனைக் குறிப்பது போன்று கனிட்ட புத்திர குறிப்பது,
1) இளையமகளை 2) மூத்தமகளை 3) மருமகளை

17. பின்வருவனவற்றில் தன்மைப்பன்மை நிகழ்காலச் சொல் எது?
1) செய்தோம் 2) ஆடுகின்றோம் 3) அழிப்போம்

* கீழ்வரும் கணிதச் சமன்பாட்டில் புள்ளிக்கோட்டில் வரவேண்டிய எண் எது எனபதைத் தரப்பட்ட மூன்று விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழக் கீறிடுக.

18. 36 + 12 □ 6 = ------- x 6
1) 42 2) 6 3) 7

* 19ஆம், 20ஆம் வினாக்களுக்குரிய விடையினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

19. இராட்சதப்பல்லி என அழைக்கப்பட்ட நான் பலகோடி ஆண்டுக்களுக்கு முன் வாழ்ந்து தாவர உண்ணியாக இருந்த பின்னர் புலால் உண்ணியாக மாறி விடடேன். இப்பொழுது எம்போன்ற உயிரினம் எல்லாம் அழிந்துவிட்டதெனினும் நான் ஓர் ஊர்வனவாகும் எனின், என் பெயர் என்ன?

(------------------------------------------------)

20. ஒரு வரிசையில் அப்பா, அம்மா, அண்ணன், அக்கா, தம்பி ஆகியோர் அமர்ந திருந்தனர். அவற்றில் அண்ணனும் தம்பியும் முதலில் தம் இருப்பிடங்களை மாற்றிக்கொண்டனர். அதன் பின் அப்பாவும் தம்பியும் தம் இடங்களை மாற்றிக் கொண்டனர். இறுதியில் அப்பாவும், அக்காவும் தம் இடங்களை மாற்றிக் கொண்டனர் எனின், தற்பொழுது நடுவில் அமர்ந்திருப்பவர் யார்?

(------------------------------------------------)

மூ கீழே 21□23 வரையான வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவுடன் கருதது நிறைந்தவகையில் தொடர்புடைய உருவைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

21. 1) 2) 3)



22. 1) 2) 3)



23. 1) 2) 3)



மூ கீழே 24 25 வரையான வினாககளில சில வாக்கியங்கள் ஒழுங்கு மாறத் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தினால், ஒரு சம்பவம் உருவாகும். அவ்வாறு சரியான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட விடையின் கீழ்க் கோடிடுக.

24. 1 – மாமா வந்து கதவைத் திறந்தார்.
2 – மாமி எனக்குக் குடிக்கத் தண்ணீர் கொண்டுவந்து தந்தார்.
3 – நான் கதவைத் தட்டினேன்.
4 – சிறிது நேரம் அவர்களுடன் கதைத்து விட்டு வெளியேறினேன்.
5 – நான் வீட்டின் உள்ளே உள்ள ஒரு கதிரையில் இருந்துகொண்டேன்.
1) 1,5,2,4,3 2) 3,1,5,2,4 3) 5,1,3,4,2

25. 1 – எலி பயத்தினால் நடுங்கி வேகமாக ஓடியது.
2 – கதவோரத்தில் பதுங்கியிருந்த எலியை பூனை கண்டது.
3 – பூனையும் எலியின் பின்னால் ஓடியது.
4 – தன்னைப் பிடிக்கவரும் பூனையை எலி கண்டது.
5 – பூனை மெதுமெதுவாக எலியை நெருங்கிச் சென்றது.
1) 5,3,4,2,1 2) 1,5,4,2,3 3) 2,5,4,1,3

மூ கீழே காணப்படும் வசனங்களில் முதலில் தரப்பட்டுள்ள கூற்றுக்கு ஏற்ப மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்து அதன் கீழ்க்கோடிடுக.

26. என்னிடம் உள்ள புத்தகங்களில் பெரும்பாலானவை கணிதபாடப் புத்தகங்க ளாகும். அதன்படி,
1) என்னிடம் விஞ்ஞானப் புத்தகங்கள் இல்லை.
2) என்னிடம் கணிதபாடப் புத்தகத்துடன் வேறுபாடப்புத்தகமும் உண்டு.
3) என்னிடம் கணிதபாடப்புத்தகத்தை விட அதிகமான கதைப் புத்த கஙகள் உண்டு.

27. நாய் வீட்டில் வளர்க்கப்படும் ஒரு பிராணியாகும். சகல நாய்களுக்கும் நான்கு கால்கள் உள்ளன.
1) வீட்டில் உள்ள சகல பிராணிகளுக்கும் நான்கு கால்கள் உள்ளன.
2) நான்கு கால்கள் உள்ள பிராணிகள் பறவைகள்.
3) டொமி ஒரு நாயாகும். அதற்கு நான்கு கால்கள் உள்ளன.

(13 ஆம் பக்கம் பார்க்க)

**2010 புலமைப்பரிசில் மாணவர்களுக்காக பல மாவட்ட ஆசிரியர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கீழே 28ஆம், 29ஆம் வினாக்களுக்குரிய மிகப்பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

28. வாகனம் ஒன்றில் எப்பொழுதும் இருப்பது,
    1) எரிபொருள் 2) பயணிகள் 3) ஆசனங்கள்

29. எரியும் விளக்கில் எப்பொழுதும் இருக்கவேண்டியது,
    1) போத்தல் 2) மண்ணெண்ணெய் 3) தீ

30. அருகில் தரப்பட்டுள்ள உருவில் இருந்து அதிகமாக வெட்டக்கூடிய உருவம் எது?
    1) சதுரங்கள்
    2) முக்கோணங்கள்
    3) செவ்வகங்கள்




31. இங்கு உருக்கள் ஏதோ ஒரு கோலத்திற்கு ஏற்ப வரையப்பட்டுள்ளன. அதன்படி வெற்றுக்கூண்டுக்குப் பொருத்தமான உரு எது?




32. பகல்வேளையில் ஒரு சட்டை உலர்வதற்கு 30 நிமிடங்கள் எடுக்கும் எனின், அதே பகல் வேளையில் 5 சட்டைகள் உலர்த்துவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?
    1) 150 நிமிடங்கள் 2) 30 நிமிடங்கள்
    3) 105 நிமிடங்கள்

* கடதாசியில் கீழே உள்ளவாறு எழுதப்பட்ட கோடு வழியே வெட்டப்பட்டன. அவ்வாறு வெட்டப்பட்ட துண்டுகளைக்கொண்டு அமைக்கப்பட்ட சொற்களுக்குரிய துண்டுகள் தரப்பட்டுள்ளன. அச்சொற்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| பு | ன | ங |
| நி | சி | க |
| ணி | ம் | கு |





33. ..................

34. ..................

35. ..................

*கண்டி சாஹிரா கல்லூரியில் ப(இ)ச(இ)ஊஇறு என்னும் பிரிவுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை உரு 1 இலும், சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை உரு 2 இலும் தரப்பட்டுள்ளன. அதன்படி 36-38 வரையான வினாக்களிற்கு விடை தருக.




36. பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..................

37. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் அரைவாசிக்குமேல் சித்தியடைந்த வகுப்பு எது?

..................

38. C வகுப்பில் தோற்றிய மாணவர்களில் எப்பின்னத்தினர் சித்தியடைந்தனர்?

..................

* கீழே 39ஆம், 40ஆம் வினாக்களில் உள்ள கோலத்தை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

39.

| | | | |
|---|---|---|---|
| 4 | 10 | 13 | 14 |
| .... | 12 | 16 | 18 |
| 5 | 14 | 19 | 22 |
| 6 | 16 | 21 | 26 |

..................

40.

| | | | |
|---|---|---|---|
| 36 | 33 | 30 | 27 |
| .......... | 54 | 51 | 24 |
| 42 | 45 | 48 | 21 |
| 8 | 11 | 14 | 17 |

..................

(நிறைவுற்றது)

நன்றிக்கும் பாராட்டுக்கும் உரிய ஆசிரியர்:
**திரு.எஸ்.தயாளலிங்கம் & திரு.பி.பத்மநேசன், ACA கல்வி நிலையம், திருமலை.**

## விடைகள்: முன்னோடிப் பரீட்சை இல.04, வினாத்தாள் II

01. 1-நிலாவின் சிறப்பு, 2-கோடி கோடி, 3-வெள்ளி ஓடம்போல, 4-நீ, 5-குற்றம், 6-பூமியில் உள்ளவர்கள் வெண்ணிலாவை பறதாடிப்பார்கள், என்று, 7-ப. இயல் பொலி, க. மாற்றொலி, 8-சிறகு + இருந்தால், 9-தினமும். 02. 1-அவள் இனிமையாக பாட்டுப்பாடுகின்றாள், 2-விவசாயி தோட்டத்தில் பயிர்களை நட்டார், 3-வருகிற வெள்ளிக்கிழமை கோயிலுக்கு செல்வோம், 03.1-வாழ்க்கையில் முன்னேறுதல், 2-பொறமை படல், 04. 1-கழிக்க, 2-ஆராய்ச்சி, 05. 1-ஆயுட்காலம், 2-சுரங்கம், 06. 1-Cupboard, 2-mirror, 07. 1-என்னை பாருங்கள், 2-நீங்கள் எங்கே வசிக்கின்றீர்கள், 3-என்னை மன்னிக்கவும், 08. 1-அங்கோ போங்கள், 2-காதுகளால் கேட்டோம், 09. 1-ஊசா, 2-பதகன்ன, 10-4, 11-1, 12-2, 13-3, 14-4, 15-4, 16-4, 17-4, 18-4, 19-4, 20-1,22. 1-கொக்கு, 2-மரங்கொத்தி, 3-கிளி, 4-வாத்து, 22.1-E, 2-B, 3-D, 4-C, 5-A, 23. 1-6, 2-3, 3-1, 4-4, 24. 1-அகத்தி, 2-மஞ்சள், 3-அகத்தி, 4-பால் அறுக்கு, 5-ஆமணக்கு, 25. 1-முகத்தில், 2-அறுகோண, 26. 1-மரஸ் மஸ், 2-குவாசியக்கோள், 3-மாலைக்கண், 4-என்புருக்கி, 5-குருதிச்சோகை, 27. 1-கனவுரு, 2-6 முகம், 28 1-5 பென்சில், 2-ரூபா 200, 3-5m நாடா, 4-400g மிக்ஸர், 5-ரூபா 545 (மொத்தம்), 29. 1-ரூபா 270, 30. 9 வகுப்பறை, 31. 4.6099km, 32.4 நாட்களுக்கு, 33. பி.ப 12.15 நிமிடத்திற்கு, 34. 1-8 (வித்தியாசம்), 35. 2m 67cm, 36. 22cm (சுற்றளவு), 37. 3/8, 38. ரூபா 480, 39. 8 குப்பிகள், 40.பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள்.


## கல்விச்சுடர் சம்பந்தமான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....

உதயன் பணிமனை, இல.365, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 071-8724054/021-2229944/071-4273035





சுன்னாகம் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி, உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. நடராசா மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் முதலாவது படத்திலும்-
புதிதாக அரங்கேற்றப்பட்ட ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பாண்ட் வாத்திய அணியை இரண்டாவது படத்திலும் காணலாம்.





யாழ். திருநெல்வேலி றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவை அதிபர், ஆசிரியர்கள், மணவர்கள், பெற்றோர்கள் மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்பதை முதலாவது படத்திலும்-
சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பியின் நல்லூர் அமைப்பாளர் அம்பலம் ரவீந்திரதாசன், கஜமுகன் ஹாட்வெயர் உரிமையாளர் ஈ.எஸ்.பி. நாகரெத்தினம், புனித சவேரியார் ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு எப்.எல்.என். குரூஸ் அடிகளார், பாடசாலை அதிபர் திருமதி மே.க.பாலசிங்கம் ஆகியோர் மலர்மாலை சூட்டி வரவேற்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது தேசியச் சூழலை நல்லாட்சி செய்யும் அரசியல் அதிகாரம் எம்மிடமே இருக்க வேண்டும்

*"பேரினவாத அரசியல் தேசியம் என்ற சொல்லின் அர்த்தப் பரிமாணங்களை முழுமையாக உணர்ந்து கொள்ளாத அல்லது உணர மறுக்கின்ற நிலையே தொடர்ந்தும் நீடிக்கிறது. சிங்கள மக்கள் ஒரு தேசிய இனம். அவர்கள் வாழ்ந்து வருகின்ற தென் இலங்கையின் சுற்றுச் சூழல் அவர்களது தேசியச் சூழல் (National Environment). அதே போன்றுதான் இலங்கைத் தீவின் பூர்வீக குடிகளான தமிழ்மக்களும் தனித்த ஒரு தேசிய இனம். எமக்கெனத் தனித்துவமான பண்பாடும், செழுமையான மொழியும் உண்டு. நாம் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற வடக்கு– கிழக்கு இணைந்த நிலப்பரப்பு எமது தாயகம். இங்கு காணப்படக்கூடிய தாவர, விலங்கு இனங்கள் மற்றும் இயற்கை வளங்கள் எல்லாம் சேர்ந்து எமது தேசியச் சூழல். இரண்டு தேசியச் சூழல்களுமே உயிரினங்களின், இயற்கை வளங்களின் பல்வகைமையிலும் பகிர்மானத்திலும் வேறுபட்டவை. இலங்கை அரசு தேசிய மரமாகக் கொண்டாடும் மெசுவா (Mesua) மரம் தமிழ்த் தேசியச் சூழலில் இல்லை. இந்த மரம் பற்றிய பூரண அறிவு எமக்குக் கிடையாது. எமது பனைமரத்தின் பெறுமதி சிங்கள தேசத்துக்குத் தெரிந்திருந்தால் தென்மராட்சியில் பனைவளம் எறிகணைகளால் பேரழிவைச் சந்தித்திருக்காது.*

*ஒவ்வொரு தேசிய இனமும் அதன் தேசியச் சூழலுடன், இரத்தமும் சதையும் என்பார்களே அதுபோல ஒரு அங்கமாகச் சேர்ந்தே பரிணமித்து வந்துள்ளது. இதனால் ஒரு தேசிய இனத்துக்கு அதன் தேசியச் சூழல் குறித்தே பூரணமான புரிதல் இருக்கமுடியும். இதன் அடிப்படையிலேயே, எமது தேசியச் சூழலை நல்லாட்சி செய்யும் அரசியல் அதிகாரம் எம்மிடமே இருக்க வேண்டும் என்கிறோம். அப்போதுதான் எமது இயற்கையின் வளமும் அளவும் குன்றாத அக்கறையுடன் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும். மாறாக, வேறுபட்ட பண்பாட்டையும் மொழியையும் கொண்ட ஒரு பேரினவாதத் தேசிய இனம், அதுவும் இன்றைய உலகமயமாக்கல் நிலையில் எம்மை ஆளுகை செய்யின் அது எமது வளங்களைச் சூறையாடுவதாகவே அமையும். இயற்கை அழிந்தால் இயற்கையால் நாமும் அழிவோம் என்பதுதானே சூழலியல் நியதி."*

பொ. ஐங்கரநேசன் அவர்கள்
வழங்கிய நேர்காணலில் இருந்து......



போரினால் சிதைக்கப்பட்ட தாயகத்தின் இயற்கை வளங்கள் இப்போது, அபிவிருத்தியின் பெயராலும் சூறையாடப்படுகின்றது.

இந்நிலையில்,

**தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு சூழலியலாளனும் தேவை.**

# பொ.ஐங்கரநேசன்

M.Sc,PGDJMC

வீட்டுச் சின்னத்துக்கு நேரேயும்,
இலக்கம் 2க்கு மேலேயும் புள்ளடி இட்டு
பெரும் எண்ணிக்கையான வாக்குகளால்
வெற்றிபெறச் செய்வோம்

## இலங்கைத் தமிழரசுக் கட்சி

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

**வாக்களிப்போம்! மற்றவர்களையும் வாக்களிக்க வைப்போம்!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2010 யாழ்.மாவட்டம்

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு
## இலங்கை தமிழரசுக் கட்சி

வலி தந்தாரைத் தோற்கடிப்போம்
விதி வெல்ல வாக்களிப்போம்



10

எங்கள் குரல்களையும்
ஆதாரமான வாக்குகளையும்
நிரந்தரமான உரிமைகளையும்
போராடிய வாழ்வையும்
இழக்கமுடியாத பூர்வீக தாயகத்தையும்
எங்களுடையவை என்பதை
எங்களது வாக்குகளால் நிரூபிப்போம்!

## சிவஞானம் சிறீதரன்

அதிபர், கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் (கனிஸ்ரா)

வடமராட்சி வாக்காளப் பெருமக்கள்

## பாராளுமன்றத்துக்கு பத்திரிகையாளன் ஸ்ரீகஜன்



கடத்தல் காணமல் போதல்
வகை தொகையற்ற கைதுக்கு
எதிராக எழுதியவன் ஸ்ரீகஜன்

10



யாழ் வந்த எதிர்க்கட்சித்
தலைவர் ரணில்
விக்கிரம சிங்கவை
வழிநடத்தும் வேட்பாளர்
ஸ்ரீகஜன்

குடாநாட்டு மக்களே வாக்குகளை வீணாக்காமல் யானைச் சின்னத்திற்கு நேரே ஒரு புள்ளடியையும் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் இலக்கமான 08 மற்றும் பத்திரிகையாளர் ஸ்ரீகஜனின் இலக்கமான 10 ஆகியவற்றுக்கு மேல் புள்ளடியிட்டு இருவரையும் அமோக வெற்றி பெறச் செய்வோம் !!!

8



திருமதி விஜயகலா மகேஸ்வரன்
(முதன்மை வேட்பாளர்)

தொடர்புக்கு: 0773946702

## யானைச் சின்னத்தில் யாழின் மைந்தன் - எஸ். ஸ்ரீகஜன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/ பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம் - தெல்லிப்பழை
## சேவைநலன் பாராட்டும் வாழ்த்துக்களும்



திருமதி ச.ஜெயக்குமார்



திரு.சி.அண்ணாமலை

எமது பாடசாலையில் 23 வருடங்கள் அளப்பரிய சேவையாற்றிப் போர்ச்சூழலில் பத்து இடப்பெயர்வின் பின்பும் சொந்த இடத்தில் பாடசாலையை மீண்டும் இயக்கப் பெரும் சேவையாற்றித் தேசிய இடமாற்றக் கொள்கையின் அடிப்படையில் இடமாற்றம் பெற்ற சிரேஷ்ட ஆசிரியை திருமதி சரஸ்வதி ஜெயக்குமார் அவர்களையும்

பதினைந்து ஆண்டுகளின் பின் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்திபெற அயராது உழைத்து வலயங்களுக்கு இடையிலான இடமாற்றத்தில் இடமாற்றம் பெற்றுச்சென்ற அன்புக்குரிய ஆசிரியர் திரு.சி.அண்ணாமலை அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

02.04.2010 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பாடசாலையின் பொன்னையா மண்டபத்தில் சேவை நலன் பாராட்டு வைபவம் நடைபெற உள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யா/பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம்,
தெல்லிப்பழை. (96259)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம்.

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2012
★ கலை, வர்த்தக, கணிதப் பிரிவுகள்
அரசியல் - S.ஸ்ரனிஸ்லாஸ்
* Gr.1 முதல் O/L வரை
* Gr.6 To 11 ENG. MED.
* ENG. LITERATURE 10&11
* புலமைப்பரிசில் Gr.5 (பயிற்சிப் பரீட்சைகளுடன்)
* I.C.T., G.I.T. CLASSES (செயன்முறைகளுடன்)
* O/L DAY CLASS ஆரம்பம்

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலை, மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, இணுவில் மக்லியோட் வைத்தியசாலையில் தன்னலமற்ற வைத்திய சேவையைச் செய்து கொண்டிருக்கும் இருதய நோய்ச்சிகிச்சை நிபுணர் Dr.P.லக்ஷ்மன் அவர்களின் அருமைத் தாய்

**திருமதி நேசலக்ஷ்மி பூபாலன்** அவர்களின்

இழப்பையிட்டு மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை இணுவில் மக்லியோட் வைத்தியசாலைச் சமூகம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் மறைவால் ஆழ்ந்த கவலையில் இருக்கும் குடும்பத்தினருக்கு இறைவனின் ஆறுதல் கிடைக்க வேண்டுமென்றும் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை,
(96243) இணுவில் மக்லியோட் வைத்தியசாலைச் சமூகம்.

## அறிவித்தல்

பெரிய வெள்ளி, உயிர்த்த ஞாயிறு தினங்களை முன்னிட்டு 02.04.2010, 03.04.2010, 04.04.2010 (வெள்ளி, சனி, ஞாயிறு) தினங்களில் விரிவுரைகள் இடம்பெறாது என்பதை மாணவர்கள், விரிவுரையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்.
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
(சி/566354)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 2

உதயனின் அனுசரணையுடன் மூளாய் இந்து இளைஞர் மன்ற மாதிரி சிறுவர் பாடசாலையில் அமைக்கப்பட்ட 'சறுக்கீஸ்' திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மூளாய் இளைஞர் மன்றத் தலைவர் க.துளசிதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உதயன் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் கலந்து கொள்வார். (201)

## தமிழ்த்தினப்போட்டி

கோப்பாய், ஏப். 2

யாழ்.கல்வி வலய நல்லூர்க் கோட்ட மட்ட தமிழ்மொழித்தினப்போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெறும் என நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா அறிவித்துள்ளார். (ஒ-72)

## கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரிக் கிளை இன்று இயங்கும்

யாழ்ப்பாணம், ஏப். 2

கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரிக் கிளை இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரையும் இயங்கும் என மேற்படி வங்கியின் முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் அறிவித்துள்ளார். (204-207)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் செவ்வாயன்று

நாவற்குழி, ஏப். 2

வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் அரச திணைக்கள, அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளைப் பங்குபற்றுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஒ-121)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று ஒலிக்கும் திருப்புகழ்

வடமராட்சி, ஏப். 2

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வுவரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பக்கவாத்தியங்கள் இசையுடன் கூடிய திருப்புகழ்பாடல்கள் இடம்பெறும்.

இணுவில் இளந்தொண்டர் சபை ஸ்தாபகர் மா.ந.பரமேஸ்வரன் இப்பாடல்களை வழங்குவார். (ஒ-236)

## இசைப்பேருரை

கொக்குவில், ஏப். 2

மானிப்பாய் மருதடி அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலய மகோற்சவ காலத்தை முன்னிட்டு நடைபெற்று வரும் விசேட அபிஷேக ஆராதணை கடந்த 29 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

சிறப்பு நிகழ்வாக தினமும் மாலை 5.30 தொடக்கம் 6.30 மணிவரை சிவ. வை. நித்தியானந்தசர்மாவின் ''விநாயகபுரணம்'' பற்றிய தெய்வீகத் தொடர் இசைப்பேருரை சிறந்த பக்க வாத்திய [illegible] நடைபெறுகிறது. (ஒ)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 06 | 25 |
| ★ | ★ |
| 12 | 03 |
| ★ | ★ |
| 1950 | 2008 |

### அமரர் மகேந்திரன் தயாபரன்

(கிராமசேவகர், கோண்டாவில் J/118)

திதி: பங்குனிமாத அபரபக்க சதுர்த்தி (02.04.2010) வெள்ளிக்கிழமை

ஊர் போற்ற வாழ்ந்திருந்த உத்தமரே
சீர் பெற்ற பண்புவழி நின்றுழைத்த சீரியரே
வேர் போல் விளங்கி உயரவைத்த சத்தியரே
ஆண்டுகள் நூறு சென்றாலும் நாம் உம்மை மறவோமே.

''லோகவாசா'',
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.
(சி/566324)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 03 | 03 |
| ★ | ★ |
| 07 | 03 |
| ★ | ★ |
| 1955 | 2010 |

### அமரர் முருகேசு பாலகிருஷ்ணன்

திதி: 02.04.2010

மனிதருள் மாணிக்கமாய்
எம் குடும்பத்தின் அகல் விளக்காய்
மாண்புடன் யாம் இன்புடன் வாழ
ஏற்ற நற்பணிகள் பல புரிந்து
வையத்துள் வாழ்வாங்கு வாழும் - எம்
உள்ளத்து ஒளியாய்த் திகழும்
அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

இடைக்குறிச்சி மேற்கு,
வரணி.
க.யாசிந்தன்
(பெறாமகன்).
(96250)

**Kalanjalie Sarees**
(Exclusive Party Sarees)
கண்காட்சியும் விற்பனையும்
இடம் : யாழ் இந்துமகளிர் கல்லூரி
திகதி : 03-04-2010
நேரம் : 9.00 a.m. - 6.00 p.m.
T.P:- 0777309983
ஆரம்பித்துவைப்பவர்
திருமதி வே.பேரின்பநாதன்
அதிபர். யா/இந்துமகளிர் கல்லூரி

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா பவசிங்கம்

(ஓய்வுபெற்ற காப்புறுதிக்கூட்டுத்தாபன காசாளர்)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பவசிங்கம் கடந்த (26.03.2010) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் நுணாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற வல்லிபுரம் - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் கிருபாவின் (முன்னாள் ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி, முன்னாள் உப அதிபர், மானிப்பாய் இந்துக்கல்லூரி) அன்புக் கணவரும் ஷர்மிலி (சென்னை), கோசலி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோசுவா (பிரான்ஸ்), விக்ரர் (லண் டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சினேகா, நிகிற்றா ஆகியோரின் பாசமிகு பேரனும் ராஜசிங்கம், பாலசிங்கம், காலஞ்சென்றவர்களான குணசிங்கம் மற்றும் வீரசிங்கம், பரமேஸ்வரி (லண்டன்), தவமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாந்தி, திரு (கனடா), தயா (கனடா), அருளி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு இன்று (02.04.2010) வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக உடுவில் கல்லறைத்தோட்டத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச் வீதி, உடுவில்.
தொ.பே. 021 321 3532
தகவல்: கிருபா பவசிங்கம் (மனைவி).
(96234)

### கனகசபை தியாகராஜா

(முன்னாள் தலைவர், வேம்படி முருகமூர்த்தி கோயில், கொக்குவில்)



தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை தியாகராஜா 30.03.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-இராசமணி தம்பதியரின் அன்பு மகனும்,காலஞ்சென்றவர்களான இராசையா-இராசம்மா தம்பதியரின் அருமை மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம்,இரத்தினம், பாக்கியம், கண்மணி, நாகம்மா,நல்லம்மா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்,, சின்னத்துரை, இராசையா, நடேசு, செல்லம்மா, இராசலிங்கம், குணரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரஞ்சனா தேவி, கணேசமூர்த்தி(ஜேர்மனி), நடேசமூர்த்தி (ஜேர்மனி), சத்தியமூர்த்தி (நோர்வே), கைலாயநாதன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருந்தவராசா (முன்னாள் லிகிதர், மின்சாரசபை, யாழ்ப்பாணம்), குமுதினி (ஜேர்மனி), காலஞ்சென்ற கிருசாந்தி மற்றும் ஜெயலட்சுமி, இந்துமதி, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், நிருபா, நித்திலன், கிபிலன், பிரியந்தி, நிவேந்தினி, வருண், டினோசன், விபுசன், இந்துஜன் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.
தகவல்:
தி.சத்தியமூர்த்தி(மகன்)
T.P -0213734555

## தமிழர் விடுதலைக் கூட்டணி
## நாடாளுமன்றத் தேர்தல் 08.04.2010



வீ.ஆனந்தசங்கரி
இல 01

பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், வன்னி மக்கள், சிறையிலும் தடைமுகாம்களிலும் அனுபவிக்கின்ற துன்ப, துயரங்களுக்கு பரிகாரம் காண விழைவது தமிழர் விடுதலைக் கூட்டணி



த.தி.சம்பந்தர் JP
ஏழாலை
இல 03

எனவே உதயசூரியனுக்கு வாக்களித்து
இலக்கம் 1 க்கும் இலக்கம் 3 க்கும் விருப்பு வாக்குகளை அளித்து
வெற்றிபெறச் செய்யுங்கள்.
(95924)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்காலுடன் தமிழ்த்தேசியம் அழியவில்லை; பேரினவாதிகளுக்கு எதிராக அது புத்துயிர் பெற்றுள்ளது

தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியின் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் உதயனுக்கு வழங்கிய பேட்டி.



**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நீங்கள் அதை விட்டு வேறு கட்சியில் போட்டியிடக் காரணம் என்ன?

**பதில்:** தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் இருந்து நான் வெளியேறவில்லை. கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டேன்.

தமிழ்த்தேசியம்,மரபுவழித் தாயகம், சுயநிர்ணயம் ஆகியவற்றில் நான் உறுதியாக இருந்தமையாலும் கடந்த தேர்தலில் நான் விடுதலைப் புலிகளால் பிரேரிக்கப்பட்டமையாலும் என்னைக் கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றினார்கள்.

தனித்துவமான இறைமை கொண்ட தாயகம், சுயநிர்ணயம் என்ற தமிழ் மக்களின் அடிப்படைக் கொள்கைகளில் இருந்து கூட்டமைப்பு விலகிவிட்டது. இந்தக் கொள்கைளில் நான் உறுதியாக இருப்பதால் திட்டமிட்டு என்னை வெளியேற்றிவிட்டார்கள். இதன் காரணமாக நான் கொண்ட கொள்கையை முன்நிறுத்தி தனித்துப் போட்டியிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

கூட்டமைப்பு தனது கொள்கைகளில் இருந்து விலகிய காரணத்தால் கூட்டமைப்பில் இருந்து விலகியிருக்க முடிவு செய்தேன்.

நான் மாற்றுத் தெரிவின் மூலம் காங்கிரஸின் கூட்டமைப்பில் போட்டியிடுகிறேன். காங்கிரஸின் வேட்பாளராக நான் போட்டியிடவில்லை. காங்கிரஸை வளர்க்கும் நோக்குடன் அக்கட்சியின் கூட்டமைப்பில் நான் போட்டியிடவும் இல்லை.

ஒஸ்லோ அறிக்கை அடிப்படையில் தீர்வு என்று கூறிக் கொண்டு தனது கொள்கை என்ன என மக்களுக்கு கூறாமல் ஆணை வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறி வருகிறது. இந்த முயற்சியை முறியடிக்க வேண்டிய வரலாற்றுக் கடமை எம் மீது சுமத்தப்பட்டுள்ளது.

40ஆயிரம் போராளிகளையும் ஒன்றரை லட்சம் பொதுமக்களையும் தியாகம் செய்த பின்னர் தமிழ் மக்களின் அபிலாஷையான கொள்கைகளைக் கூட்டமைப்பு கைவிட்டு 35 வருடங்களுக்கு முந்திய, தோல்வியடைந்த ஓர் அதிகாரப்பகிர்வு யோசனையை முன்வைப்பதை அனுமதிக்கமுடியாது.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த சிலரை மக்கள் விரும்பவில்லை. அதன் காரணமாக புது முகங்களை களம் இறக்கப் போகிறோம் என்று கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர்கள் வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸிகளுக்கு கூறிவந்தனர். எம்மை ஒதுக்க வேண்டும் என்ற அடிப்படையில் எம்மை தூக்கி எறிந்தார்கள். எம்மை ஒதுக்கியமைக்குச் சரியான காரணம் இவர்களால் கூறமுடியாது.

தேசியம்,சுயநிர்ணய உரிமை, தனித்துவ இறைமை கொண்ட தேசம் என்ற அடிப்படையிலான தீர்வுத் திட்டம் என்று கூட்டமைப்பு வாக்குறுதி தந்திருந்தால் நாம் தேர்தலில் இருந்து ஒதுங்கியிருப்போம். அந்த வகையில் தீர்வுத் திட்டம் முன்வைக்க முடியாது என்று கூட்டமைப்பினர் கூறியதாலேயே தனித்துப் போட்டியிட முடிவு செய்தோம்.

## தேர்தல் முடிந்ததும் மக்கள் மட்டத்தில் கட்டமைப்பு உருவாக்கிச் செயற்படுவோம்

தமிழ்த் தேசியத்தை உறுதியாக வளர்த்தெடுக்கவும், மக்களின் மீள் குடியமர்வை துரிதப்படுத்தவும் புலம்பெயர்ந்த மக்களின்,தொண்டு நிறுவனங்களின் உதவியைப் பெற்று எமது கொள்கையை முன்னெடுப்போம். எக்காரணம் கொண்டும் தமிழ்த் தேசியத்தை அழிக்க இடமளிக்க மாட்டோம்.

தடுப்பு முகாம்களில் உள்ள முன்னாள் போராளிகளை விடுவித்து அவர்களுடைய குடும்பங்களுடன் இணைக்க நடவடிக்கை எடுப்போம். உயிரிழந்த போராளிகளின் குடும்பங்களின் நிலையை மேம்படுத்துவோம். போரில் கொல்லப்பட்ட மக்களின் குடும்பங்களுக்குச் சர்வதேச நியமத்துக்கு ஏற்ப நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொடுப்போம்.




வன்னியில் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக சர்வதேச விசாரணை இடம்பெற அழுத்தங்களைச் சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்துவோம்.

சுயநிர்ணய அடிப்படையில் தனித்துவமான இறைமை கொண்ட தேசம் என்ற அடிப்படையில் தனித்துவத்தை நிலைநாட்டக்கூடிய தீர்வு முயற்சிக்குப் பாடுபடுவோம்.

தேர்தல் முடிவடைந்த பின்னர் மக்கள் மட்டத்தில் கட்டமைப்பை உருவாக்குவோம். புத்தி ஜீவிகள்,கல்விமான்கள் ஆகியோரை உள்வாங்கி உருவாக்கும் இக்கட்டமைப்பு மூலம் அனைத்துத் திட்டங்களும் முன்னெடுக்கப்படும்.

**கேள்வி:** வெளிநாட்டுக்குச் சென்ற தாங்கள் ஜனாதிபதியுடன் ஒப்பந்தம் ஒன்று செய்ததன் மூலம் நாடு திரும்பியதாகக் கூறப்படுவது குறித்து....?

**பதில்:** இந்தக் குற்றச்சாட்டை முற்று முழுதாக மறுக்கிறேன். ஜனாதிபதியிடம் அடிபணியுமளவுக்குச் சுயநலவாதியல்ல. எந்தவொரு சிங்களத் தலைமையிடமும் அடிபணியும் சுயநலம் கொண்டவன் அல்ல.

விடுதலைப் புலிகளை அழிப்பது என்ற போர்வையில் மகிந்த முன்னெடுத்த போர் புலிகளை அழிப்பது மட்டும் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கை மீண்டும் எழாத வகையில் தமிழ்த் தேசியத்தை அழிக்கும் நோக்கம் கொண்டதாகவே இருந்ததை அவதானிக்க முடியும்.

புலிகளுடன் தொடர்பு இல்லாத ஆயிரக் கணக்கானவர்களைத் துணை இராணுவக் குழுக்களும் இராணுவமும் கொலை செய்தது, கடத்தியது என்பதை புலிகளின் அழிவுடன் தமிழ்த்தேசியத்தின் குரல்களும் அழிக்கப்படவேண்டும் என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்த்தான்.

புலிகள் அழிக்கப்பட்ட பின்னரும் தமிழ்த் தேசியக் கொள்கையை அழிக்க முடியாது என்பதை இன்று சிங்களத் தலைமைகள் உணர்ந்துள்ளன.

முள்ளிவாய்க்காலுடன் தமிழ்த் தேசியம் அழிந்ததாக மார் தட்டிய சிங்களப் பேரினவாதிகளுக்கு எதிராக தமிழ்த் தேசியப் போராட்டம் புத்துயிர் பெற்றுள்ளது.

30வருடங்களாகத் தமிழ்த் தேசியத்தை அழிக்க முயன்று வரும் மகிந்தவுக்கு ஆதரவு அளிப்பதாக யாராவது கூறினால் அது ஏற்க முடியாத ஒரு விடயமாகும்.

2004ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட நான் 2006 ஆம் ஆண்டில் இருந்து 2008 ஆம் ஆண்டு வரை வன்னியில் குடும்பத்துடன் வாழ்ந்தேன். இக்காலப்பகுதியில் அங்கிருந்தே நாடாளுமன்றத்துக்குச் சென்றேன். இக்காலப்பகுதியில் சட்ட ரீதியான பிரச்சினை ஏதும் இருக்கவில்லை.

*சந்தித்தவர் : குணா*

2008ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி வெளிநாட்டுக்குப் போனேன். வன்னியில் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த போரை நிறுத்த, புலம்பெயர்ந்த மக்களுடன் இணைந்து சர்வதேசத்துக்கு அழுத்தம் கொடுக்கவே போனேன். தேசியத் தலைமையின் பணிப்பின் பேரிலேயே வெளிநாட்டுக்குப் போனேன்.

இதன்பின் 2009 டிசெம்பர் 19ஆம் திகதி என்னுடன் சேர்ந்து மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. பிரிவினைக்கு எதிராகப் பேசியதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. சட்ட நுணுக்கங் காரணமாக அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

எம்மை அச்சுறுத்தி முடக்குவதற்காகவே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி நாடு திரும்பினேன். போர் முடிந்து ஆறு மாதமாகிய போதும் நிலைமைகள் அப்போது தலைகீழாகவே இருந்தன.

# அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றி 10வயது மாணவரிடம் அரசியல் நடத்தும் வேட்பாளர்

## கவலை தருகின்றது என்றார் இ.தொ.கா. உபதலைவர்

கொழும்பு,ஏப்.2

அப்பாவி மலையக மக்களை அரசியல் கட்சிகள் ஏமாற்றுகின்றன என அறிக்கை விடுபவர்கள் தமது வெற்றிக்காக 10 வயது பாடசாலை மாணவர்களிடம் அரசியல் நடத்தும் கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும், இது குறித்து தாம் கவலையடைகிறார் என்றும் பிரதியமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உபதலைவருமான ஏ.ஜெகதீஸ்வரன் கூறினார்.

பொதுத்தேர்தல் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்,

அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் ஊடகவியலாளர் ஸ்ரீரங்கா இப்பகுதி பாடசாலைகளில் தரம் 5 இல் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு தனது படம், பெயர், தேர்தல் சின்னம் மற்றும் இலக்கம் ஆகியவற்றைப் பொறித்து இலவசமாகப் பயிற்சி புத்தகங்கள் வழங்கிவருகின்றார்.

இது தேர்தல் விதிக்கு முரணானது. அதே வேளை, அவரது வங்குரோத்து நிலைமையையும் எடுத்துக்காட்டுகின்றது. நடுநிலையான ஊடகவியலாளர் என அவ்வப்போது கூறிவரும் இவர் இவ்வாறான செயலைச் செய்யலாமா? இதே மாவட்டத்தில் வேறு பல பாடசாலைகளிலும் இவ்வாறு இலவசமாகப் பயிற்சி புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

நாம் இதுகுறித்து தேர்தல் திணைக்களத்தில் முறையிடுவதுடன், பாடசாலை மாணவர்களுக்கு இந்த தேர்தல் பிரசாரப் பயிற்சி புத்தகங்களை வழங்க அனுமதித்த பாடசாலை நிர்வாகத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் ஆலோசனை செய்து வருகின்றோம். என்று உள்ளது. (ஒ-சி)

# தீட்டிய மரத்தில் கூர் பாராதீர்!

18.03.2010இல் வெளிவந்த உதயன் வாசித்தேன். அதில் முன்னாள் ஆசிரியை திருமதி பத்மினி சிதம்பரநாதனுடைய பேட்டி ஒன்று இருந்தது.

அப்பேட்டியில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்றவர்கள் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட தனக்கு இடம் தரவில்லை எனக் கடிந்துகொண்டார். ஆனால் இரா.சம்பந்தனையும் உயர்தலைவர்களையும் தோற்கடிப்பதே தமது திட்டம் எனவும் குறிப்பாக சம்பந்தனை தோற்கடிக்க தமது அணி திருகோணமலையில் போட்டியிடுவதாகவும் கூறியுள்ளார்.

திருகோணமலையில் தமிழருக்கு கிடைக்கவேண்டிய ஆசனத்தில் ஓர் ஆசனத்தை ஆவது ஒரு சிலரின் சுயநலத்திற்காகவோ அல்லது கபட நோக்கத்திற்காகவோ பறிகொடுப்பதா? தமிழ்மக்களே சிந்தியுங்கள்! குருதி சிந்திய தேசத்திலே வாக்குகளும் சிந்தவேண்டுமா? தமிழன் உடல்கள் சிதறிய மண்ணில் வாக்குகளும் சிதறவேண்டுமா?

**மக்கள் மடல்**

நாம் ஒன்றுபட்ட இனம் வென்றுவிடத்துடிக்கும் இனம் என உலகிற்கு இனங்காட்ட வேண்டாமா?

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்போர் பலர் எம் மண்ணில் மக்களோடு மக்களாக மக்கள் பணி ஆற்றுகின்றார்கள் அவர்களுக்கு அவ்வப்போது தேர்தலில் போட்டியிட வாய்ப்புகள் கொடுக்க வேண்டும்.

தனி மனிதனை அதாவது சம்பந்தனை திருமலையில் அவர் சொந்த மண்ணில் தோற்கடிக்க வேண்டும் என்ற பத்மினி சிதம்பரநாதனதும் அவர் சார்ந்த காங்கிரஸ் கட்சியினதும் கோட்பாடு முற்றுமுழுதாக சுயநலத்தின் வெளிப்பாடேயாகும்.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் திரைமறைவுச் சதியினாலும் எம்மவரின் காட்டிக்கொடுப்புகளாலும் பின்னடைவு அடைந்தது.

தமிழ்மக்களின் ஒற்றுமையின் சின்னமான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்ற மாபெரும் கட்சியை பத்மினிக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காக தமிழ் மக்கள் இழக்கத்தயாரில்லை

காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்திக்கும் காங்கிரஸ் செயலாளர் கஜேந்திரகுமாருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இடம் ஒதுக்கப்பட்டது.ஆனால் கஜேந்திரகுமாரோ ''பல்டி'' அடித்தார் என்பதே பொதுவான கருத்தாக உள்ளது.

தீட்டிய மரத்தில் கூர் பார்ப்பதும் கோடரிக்காம்புகளாக இருப்பதும் நம்மில் பலருக்கு கைவந்த கலை தமிழ் மக்களின் ஒற்றுமையின் பலத்தை உலகம் உற்றுநோக்க இருக்கின்றது.

''தர்மத்தின் வாழ்வதனை சூது கவ்வும்
தர்மம் மறுபடியும் வெல்லும்''

ஜே.அலன், யாழ்ப்பாணம்.

# இந்த நாடாளுமன்றத் தேர்தலுடன் இனவாத அரசியல் முடிவுக்கு வரும்

## அமைச்சர் பைஸர் முஸ்தபா கூறுகிறார்

கம்பளை,ஏப்ரல்2

இந்தப் பொதுத்தேர்தலுடன் இனவாத அரசியல் முடிவுக்கு வந்துவிடும். இனவாதத்தை மூலதனமிட்டு அரசியல் புரிபவர்களுக்கு மக்கள் பொதுத்தேர்தலில் பாடம் படிப்பிப்பர் - என்று சுற்று லாத்துறை ஊக்குவிப்பு அமைச்சரும், கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளருமான பைஸர் முஸ்தபா குறிப்பிட்டார்.

கம்பளை பெபிளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இனவாதம் பேசி மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்ட காலம் மலையேறிவிட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சகல இனத்தவர்களையும் சமமாகக் கருதிச் செயற்படுகின்றார். நான் சமூகத்திற்கு ஒரு போதும் துரோகம் இழைத்தவன் அல்லன். நான் சமூகத்திற்கு துரோகம் இழைத்துள்ளேன் என்று எவராவது நிரூபிப்பார்களாயின் அரசியலில் இருந்து ஒதுங்கத்தயாராயுள்ளேன்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி இன்னும் எட்டு ஆண்டுகள் தொடரும். எனவே, முஸ்லிம்கள் அரசுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடியும். எதிரணியில் இருந்துகொண்டு சமூகத்திற்கு எதுவித நம்மையையும் பெற்றுக் கொடுக்க முடியாது.

முஸ்லிம் சமூகம் அரசைக் கறிவேப்பிலையாகப் பயன்படுத்திக்கொள்ளமுடியும் என்று எண்ணிவிடக்கூடாது. இந்தப் பொதுத்தேர்தலில் அரச தரப்பின் வெற்றியில் முஸ்லிம்கள் பங்காளராக மாறவேண்டும்.

கண்டி மாவட்ட முஸ்லிம்கள் எனது வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும். எனது வெற்றி தனிமனிதன் வெற்றி அல்ல அது சமூகத்தின் வெற்றியாகும்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்

# சரவணா ரெக்ஸ்



526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி)
சிவன்கோயிலுக்கு அருகில், யாழ்ப்பாணம்.

புதுவருடத்தை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
14.03.2010 - 15.04.2010 வரை



ரகங்கள் பல விதம் தரத்தில் முதலிடம்

- ✱இந்தியன் பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள்
- ✱இந்தியன் பன்சி சாறிகள்
- ✱இந்தியன் கொட்டன் சாறிகள்
- ✱இந்தியன் சீக்குன்ஸ் சாறிகள்
- ✱இந்தியன் சில்க்ஸ் சாறிகள்
- ✱இந்தியன் சில்க் பஞ்சாபித் துணி
- ✱கொட்டன் பஞ்சாபித் துணி
- ✱பாகிஸ்தான் கொட்டன் பஞ்சாபித் துணி
- ✱சேட், ரீசேட்
- ✱ரெடிமேற் ஆடைகள், சாறிபிளவுஸ்
- ✱துணிகள் சகல கலர்களிலும் உள்ளன.
- ✱மற்றும் விதம்விதமான சாறிகள் ஏராளம், ஏராளம்.

புதுவருடத்தை முன்னிட்டு
புத்தம் புதிய தெரிவுகள் விசேடமாக
இறக்குமதி செய்யப்பட்டு
விற்பனையாகின்றன. தெரிவுகளுக்கு
இன்றே விரையுங்கள்

குறிப்பு:
புதுவருடத்தை முன்னிட்டு தினசரி
வாடிக்கையாளர்களின் நலன்கருதி காலை
8 மணி முதல் இரவு 9 மணிவரை
வியாபாரம் நடைபெறும்.



# நாடாளுமன்றத் தேர்தல் - 2010



✱முன்னைய இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களில் தெரிவு செய்யப்படாத போதும் தொடர்ந்தும் மக்களுக்காக குரல் கொடுத்தமையும் பொது சேவைகளில் ஈடுபட்டமையும்.

✱ஓய்வு பெற்று பதினைந்து வருடத்தின் பின்பும் மாநகரசபை ஆணையாளராக மீள் நியமனம் பெற்றமையும், பல வருடங்களாக நிரந்தர நியமனம் வழங்கப்படாது போராடிக்கொண்டிருந்த சுமார் இருநூறு பேர் வரை நிரந்தர நியமனம் வழங்கியதுடன், மாநகரசபையின் நிதிநிலையைச் சீர்செய்து ஸ்திரப்படுத்தியமை.

## சி.வீ.கே.சிவஞானம்

(முன்னாள் மாநகரசபை ஆணையாளர்)

X

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

| X | 12 | தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு |
|---|---|---|

(சி/566349) எப்பொழுதும் மக்களுடன் இம்மண்ணில்



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல: 2109 திகதி: 31-03-2010

ஆங்கில எழுத்திற்கும் J

வெற்றி எண்கள் 48 54 55 65

போனஸ் இல: 33

ஜக்பொட் பரிசு ரூ. 13,903,025/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 179707 | 20/- | 3,594,140/- |
| 2 இல | 12964 | 100/- | 1,296,400/- |
| 3 இல | 276 | 1,000/- | 276,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7141 | 40/- | 285,640/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 476 | 1,000/- | 476,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 13,903,025/- | - |
| 1 இல + போனஸ் இல | 8595 | 100/- | 859,500/- |
| 2 இல + போனஸ் இல | 394 | 500/- | 197,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 308 | 200/- | 61,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 20 | 1,500/- | 30,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,576,280/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 209906 | | 9,176,280/- |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - K.W. காமினி - திருகோணமலை.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - H.D. தீலக் நந்தன - பேருவலை.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 201767456-0-39 |
| கண்டி | 201764584-1-31 |
| கொழும்பு | 201781877-2-01 |
| மாத்தளை | 201763881-2-15 |
| பதுளை | 201770024-9-15 |
| மொணராகலை | 201765752-6-01 |
| திருகோணமலை | 201776436-5-45 |
| புத்தளம் | 201762842-6-04 |
| நுவரேலியா | 201771078-8-32 |
| அநுராதபுரம் | 201771293-4-02 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ.14,393,675/-

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2335546/7


## காணாமற் போன பண்டார வன்னியன்!

ஒட்டுசுட்டான்,ஏப்.2

வன்னி மன்னன் பண்டார வன்னியன், தெய்வப் புலவர் வள்ளுவர் ஆகியோருக்கு வன்னி கற்சிலை மடுவில் நிறுவப்பட்டிருந்த சிலைகள் கனரக வாகனங்களால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாவீரன் பண்டார வன்னியனின் நினைவு தினம் வருடந்தோறும் தமிழர் பிரதேசங்களில் கொண்டாடப்படுவது வழக்கம். தற்போது அந்த வீரனின் உருவச்சிலையும், கற்சிலை மடுவில் அமைந்துள்ள 1803ஆம் ஆண்டு பண்டார வன்னியன் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டமையைக் குறிக்கும் நினைவுக் கல்லின் ஒரு பகுதியும் அழிக்கப்பட்டு விட்டன. இவ்வாறான செயல்கள் தமிழ் மக்களின் வரலாற்றுச் சின்னங்கள் அழிக்கும் நடவடிக்கையே என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(ஒ-க-341)

## பல்வேறு அமைப்புக்களுக்கு அமைச்சர் டக்ளஸ் உதவி

யாழ்ப்பாணம்,ஏப்.2

புங்குடுதீவு அம்பாள் கிராமிய கல்வி அபிவிருத்திக் குழுவின் மேம்பாட்டிற்கென ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் வழங்கியுள்ளார். ஏற்கனவே இக் கிராமியக் கல்வி அபிவிருத்திக் குழுவுக்கு ஒரு லட்சம் ரூபாவை அமைச்சர் வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி, பூநகரியைச் சேர்ந்த வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 54 ஆயிரம் ரூபாவையும் எழுவைதீவு மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்திற்குத் தையல் இயந்திரங்களையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் வழங்கியுள்ளார்.

(ஓ)


# பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ் பல்கலைக்கழகத்தின் 25 ஆவது
பட்ட மளிப்பு விழாவில் 26.03.2010
அன்று **B.A (Hons)** பட்டம் பெற்ற
செல்வி கௌசிகா தங்கராசா (வாணி)
அவர்களைப் பல்கலையும் பெற்று மேலும்
பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

அத்தான் ( நிருபன்),
அறிவொளி வீதி, புத்தூர். (96235) அக்கா ( கௌசல்யா).



# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 . 12 . 1984

உதிர்வு 23 . 03 . 2000



## செல்வன் வாமதாசன் சங்கரதாசன்

(கண்ணா - யா/மத்திய கல்லூரி மாணவன்)

திதி: அபரபக்க சதுர்த்தி (02.04.2010)

சங்கரனார் உவந்தளித்த சங்கரனே!
சடுதியிலே எமைப் பிரிந்தாய் எங்ஙனமே?
உமது உயிர் எமைப் பிரியும் வேளையிலே
பதைத்து நின்ற உறவுகள் தான் எத்தனையோ?

பத்தாண்டுகள் சென்றாலும் ஓயவில்லை உம் நினைவு!
நீராண்ட மனமெல்லாம் உமை நினைந்து துடிக்கிறது!
பாராண்ட உம் உறவு பாதியிலே முடியுமென்று
யாராலும் நினைக்கவில்லை யமன் உம்மை வெல்வான் என்று?

எம் குடும்பக் குல விளக்கே! எமையேன் தவிக்க விட்டீர்?
உம் வளர்ச்சி பாதியிலே தேய்பிறைகள் ஆனதேனோ?
காலமெல்லாம் உமை நினைந்து கண்ணீரை வடிக்கின்றோம்!
ஞாலமதில் துதிக்கின்றோம் நாகம்மை பதம் சேர்வீர்!

உமது பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா,
மைத்துனர், மைத்துனி, சித்தி, சித்தப்பா,
பெரியப்பா, பெரியம்மா, மாமா, மாமி,
அன்புச் சகோதரர்கள், உற்றார்,
உறவினர்கள்.

தகவல்:
திரு.கோ.வாமதாசன் (தந்தை)
'ஸ்ரீஅம்பிகை'
வட்டாரம் 3, நயினாதீவு.

(சி/566356)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாதக் கட்சிகளுக்கு தமிழர் ஆதரவளிப்பது இனப் படுகொலைகளை ஏற்பதற்கு ஒப்பானது

## சித்தாண்டியில் சம்பந்தன் ஆவேசம்



வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் சுய நிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி ஆட்சி ஒன்றின் மூலமே தமிழ் மக்கள் நிம்மதியான வாழ்வைப் பெற முடியும்.

பேரினவாதக் கட்சிகளுக்கு ஆதரவளிப்பது மஹிந்த அரசு நடத்திய படுகொலைகளை ஏற்றுக் கொண்டதாக அமைந்து விடும்-

- இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மட்டக்களப்பு சித்தாண்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

தமிழர்கள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்கின்றார்கள். அவர்களுக்கென தனியான கலாசார விழுமியங்கள், பண்பாடு என்பன உள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்திலும் ஒரு நாட்டில் பூர்வீகமாக வாழ்கின்ற சமூகத்தினது சுயநிர்ணய உரிமைகள் மதிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கூறப்படுகின்றது. இதனடிப்படையில் தான் நாங்கள் சுயாட்சி வேண்டிப் போராடுகின்றோம்.

ஆயுதம் ஏந்தி போராடிய விடுதலைப் புலிகளை கடந்த வருடம் மே மாதம் நடந்த யுத்தத்தில் முற்றாக அழித்துவிட்டதாகக் கூறுகின்ற இலங்கை அரசு, பல்லாயிரக்கணக்கானத் தமிழ் மக்களைப் படுகொலை செய்தது மாத்திரமன்றி, சிறைக்கூடங்களான முகாம்களிலும் அடைத்துள்ளது. இந்த நிலையில் சர்வதேச சமூகம் தமிழர்களுக்கான தீர்வுத் திட்டம் பற்றியும் அதை அவர்களுக்கு வழங்கும்படியும் கேட்டுக்கொண்டிருக்கின்றது. இந்த நேரத்தில் தான் நாங்கள் வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் களின் தாயகப் பிரதேசத்திற்குச் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி ஆட்சி முறையிலான தீர்வுத்திட்டத்தைத் தயாரித்துள்ளோம்.

இந்தத் தீர்வுத் திட்டத்தை நாங்கள் அரசிடம் சமர்ப்பித்து நடைமுறைப்படுத்து மாறு கோருவதற்கு எதிர் வருகின்ற பொதுத் தேர்தலில் வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள் எங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 23 ஆசனங் களையும், எமது தமிழ் தேசிய கூட்டமைப்புக் கைப்பற்றினால் மாத்திரமே தமிழ் மக்களுக்குரிய சுயநிர்ணய உரிமைப் போராட்டமானது ஓய்ந்துவிடவில்லை இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற நிலைமை ஏற்படும்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளைச் சர்வதேசத்திற்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடுவதாக அமையும். இல்லையேல் மஹிந்த அரசு, சொல்வதையும் பயங்கரவாதிகளை அழிப்பதாகச் சொல்லி, ஆயிரக் கணக்கான அப்பாவிப் பொதுமக்களை வகைதொகையின்றி அழித்ததையும் தமிழர்களாகிய நாமே அதை சரியென ஏற்றுக்கொண்டதாக அமைந்து விடும். இதைத் தமிழ் மக்களாகிய நாம் புரிந்துகொண்டு எதிர்வருகின்ற தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பை வெற்றியடையச் செய்ய வேண்டும் - என்றார்.

இக்கூட்டத்திற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரான சி.யோகேஸ்வரன் தலைமை தாங்கினார். (ஒ-சி)

# வரலாற்றுச் சிறப்பை, பண்பாட்டைப் பேணும் நல்லூரில் நட்சத்திர ஹோட்டல் எதற்கு?

## எமது கலாசாரத்தை அவமதிக்கும் செயல் என்கின்றார் சிவசந்திரன்

யாழ்ப்பாணம், ஏப். 02

நல்லூரில் நட்சத்திரக் ஹோட்டல் கட்டப்படுவது எமது கலாசாரத்தை அவமதிக்கும் செயல் என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் இரா.சிவசந்திரன் கடந்த செவ்வாய்க்கிழமை நாவாந்துறை சனசமூக முன்றிலில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:- யாழ்ப்பாணத்தில் தமக்கு ஆதரவு இல்லாத நிலையில் அரசாங்கம் யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்கின்றோம் என்று கூறிவாக்குப் பறிக்கும் வேலையை அவசர அவசரமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவேற்றியுள்ளது.

'ஹோட்டல் நல்லூர்' என பெயரிட்டு நான்கு நட்சத்திர ஹோட்டல் ஒன்றை கட்டுவதற்கான அத்திபாரக்கல் நடும் விழவை நடத்தியுள்ளது. இவ்விழாவில் மத்திய வங்கி ஆளுநர், அரச அதிபர் கே. கணேஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் பங்கு கொண்டிருந்ததைக் காணமுடிந்தது.

நல்லூர் இராசதானியின் நினைவுச் சின்னங்களான சங்கிலியன் வளைவு, மந்திரிமனை, சட்டநாதர் சிவன் கோயிலுக்கு அருகில் நூறு யார் தூரத்தில் இந்த நட்சத்திர ஹோட்டல் அமைக்கப்படவுள்ளமை யாழ்.கலாசாரச் சீரழிவின் ஆத்திபார இடுகை என யாழ்ப்பாணவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர். அநுராதபுரம், பொலநறுவையில் கலாசார முக்கோணங்களை அமைத்து தமது வரலாற்றுச் சின்னங்களைப் பேணிவருகின்ற சிங்கள அரசு இங்குள்ள கலாசார மையத்தில் நான்கு நட்சத்திர ஹோட்டல் கட்டுவது எமது கலாசார சீரழிவுக்கான ஆரம்பம் என்பதை தமிழர்கள் புரியாமல் இல்லை. இவர்கள் ஹோட்டல் கட்டுவதற்கு யாழ்ப்பாணத்தில் வேறு இடம் இல்லையா? கடற்கரைகள் சூழவுள்ள யாழ்.குடாநாட்டில் பொருத்தமான இடத்தை தெரிந்திருக்கலாம் அல்லவா?

எமது இராசதானி அமைந்திருந்த ஆலயங்கள் அமைந்துள்ள நல்லூரில் ஏன் இந்தக் ஹோட்டல்? நட்சத்திர ஹோட்டல்களில் என்ன நடக்கும் என்பதை நாம் அறியாதவர்கள் இல்லை. சூழல் பேண் சுற்றுலாத்துறையும் தங்குமிடங்களும் வளர்த்தெடுக்கப்படுவதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் இவர்கள் அபிவிருத்தி என்ற போர்வையில் எம் பண்பாட்டை நாசம் செய்கிறார்கள். இதனால் தான் நாம் எமக்கான அபிவிருத்தியை நாமே மேற்கொள்ளவேண்டும் என்கிறோம். நல்லூரில் நட்சத்திர ஹோட்டல் கட்டும் முயற்சியை யாழ்.பொதுமக்கள் எதிர்க்கின்றார்கள். இதனை அரசாங்கத்தின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம் எனத் தெரிவித்தார். (ஒ)




# தமிழ் அரசியற் தரப்பின் ஒற்றுமையை சிதறடித்தவர்கள் கூட்டமைப்பின் ஒரு சிலரே

## பிரசாரக் கூட்டத்தில் த.தே.ம. முன்னணியின் வேட்பாளர் கென்னடி

யாழ்ப்பாணம், ஏப். 2

தமிழ் அரசியற் தரப்பினரின் ஒற்றுமையைச் சிதறடித்த பெருமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ஒரு சிலரையே சாரும். இவ்வாறு குற்றம் சாட்டுகிறார் தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியின் வேட்பாளர் கலாநிதி கென்னடி விஜயரத்தினம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மந்தாளோடையில் இக்கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

இளைய தலைமுறை தலைமைகள் எவ்வளவோ விட்டுக் கொடுப்புக்களைச் செய்தும் அவை தட்டிக்கழிக்கப்பட்டன. தமிழர் தேசம் தொடர்பான அடிப்படை நிலைப்பாட்டிலிருந்து கூட்டமைப்பின் மூத்த தலைமைகள் விலகியதாலேயே வேறு வழியின்றி தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணி உருவாகியது. இது துரதிஷ்டமானது என்றாலும் தவிர்க்க முடியாதது.

இதற்கான முழுப் பொறுப்பையும் அம்மூத்த தலைவர்களே ஏற்றுக்கொண்டு கொள்கை பிறழாத இளைய தலைமுறைக்கு வழிவிடவேண்டும். முதிர்ந்த நிலையிலும் தந்தை செல்வா கொள்ளையைக் கை விடவில்லை. மாறாக கொள்கையுறுதி அதிகரித்தது. ஆனால் அவர் வழிவந்தவர்கள் எனக்கூறிக்கொள்பவர்கள் முதிர்ச்சியற்று அடிப்படைக் கொள்ளைகளைக் கைவிட்டுவிட்டனர் - என்றார்.

இக்கூட்டத்தில் மற்றும் பலரும் உரையாற்றினர். (ஒ-16)

# எமது மக்களின் விடியலுக்காகவே தனித்துப் போட்டியிட முடிவெடுத்தோம்



அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் சார்பில் சுயேச்சைக்குழு - 03 இன் கீழ் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் அதன் பொதுச் செயலாளரும் சட்டத்தரணியுமான பி.ஜே.அன்ரனி (மாஸ்ரர்) வழங்கிய செவ்வி இது.

கேள்வி: தற்போதைய நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் தலைமை வகிக்கும் மகாசபையின் சார்பில் போட்டியிடுவதன் நோக்கம் என்ன?

பதில்: தொகுதி வாரியாக நடைபெற்ற தேர்தல்களில் எமது உரிமை குறைந்த மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் உரிய முறையில் கிடைக்கவில்லை. ஆனால் விகிதாசார முறையிலான தேர்தலில் அவர்களுக்கு உரிய பங்கு கிடைப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐ.தே.க. அரசாங்கத்தால் விகிதாசார பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டபோதும் பல்வேறு அரசியல் சூழ்நிலைகள் காரணமாக எம்மால் தனித்துப் போட்டியிட்டு எமக்குரிய பங்கினைப்பெற முடியாத நிலையே இருந்தது - தற்போதுதான் அதற்குரிய சூழ்நிலை கனிந்துள்ளதாகக் கருதுகிறேன் - இதன் காரணமாகவே தற்போதைய தேர்தலில் தனித்துப் போட்டியிடுகின்றோம்.

கேள்வி: இங்கே போட்டியிடும் அநேகமாக எல்லாக்கட்சிகளிலும் நீங்கள் குறிப்பிடும் உரிமை குறைந்த மக்கள் வேட்பாளர்களாக உள்ளனர். அவர்களுக்கு நீங்கள் ஆதரவளிப்பதன் மூலம் அவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி அவர்கள் மூலமாக உங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் அல்லவா?

பதில்: நான் அவ்வாறு நிகழும் என எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால் அவர்கள் தாம் சார்ந்த கட்சியின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவர்கள். அவர்களால் சுயமாக எதையுமே செய்ய முடியாது. இதைத் தான் கடந்த கால அனுபவங்கள் எமக்கு உணர்த்துகின்றன. ஆகவே எமது மக்க ளின் விடியலுக்காக தனித்துப் போட்டியிட முடிவெடுத்தோம்.

கேள்வி: இப்போது பொதுவாகவே சுயேச்சைக்குழுக்கள் யாவும் வாக்குகளைச் சிதறடிக்கும் நோக்கத்துடன் அரசாங்கத்திடம் பெருந்தொகைப் பணம்பெற்றுக் கொண்டு செயற்படுகின்றன என்ற குற்றச்சாட்டு உள்ளது. இதற்குத் தாங்கள் கூறும் பதில் என்ன?

பதில்: இதை நான் வன்மையாக மறுக்கின்றேன். ஒரு சிலர் இவ்வாறு நடந்திருக்கலாம். அல்லது இல்லாமலும் இருக்கலாம் - ஆனால் எமது மகாசபை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யாமல் இருப்பதன் காரணமாகவே நாம் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுகின்றோம். அடுத்த தேர்தல் வரும்போது நாம் எமது அரசியல் கட்சியின் சார்பாகவே நிச்சயம் போட்டியிடுவோம். ஆகவே எம்மைப் பொறுத்தவரை பணம் பெற்றுக்கொண்டு போட்டி யிடுகின்றோம் என்ற கேள்விக்கே இட மில்லை.

கேள்வி: எதிர்காலத்தில் நீங்கள் அரசுடன் இணைந்து செயற்படும் உத்தேசம் உண்டா?

பதில்: எம்மைப் பொறுத்தவரை எமது மக்களின் முன்னேற்றம் தான் எமது குறிக்கோள். இதனை எட்டுவதற்கு ஆட்சியமைக்கும் எந்தக் கட்சியைச் சேர்ந்த அரசுக்கும் வெளியிலிருந்து எமது ஆதரவைத் தெரிவித்து எமது மக்களின் சகல குறைகளையும் நீக்குவதற்குப் பாடுபடுவோம். எந்த அரசுடனும் இணைந்து பதவிகளைப் பெறுவது எமது நோக்கமல்ல. எமது அடிப்படைக் கொள்கைகளைவிட்டு ஒரு போதும் விலகியிருக்க மாட்டோம். நாம் சார்ந்த மகாசபை என்ன நோக்கத்திற்காக தோற்றுவிக்கப்பட்டதோ அதனை நிறைவேற்றி வைப்பதற்கு கொள்கைப் பிடிப்புடன் நாம் தொடர்ந்து உழைப்போம். மேலும் நாம் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள் அல்லர் என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

## சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் சுயேச்சைக்குழு வேட்பாளர் கூறுகிறார்

**சந்திப்பு: ராஜராஜன்**

கேள்வி: தமிழ் மக்களுக்கு எந்தவித அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டுமென நீங்கள் எதிர் பார்க்கின்றீர்கள்?

பதில்: தமிழ் மக்களுக்கு இருக்கக் கூடிய குறைபாடுகள் யாவும் நீக்கப்பட்ட, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு அரசியல் தீர்வையே நாம் எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளுக்காக ஏனைய கட்சிகள் குரல் கொடுக்கும் போது நிச்சயம் எமது குரலும் அவற்றுடன் இணையும்.

கேள்வி: இறுதியாக நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்: எமது ஒவ்வெரு நகர்வும் எமது மக்களின் விடியலுக்காகவே அமையும். எம்மோடு பின்னிப்பிணைந்திருக்கும் பனை, தென்னை வளங்களை மேம்படுத்துவதுடன், எமது விவசாய, கைத்தொழில்களை அபிவிருத்தி செய்து பொருளாதார வளர்ச்சி காண்பதோடு தமிழ்மொழி வளர்ச்சிக்கான கலை, கலாசார மேம்பாடுகளையும் காண உழைப்போம்.

ஆகவே தான் நாம் சார்ந்த மக்களின் நலன்களைப் பேணுவதற்காகவே தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணித்தும் வாழ்தல்

ஒவ்வொரு மனிதனுக்கும் பலவிதமான பயங்கள் உண்டு. அந்தப் பயங்களில் முக்கியமானதும் ஆதாரமானதுமானது மரணபயம். மரணபயம் என்பது வெறுமனே உயிரை இழப்பதற்கான பயம் மட்டுமல்ல. மாறாக எதையும் இழப்பதற்கான ஒரு பயமாகவே அது வெளிப்படுகிறது. தந்போதைய நிலையை தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அதில் எதையும் இழந்து விடக்கூடாது என்ற ஆதார உணர்வில் மனிதன் இயங்குகிறான். அதனால் அவனால் அடுத்த படிநிலைக்கு; முன்னேற்ற நிலைக்கு கடந்து போக முடிவதில்லை. ஆனால் உலகு இயங்கு நிலையில் ஒரு அடிப்படை உண்மை ஒரு அழிவிலிருந்து தான் அடுத்த கட்ட ஆக்கம் உருவாக முடியும். மரணத்தில்தான் வாழ்வு மலர முடியும் என்பதாகும்.

கோதுமை மணி மண்ணில் வீழ்ந்து மடியும் போதுதான் அது நிறைந்த பயனைத்தர முடியும் என்பது இயேசு எடுத்தாண்ட ஒரு உதாரணமாகும். ஒரு விதையின் மடிவில்தான் புதிய மரம் உதயமாகின்றது. விதை மடிய மறுத்தால் அது செடியாகப் பிறப்பெடுக்க முடியாது. அது போலத்தான் மனிதனும் தன்னுடைய வாழ்வில் பல விடயங்களுக்கு மடிய மறுத்தால் அவனால் புதிய வாழ்வைக் காணமுடியாது. இத்தத்துவத்தின் அடிப்படையில் தான் இயேசு தன்னுடைய மரணத்தையும் எதிர்கொண்டார். தான் மரணிக்க மறுத்தால் புதியதொரு வாழ்க்கை முறையை உருவாக்க முடியாது என்பதை அவர் தெளிவாக உணர்ந்தார். ஆகவே நன்றுடைய வாழ்வை ஒரு கோதுமை மணியாக்கினார். அவரது நோக்கில் சிலுவை மரணம் புதிய வாழ்வின் ஆரம்பமே.



## தவக்காலச் சிந்தனை



பெரிய வெள்ளி தினமாகிய இன்று இயேசுவின் மரணத்தை நினைவுகூரும் நாம் எமது வாழ்விலும் மரணத்தின் அவசியத்தை உணர்ந்து கொள்வோம். எமக்கு ஒருவரில் வெறுப்பு ஏற்படுகிறது; இந்த வெறுப்பு உணர்வுக்கு நாங்கள் மரித்தால் தான் புதிய உறவு, மகிழ்ச்சி எனும் புதிய வாழ்வுக்கு உயிர் பெற முடியும் இல்லையேல் வெறுப்பின் அவலத்திலேயேதான் நாம் வாழவேண்டி நேரிடும். உறவு ஒன்றை இழந்து கவலை உணர்வுக்குள்ளே மூழ்குகின்றோம். இந்தக் கவலை உணர்வுக்கு இறந்தால் தான் புதிய வாழ்வுக்கு உயிர்பெற முடியும். ஆனால் நாங்கள் அதற்கு இறக்க மறுத்து தினமும் அழுது புலம்புவோமானால் எம் வாழ்வை நாமே அழித்தவராவோம். இவ்வாறு எத்தனையோ பாவப்பழக்கங்களுக்கும், தீய மனப்பாங்குகளுக்கும் நாம் அடிமைகளாக இருந்து கொண்டிருப்போம். இவற்றுக்கெல்லாம் ஒவ்வொன்றாக இறக்கும் போது தான் புதுவாழ்வு பெறுகிறோம். ஆகவே இறப்பும் உயிர்ப்பும் என் பது எமது நாளாந்த அனுபவமாக மாற வேண்டும். எமது பழைய இயல்புகளுக்குத் தினமும் இறக்க தயாராக இருக்கும் போதுதான் புதிய வாழ்வின் வாசல் எமக்காக திறந்திருக்கும். இயேசு எம்மை இறக்க அழைக்கிறார். அவரோடு இறந்தோமானால் அவரோடு வாழ்வோம். இறப்பதற்கு நாம் தயாரா?

அருள்மணி ம.வி.கு.இரவிச்சந்திரன்.


## நாடாளுமன்றத் தேர்தல் - 2010



காலத்தின் தேவையறிந்து
தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே
வாக்களியுங்கள்

K.S. முத்துலிங்கம்

சமூகக்கல்வி ஆசிரியர்

கூட்டணியின் வெற்றி!
தமிழர் ஐக்கியத்தின் வெற்றி!!

X 6

(96228)


## அலுவலகம் அமைந்திருந்த இடத்தில் இராணுவமுகாம்

ஒட்டுசுட்டான்,ஏப்.2

ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள முத்துஐயன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலகம் இருந்த இடம் தற்போது இராணுவ முகாமாக மாறியுள்ளது. அந்தக்காணியில் புதிய கட்டடங்களும் அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் கிராமங்களின் நடுவே அமைந்துள்ள இராணுவ முகாம்களால் மீள்குடியேறிய மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-க-341)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி பாலசிங்கம்

(ஓய்வு பெற்றபரிசாரகர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் B.A.தம்பிலேன், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாலசிங்கம் அவர்கள் நேற்று (01.04.2010) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

முகவரி
36/11, B.A தம்பிலேன்,
வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம்

தகவல்:
மனைவி - பா.சோதிப்பிள்ளை
தொ.பே.: 021 222 5151

(96291)

## ஆறுமுகம் நாகநாதன்

(இளைப்பாறிய திருகோணமலை துறைமுக ஊழியர்)



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நாகநாதன் (31.03.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னப்பிள்ளை தம்பதியினரின் மகனும், அமரர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், உதயகுமாரி, குசலகுமாரி, நிர்மலகுமாரி, ஜஜேந்திரன், விஜயகுமாரி ஆகியோ ரின் அன்புத் தந்தையும் யோகநாதன், சிறிஸ்கந்தராசா, ராசேந்திரகுமார், ஞானராஜா, ஆகியோர்களின் அன்பு மாமனாரும் அசோக், கருண், யதுஷா, நர்மதன், கிஷாந்தி, ஆரணி, சசிகாந், சங்கீதா, ர்திகா, துவாரகா, ஜெய்கிஷன், பவகிஷன், ஆகியோரின் அன்புப் பேரனும் இராமநாதன், திருமதி மகேஸ்வரி சிங்கராசா, காலஞ்சென்றவர்களான திருமதி பூமணி முத்துக்கிருஷ்ணர், திருமதி சோதிமணி தியாகராசா, மற்றும் பத்மநாதன், திருமதி கோகிலாம்பிகை இலங்கைநாதன், பூலோகநாதன், சந்திரநாதன் ஆகியோர்களின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2010) சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

14, கல்கிசன் வீதி,
திருகோணமலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/566358)


யாழ்.மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் இணைந்து நடத்தும்

# மாபெரும் எழுச்சிக் கூட்டம்

காலம்:
03.04.2010
சனிக்கிழமை,
மு.ப.11 மணி

இடம்: கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

கடந்த 11.12.2009 அன்று நடைபெற்ற பனந்தொழில் வல்லுநர் மாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்ட பிரகடனங்களை மீள வலியுறுத்தும் பொருட்டு வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் திரு.த.சிவலிங்கம் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெறவுள்ள இவ் எழுச்சிக் கூட்டத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை

அமைச்சர், கௌரவ டக்ளஸ் தேவானந்தா

அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

## பிரகடனங்கள் :

★ விவசாயம், கடல் வளம் என்பன தேசிய வளங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டது போன்று பனை வளமும் தேசிய வளமாக இருக்கவேண்டுமென பிரகடனப்படுத்துகின்றோம்.

★ பனம் தொழில் வல்லுநர் சமூக, பொருளாதார, கலை, கலாசார விழுமியங்கள் தனித்துவமாகப் பேணப்படவேண்டுமென பிரகடனப்படுத்துகின்றோம்.

★வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இயங்குகின்ற பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், பிரதேச சங்கங்கள், மாவட்ட சங்கங்கள், சம்மேளனம் என்பனவும் இவ் அமைப்பு சார்ந்த பல்லாயிரக்கணக்கான வல்லுநர்கள் அவர் சார்ந்த உறுப்பினர்கள் பணிகொள்ளப்படுவோர் உட்பட பல லட்சத்திற்கு மேற்பட்டோரை உள்ளடக்கிய தேசிய அமைப்பாகும் என்பதனை பிரகடனப்படுத்துகின்றோம்.


★ பனை, தென்னை மரங்களில் இருந்து பெறப்படும் சாற்று உற்பத்தி (கள்) மதுபானம் அல்ல; ஒரு பாரம்பரிய ஔடதம் என்பதனை பிரகடனப்படுத்துகின்றோம்.

எமது வளம்
பெருக்கி வளமான
எதிர்காலம் அமைத்திட
அனைவரும்
அணிதிரள்வோம்.

ஏற்பாட்டுக் குழுவினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட வேளை எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஜனாதிபதியுடன் மேடையில் அமர்ந்திருப்பதையும் கூட்டத்தில் கலந்துகொண்ட பொது மக்களையும் ஜனாதிபதி உரையாற்றுவதையும் மேல் வரிசையிலும் -

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இராணுவத்தினரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளுக்கான திறப்புக்களை உரிமையாளர்களிடம் ஜனாதிபதி கையளிப்பதை கீழ் வரிசைப் படங்களிலும் காணலாம்.

*(படங்கள் - அதிரன்)*

### அண்மையில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கென

# வரணிப் பகுதியில் படையினர் அமைத்த 15 வீடுகள் தளபதியால் நேற்றுக் கையளிப்பு

சாவகச்சேரி, ஏப்.2

தென்மராட்சி வரணிப் பகுதியில் வறிய மக்களுக்கென அமைக்கப்பட்ட 15 வீடுகள் நேற்று வியாழக்கிழமை உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

வன்னிப்பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதி நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட வரணிப்பகுதியைச் சேர்ந்த 15 வறிய குடும்பங்களுக்கே இந்த வீடுகள் வழங்கப்பட்டன.

தென்மராட்சியில் நிலை கொண்டுள்ள 522 ஆவது படையணியால் இரு அறைகள் மற்றும் குசினி - விறாந்தை, மலசலகூடம் அடங்கிய இந்த வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை வர்ணி வடக்கில் உள்ள காளிகோயில் முன்றிலில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவும் கலந்துகொண்டார்.

இராணுவத் தளபதி விசேட ஹெலிகொப்டரின் மூலம் வரணி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இறங்கி நிகழ்வு இடம்பெற்ற இடத்துக்கு இராணுவ வாகன அணிமூலம் சென்றடைந்தார். அங்கு மங்கள வாத்திய சகிதம் - சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலய குரு ஐங்கரன் ஐயாவினால் மலர்மாலை சூட்டப்பட்டு வரவேற்கப்பட்டார்.

அதைத் தொடர்ந்து வரணி வடக்குப் பகுதியில் உள்ள மூன்று புதுமனைகளுக்கு சென்று நாடாவை வெட்டி வீடுகளைத் திறந்து வைத்து வீட்டு உரிமையாளர்களிடம் வீட்டின் திறப்புக்களைக் கையளித்தார். தொடர்ந்து அவர்களுக்கு பரிசுப் பொருள்களையும் வழங்கி வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

வரணிப் பகுதியிலுள்ள 12 வீடுகளின் திறப்புக்கள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் படையினர் சிற்றுண்டிப் பொதிகளை வழங்கினர்.

இந்தநிகழ்வில்வரணிப்பிரதேசத்தில்உள்ள கிராம அலுவலர்கள் பாடசாலை அதிபர்கள், அரச அதிகாரிகள், தளபதி கள், தென்மராட்சி 522 ஆவது பிரிகேட் அதிகாரி லால் பெரேரா உட்பட பலர் கலந்துகொண்டனர். இதற்காக வரணிப் பகுதியில் நேற்று பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (ஒ-131)

## உடுவில் செயலகத்தில் தொடர்பு கொள்க!

யாழ்ப்பாணம், ஏப். 2

உடுவில் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த நளினி தயாபரன் என்பவரது முக்கியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதால் அவரோ அல்லது அவரது உறவினர்களோ எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஒ-10)

# குறிகாட்டுவான்-நயினா தீவு படகுச்சேவை கட்டணத்தைக் குறைக்காதது ஏன்?

## பயணிகள் கேள்வி எழுப்புகின்றனர் இப்படி

புங்குடுதீவு,ஏப்.2

தற்பொழுது எரிபொருள்களின் விலை குறைக்கப்பட்டுள்ள நிலையிலும் நயினா தீவு-குறிகாட்டுவானுக்கான பயணிகள் படகுச்சேவைச் கட்டணம் இதுவரை குறைக்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுவதாவது:-

குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையிலான கடல்வழிப்பாதை சுமார் 2 கிலோமீற்றர் தூரம் கொண்டது. இதற்கு ஆரம்ப காலங்களில் குறைவான கட்டணங்கள் அறவிடப்பட்டு வந்த போதும் கடந்த காலங்களில் நிலவிய அசாதாரண சூழல் காரணமாக இப்படகு சேவைக் கட்டணமும் அதிகரிக்கப்பட்டது.

தற்போது எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்ட நிலையிலும் இப் படகு சேவைக் கட்டணங்கள் இதுவரை குறைக்கப்படவில்லை.

தற்போது நாளாந்தம் தென்னிலங்கை உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்திருப்பதாலும் ஏராளமான பயணிகள் இப் பாதையால் பயணம் செய்ய வேண்டி ஏற்படுகின்றது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கின்றனர்.

இப்படகு சேவையில் ஒருவழிக் கட்டணமாக 20 ரூபா அறவிடப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ-16,188)

# இன்று ஆரம்பமாகும் 'வீரர்களின் போர்' மகாஜனவா? ஸ்கந்தவா? நாளை முடிவு

'வீரர்களின் போர்' என வர்ணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிகளுக்கு இடையே நடைபெறும் இருநாள் துடுப்பாட்டப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

பத்தாவது ஆண்டாக நடைபெறவுள்ள இப்போட்டியில் இதுவரை நடைபெற்ற போட்டிகளில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 2 போட்டிகளில் வெற்றிபெற்று முன்னணியில் உள்ளது.


மகாஜனக் கல்லூரி ஒரு போட்டியில் வெற்றிபெற்றுள்ளது. 6 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்துள்ளன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு ஆர். கஜீதனும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு எஸ். டிலக்ஷனும் தலைமை தாங்குகின்றனர்.

இரு கல்லூரி அதிபர்களினதும் இணைத் தலைமையில் நடைபெறவுள்ள இப் போட்டி மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை சிறப்பிக்கும் வண்ணம் இம்முறையும் மகாஜனக் கல்லூரி மைதானத்திலேயே நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஸ்கந்தா மகாஜனக் கல்லூரிகளின் பழைய மாணவர்கள் மோதும் ஒரு நாள் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மகாஜனக் கல்லூரியின் மைதானத்தில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.


பத்தாவது ஆண்டாக நடைபெறவுள்ள இப்போட்டியில் தொடர்ந்தும் தனது வெற்றியை ஸ்கந்தவரோதயக் கல்லூரி தக்க வைக்குமா? அல்லது தனது கல்லூரியின் நூற்றாண்டை சிறப்பிக்கும் வண்ணம் வெற்றி முத்திரையை மகாஜன பதிக்குமா? என்பது நாளை தெரியும். (6)




அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்)- க.மயில்வாகனம் (பொறுப்பாசிரியர்), சி.டலக்ஷன் (அணித்தலைவர்), திருமதி சி.அனந்தசயனன் (அதிபர்), ப.பார்த்தீபன் (உப அணித் தலைவர்), இ.ஸ்ரீதரன் (பயிற்றுநர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)- முதல்வரிசை க.ஜெயதாஸ், த.டிலோசன், அ.பிரசாந், இ.மதுசன், அ.ஜனார்த்தனன், பா.விஜிந்தன், பா.சஞ்சயன்.

இரண்டாம் வரிசை கி.திலக்ஷன், ப.பத்மகீர்த், ச.கோகிலன், சு.மோசிகீரன், ஜெ.ஜெனந்தன், ம.கஜதீபன், சு.அஜித்.




*அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்)* - த.ஜசிதரன் (பயிற்றுநர்), த.சிவகுமார் (பொறுப்பாசிரியர்) இ.தஜிகன் (அணித் தலைவர்), ஆறு.திருமுருகன் (கல்லூரி முதல்வர்), க.புருசோத்மன் (உபதலைவர்), சி.மகேந்திரன் (பிரதி முதல்வர்), வ.நந்தீஸ்வரன் (உபஅதிபரும் விளையாட்டுத்துறை முதல்வரும்)

*நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)* - தே.சிந்துஜன் வி.விஜயரூபன், வி.லக்ஷன் வெ.பிருத்திவிகன் , யோ.குயின்ரன், தி.தாரனன், வி.ஜீவிசன், சி.வினோத், த.கஜகோபன், இ.சிறீகயன், ஆ.சதீசன், த.சாருஜன், க.விஷ்னுபிரகாஷ், த.நிறோஜன்.

# பெருந்தொகையான புகையிலை கைதடியில் எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், ஏப். 2

புகையிலை பதனிடும் போது தீப்பற்றிக் கொண்டதில் சுமார் இரண்டரை லட்சம் ரூபா புகையிலை குடிலுடன் எரிந்து சாம்பராகியது.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் கைதடி தெற்கு இணுங்கி தோட்ட கந்தசாமி கோவிலடியில் இடம்பெற்றுள்ளது. (ஒ-; 207)

# பாலர் பேச்சுத் திறன் காணும் வைபவம்

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ். பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 14 ஞானக்குழந்தை இல்லப் பாலர் பாடசாலைகளும் இணைந்து வழங்கும் பேச்சுத்திறன் காணும் வைபவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் எஸ். பி.காசிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை பிரதி அதிபர் லயன் எம்.தியாகலிங்கம் கலந்துகொள்வார். (ஒ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகரசபை வீதிக்குப் பெயர் சூட்டுதல்

மக்களின் வேண்டுகோளுக்கிணங்க பின்வரும் வீதிகளுக்குப் பெயர் சூட்டப்படவுள்ளமையால் இதற்கு பொதுமக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்துக்களை/அபிப்பிராயங்களை எதிர்வரும் 2010.04.14ஆம் திகதிக்கு முன்னர் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

| வீதியின் பெயர் | புதிய பெயர் |
|---|---|
| 1.பருத்தித்துறை வீதியையும் சங்கிலியன் வீதியையும் இணைக்கும் வீதி - இணைப்புவீதி. | பண்டாரமாளிகை வீதி |
| 2.கோயில் வீதியிலிருந்து துர்க்கா மணிமண்டபத் திற்குத் தெற்குப் புறமாகச் செல்லும் ஒரு சிறிய வீதி. | செல்வநாயகம் சதுக்கம் |
| 3.சட்டநாதர் கோவில் வீதிக்கு அடுத்துவரும் ஒழுங்கை. | ஒட்டக்கூத்தர் வீதி |

திருமதி யோ. பற்குணராசா,
முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.

# விற்பனைப் பிரதிநிதி தேவை

இலங்கையில் உராய்வு நீக்கி (CALTEX OIL) விற்பனை செய்வதில் முன்னனி நிறுவனமான Chevron Lubricants Lanka PLC நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தல் துறையில் அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதி தேவை. தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**


G.C.E O/L (கணிதம், ஆங்கிலம் உட்பட) 6பாடங்களில் சித்தி
வயது எல்லை - 20-25.
யாழ்.மாநகர எல்லைக்குள் வசித்தல் வேண்டும்.
சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
சந்தைப்படுத்தல் முன் அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.

**சலுகைகள்**

★நிறுவனத்தினால் பராமரிக்கப்படும் உத்தியோகபூர்வ உந்துருளி வழங்கப்படும்.
★விற்பனைத் தரகு உட்பட கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்களது சுய விவரங்களை பூர்த்தி செய்து விண்ணப்பங்களை 05.04.2010 இற்கு முன் எமது அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

அலுவலக முகவரி:
**City Agency, Caltex Depot Operator,**
**No. 158, Stanly Road, Jaffna. T.P. 021 222 2100**






X 7

கிருஷ்ணபிள்ளை
## ஸ்ரீ சரவணபவான்
சட்டத்தரணி

இலங்கையை ஆசியாவின் அதிசயம் ஆக்குவோம்

வளமான வாழ்வுக்கு
சமாதான சக வாழ்வு

பொதுத் தேர்தல் - 2010
தேர்தல் மாவட்டம் - யாழ்ப்பாணம்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## திருமதி சுந்தரலிங்கம் இராசமணி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1935 | 2010 |
| ★ | ★ |
| 04 | 03 |
| ★ | ★ |
| 20 | 03 |



அணையாத தீபமே! எம் அன்புத் தெய்வமே!
பாசமலரே, எமை வாழ வைத்த தீபமே!
எம்மை வாழ வைப்பதற்கு உன்னை மட்டும்
மெழுகுதிரி போல் உருக்கினாய்,
தியாக தீபமே! நாங்கள் ஒருபோதும்
உன்னை மறந்திருக்க மாட்டோம்.

கடந்த 03.03.2010 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (02.04.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னார் சிவபதமடைந்த செய்தி கேட்டு நேரில் சமுகம் தந்து எமது துக்கத்தில் பங்குகொண்டோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆத்மா சாந்தியடைய செல்வச்சந்நிதி முருகன் அருள் வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

இராஜ வீதி,
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# தமிழ் மக்களின் மீதான இன அழிப்புக்கு எதிரான எமது குரல்கள் ஓயப்போவதில்லை...

வன்னி மீதான ஆக்கிரமிப்புப் போரின் போது அரச படைகளால் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் பக்கச் சார்பற்ற சர்வதேச நீதிவிசாரணை நடத்தப்படவேண்டும்.

வன்னிமீதான போரின் போது படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்கு சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நஸ்டஈடு வழங்கப்படவேண்டும்.

வன்னி அகதிகள் மீள்குடியேற்றம் தொடர்பான விடயங்கள் சர்வதேச நிறுவனங்களின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மன்னிப்பளித்து விடுதலை செய்யப்படவேண்டும்.

அரச கட்டுப்பட்டுப் பகுதிகளில் அரச படைகளாலும் துணை இராணுவக் குழுக்களாலும் கடத்தப்பட்டுக் காணாமல் போனோர் தொடர்பாக சர்வதேச நீதிவிசாரணை நடத்தப்படவேண்டும்.

தமிழ் இனத்தை அழிப்பதற்கு பயன்படுத்தி வந்த அவசர காலச்சட்டம், பயங்கரவாதச் சட்டம் என்பன உடன் நீக்கப்பட வேண்டும்.

தமிழர் தாயகப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட இராணுவ மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.



## செல்வராசா கஜேந்திரன்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
முன்னாள் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்



X 12

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

# தேவாரப் பண்ணிசை இலவசப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப். 02

அகில இலங்கை திருமுறைமன்றத்தினதும் வட இலங்கை சங்கீத சபையினதும் பாடவிதானத்துக்கமைய அகில இலங்கை திருமறைமன்றத்தினர் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சியை வழங்கி வருகின்றனர்.

ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களிலும் பிற்பகல் 3 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை இந்த வகுப்புக்கள் நடைபெறுகின்றன. பயிற்சிவகுப்பில் பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி சிறுவர்கள், பெரியவர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

பயிற்சிபெறும் அனைவருக்கும் பரீட்சை நடத்திச் சித்திபெறும் அனைவருக்கும் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படும் என அகில இலங்கை திருமுறை மன்றத்தின் அமைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஓ-10)

# மரண அறிவித்தல்கள்

## மனுவேற்பிள்ளை லூயிஸ்

நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை லூயிஸ் (31.03.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை- றோசலின் தம்பதியரின் அன்பு மகனும் பொன்னுத்தம்பி சுவாம்பிள்ளை- தங்கப்பொன் தம்பதியின் அன்பு மருமகனும் றீற்றாவின் பாசமிகு கணவரும் றுபினா, மரினா (பிரான்ஸ்), அலன் (இத்தாலி), றொபின் (கனடா)ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீபன் (நீர்கொழும்பு), காலஞ்சென்ற மேரிகிளாறா மற்றும் ஜோட்ஜ் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.04.2010) சனிக்கிழமை பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனுவேற்பிள்ளை ஸ்ரீபன்.
(நீர்கொழும்பு)
தொ.பே.031-222 0210
(96286)

## மேரியோசப்பின் பாக்கியநாதர்



(அற்புதம் ஆசிரியை, தலைவி மரியாவின் சேனை இளவாலை மறைக்கோட்டம், ஓய்வு பெற்ற ஆசிரியை St.Ursula's Convent பதுளை, Good Shepherd Convent கண்டி, மயிலிட்டி R.C.T.M., காங்கேசன்துறை M.V.)

கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மேரியோசப்பின் பாக்கியநாதர் நேற்று (01.04.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கற்கோவளம் புனித செபஸ்தியார் ஆலயத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் (இளைப்பாறிய ஆசிரியை)-விக்ரோரியா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், பலாலியைச் சேர்ந்த அலெக் சாண்டர்-ஆரோக்கியம் தம்பதிகளின் மருமகளும் பலாலி அலெக்சாண்டர் பாக்கியநாதர் (இளைப்பாறிய ஆசிரியர் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் றெஜி (உரிமையாளர் NR RESTURANT, மட்டக்களப்பு), றொகான், றதீஸ்குமார் ஆகியோரின் அருமைத் தாயாரும் நிஜிதா, வதனி,தயாளினி, (ஆசிரியர் J/St ROCH' S, R.C.T.M) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மரியநியாங்கி (மாணவி, SISILIA CONVENT, மட்டக்களப்பு), ஜெறோம் (மாணவன், திருகோணமலை இந்துக் கல்லூரி), ஆன்ஷெரன் (மாணவன், யா/புனிதபொஸ்கோ பாடசாலை), ஆன்ஷிரோணி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், அந்தோனிப்பிள்ளை (கொற்றாவத்தை), காலஞ்சென்ற அல்பிரட், பிலிப் (இளைப்பாறிய உத்தியோகத்தர், உணவுத்திணைக்களம் கொழும்பு), அல்போன்ஸ் (இளைப்பாறிய காணிப்பதிவாளர், கச்சேரி, மட்டக்களப்பு), அக்கினேஸ் (கோவில்வீதி,யாழ்ப்பாணம்), அகஸ்ரின் (இளைப்பாறிய நிர்வாக அதிகாரி, செட்டிகுளம் பிரதேச சபை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (03.04.2010) சனிக்கிழமை பி.ப. 2மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல் லடக்கத்திற்காக காக்கைதீவு கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத் துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
அ.பாக்கியநாதர் (கணவர்)
பா.றதீஸ்குமார் (மகன்)

'மரியன்ஸ்'
கல்லூரி வீதி, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகர நிறுவனங்களில் பரிசோதனை; தொழில் தருநர்கள் பலரும் ஒத்துழைப்பு

## உதவி ஆணையாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஏப். 02

யாழ்ப்பாண மாவட்ட உதவித்தொழில் ஆணையாளர் தலைமையில் ஐந்து பேர் கொண்ட குழுவினர் நேற்று வியாழக் கிழமை யாழ். நகரில் உள்ள பிரதான 18 நிறுவனங்களில் தொழில் பரிசோதனை யில் ஈடுபட்டனர். இந்த நடவடிக்கைகளுக் குப் பெரும்பா லான தொழில் தருநகர்கள் ஒத்துழைப்பு வழங்கினா்என்று உத வித்தொழில் ஆணையாளர்கே.கணேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவித்த தகவல் கள் வருமாறு :-

✱ நேற்றைய பரிசோதனையின்போது 143 ஊழியர்கள் தொடர்பான விவரங்கள் பெறப்பட்டதுடன், அவர்களை ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் சேர்ப்பிப்பதற் கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

✱ ஊழியர்களின் வேலைநேரம், வாராந்த விடுமுறை, பூரண விடுமுறை, பகிரங்க விடுமுறை, சமயோசித விடு முறை, ஓய்வு விடுமுறை தொடர்பாகச் சட்ட ஏற்பாடுகளிற்கு அமையத் தொழிற் படுமாறும் அவை தொடர்பான பதிவேடு கள் பேணுமாறும் தொழில் தருநர்களுக்கு உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

✱ இப்படியான தொழில் பரிசோதனை தொடர்ச்சியாக யாழ்ப்பாண மாவட்ட தொழில் அலுவலகத்தினால் முன்னெடுக் கப்பட இருப்பதால் தொழிற் தருநர்கள் தொழிலாளர்களின் உரிமை நோக்கில் கூடுதல் கவனமெடுத்துத் தொழிற்படுவ துடன் மாவட்டத் தொழில் அலுவலகங் களுடன் ஒத்துழைத்துச் செயற்படுமாறும் வேண்டுகின்றேன்-என்று குறிப்பிட்டுள் ளனர். (ஓ)

## விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப். 02

தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலையில் தரம் 10, தரம் 11 ஆகிய வகுப் புக்களில் விஞ்ஞானபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் எதிர் வரும் 16ஆம் 20ஆம் திகதிகளில் சாவகச் சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

தரம் 10வகுப்பு ஆசிரியர்களுக்கு 16 ஆம் திகதியும் தரம் 11ஆசிரியர்களுக்கு 20 ஆம் திகதியும் நடைபெறுமென்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

# ஆடைத் தொழிற்சாலையின் 120 ஊழியர்கள் உணவு நஞ்சானதால் வைத்தியசாலையில்

கொழும்பு, ஏப். 02

உணவு நஞ்சாக மாறியமையால் திடீர் சுகவீனம் அடைந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் மஹியங்கனையிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றும் 120 ஊழியர்கள் நேற்றுமுன்தினம் இரவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக சுகாதாரத் துறையினரும் மஹியங்கனைப் பொலிஸ் நிலையப் பொலிஸாரும் புலனாய்வு விசா ரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இந்த ஊழியர்கள் உட்கொண்ட மதிய உணவே நஞ்சாக மாறியுள்ளதுஎன்று ஆரம்பகட்ட விசார ணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

ஊழியர்களின் உடல்நிலை திடீரென மோசமடைந்து வாந்தி, மயக்கம் ஆகிய வற்றுக்கு உள்ளாகினர். பின்னர் உடனடி யாகவே வைத்தியசாலையில் அவர்கள் சேர்க்கப்பட்டனர்.

இவர்களுக்குப் பரிமாறப்பட்டிருந்த மீன்கறியே இந்த உபாதைக்குக் காரண மாகியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படு கிறது.

ஆயினும் ஊழியர்கள் உட்கொண்ட உணவு, தண்ணீர் ஆகியவற்றின் மாதிரி களையும் பரிசோதனைகளுக்கு உட்படுத் திய பின்பே அதற்கான காரணத்தை உறு திப்படுத்த முடியும் என்று சுகாதாரத்துறை அதிகாரிகளும் மஹியங்கனைப் பொலிஸ் நிலையப் பொலிஸாரும் தெரிவித்தனர்.

# தேர்தல் கண்காணிப்பில் வெளிநாட்டவர் 21 பேர்

கொழும்பு, ஏப்.02

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் நீதியாகவும், நேர்மையாகவும் இடம் பெறு கின்றதா? என்பதைக் கண்காணிப்பதற்கு சுமார் 21 பேர் கொண்ட வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் இன்று முதல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப் படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பான், பங்களாதேஷ், இந்தோனே ஷியா, ஆப்கானிஸ்தான், தாய்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த இக்கண் காணிப்பாளர்கள் எதிர்வரும் 10ஆம் திகதி புதன்கிழமை வரை இப்பணிகளைத் தொடர்வார்கள் என்றும் தெரிவிக்கப்படு கின்றது. அவர்களில் அநேகமானவர்கள் அந்தந்த நாடுகளிலிருந்து இலங்கைக்கு புறப்பட்டு வந்துள்ளார்கள் என்றும் தெரி விக்கப்பட்டது.

பவ்ரல் அமைப்பின் அழைப்பின் பேரில் 16 பேரும், தேர்தல் வன்முறை கண் காணிப்பு நிலையத்தின் அழைப்பின் பேரில் 05 பேரும் வெளிநாடுகளிலிருந்து கண் காணிப்பாளர்களாக வரவழைக்கப்பட்டுள் ளனர் என்று அந் நிறுவனங்களின் பேச் சாளர்கள் தெரிவித்தனர்.

இந்த வெளிநாட்டுக் கண்காணிப்பா ளர்கள் எதிர்வரும் 08ஆம் திகதி திங்கட் கிழமை இடம்பெறவிருக்கும் தேர்தலுக்கு முந்திய, பிந்திய நிலைமைகளை கண் காணிப்பர்.

அதேநேரம் பவ்ரல், தேர்தல் வன் முறை கண்காணிப்பு நிலையம் ஆகிய வற்றின் ஏற்பாட்டில் சுமார் 14 ஆயிரத்து 670 உள்நாட்டு கண்காணிப்பாளர்களும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்படு கிறது. (அ-சி)

## 30 வருடங்கள் அனுபவித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முற்பகல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் 12 வேட்பாளர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். இந்தக் கூட்டத்தில் இறுதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றினார். முதலில் சில வரிகளை சிங்களத்தில் பேசிய அவர் பின்னர் தமது உரையைத் தமிழில் தொடர்ந்தார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

30 ஆண்டுகளாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள உங்களுக்கு உரிமையைப் பெற்றுத் தருவதே எனது குறிக்கோள். இரணை மடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீரைக் கொண்டு வருவதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன்மூலம் இங்குள்ள மக்களின் விவசாய, குடிதண்ணீர் பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்படும். யாழ்ப்பாண மக்கள் தேர்தலில் சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. வடக்கு, கிழக்கு, தெற்கு எல்லாம் எனக்கு ஒன்றுதான். நான் எல்லா மக்களையும் ஒன்றாகவே நோக்குகின்றேன். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் எனக்கு வழங்கிய ஆதரவுக்கு நன்றி.

குறுகிய அரசியல் பேதம் வேண்டாம்

30 வருட பயங்கரவாதம் இப்போது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இப்போது எவரும் பயப்படத் தேவையில்லை. கடற் றொழில், விவசாயம் போன்றவற்றில் முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இப்போது அனைத்து மக்களும் எங்கும் போகலாம். வரலாம். நான் சிங்களவன், நான் தமிழன், நான் முஸ்லிம் என்ற இன வேறுபாடு இப்போது இல்லை. குறுகிய அரசியல் பேதங்கள் இனிமேல் வேண்டாம்.

மக்களாகிய உங்களின் தேவைகளை மக்கள் சபை மூலம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். பல வருடங்களாக இல்லாத அபி விருத்தி இப்போது இடம்பெறுகின்றது. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதிகள் அதிகரித்து வருகின்றன.இன்று(நேற்று) வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் உள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களில் 164 பேர் விடுதலை செய்யப் படுகின்றார்கள். அவர்கள் தமது பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுகிறார்கள். வெகு விரைவில் ஏனையவர்களும் விடுதலை செய்யப் படுவார்கள். அத்துடன் புனர்வாழ்வு முகாம்களில் இருந்து 148 பல்கலைக்கழக மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்படுகின்றார்கள். புனர்வாழ்வு முகாம்களில் உள்ள இளைஞர்களின் கணனிப்பயிற்சிக்காக வவுனியா, பம்பைமடுவில் பயிற்சி நிலையம் அமைக்கப்படுகின்றது. யாழ். பல்கலைக்கழகம் விரைவில் முழுமைபெறவுள்ளது. அங்கு விரைவில் பொறி யியல் பீடம் ஆரம்பிக்கப்படவுள்ளது. சர்வதேச ரீதியில் தமிழ் பிள்ளைகள் நல்ல பெயர் பெற வேண்டும். யாழ்தேவி மீண்டும் வரும். ஏ- 9 வீதியால் எவரும் போகலாம், வரலாம். ஆசியாவிலேயே சிறந்த நூலகம் யாழ். பொதுநூலகம். அதனை ஐக்கிய தேசியக் கட்சி எரித்தது. அது எதிர்காலச் சந்ததிக்குச் செய்த பெரிய பாவம். அநியாயம். எனவே மக்களாகிய நீங்கள் எம்மோடு இணை யுங்கள். இன வாத அரசியல் வேண்டாம். குறுகிய எண்ணங்கள் வேண்டாம். ஆசியாவின் கேந்திர நிலையமாக எமது நாட்டை மாற்று வோம் - என்றார்.

இந்த நிகழ்வின்போது, மீளக் குடியமர்ந்த மக்களுக்கு இலங்கை இராணுவத்தால் அமைக்கப்பட்ட வீடுகளின் திறப்புகளையும் ஜனாதிபதி வீட்டு உரிமையாளர்களிடம் வழங்கினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமதுரையில் தெரிவித்தவை வருமாறு:-

இணக்க அரசியலின் அடிப்படையில் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு இணைந்து செயற்பட ஏனைய தமிழ்த் தலை வர்கள் தயாராக இருந்தால், அவர்களுடன் இணைந்து செயற்பட நானும் தயாராக உள்ளேன். எனினும் ஏனைய தமிழ்த் தலைமைகள் தமது சுய இலாபங்களுக்காக அவ்வாறு செயற்பட முன்வரமாட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் விரைவில் மூன்று ஆடைத் தொழிற்சாலைகளை அமைத்து சுமார் 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை வ்ழங் குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி இங்கு வந்துள்ள முதலீட்டுச் சபையின் தலைவருக்குப் பணிப்புரை விடுத் துள்ளார். அத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வு காண்பதற்குத் தயார் என் றும் தெரிவித்துள்ளார் - என்றார்.

முன்னதாக நேற்றுக்காலை 10.45 மணியளவில் பலாலி படைத்தளத்தில் இருந்து ஹெலி மூலம் யாழ். கல்வி வளாகத்துக்கு அரு கில் உள்ள மைதானத்தில் வந்திறங்கிய ஜனாதிபதி அங்கிருந்து நல்லூர் ஆலயத்துக்குச் சென்று விசேட பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டார். அதன் பின்னர் யாழ்.நாகவிகாரைக்குச் சென்று அவர் வழிபட்டார். பின்பு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடை பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் வவுனியாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். (அ-50)

## அமெ. தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கு அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ் அரசியல் நடவடிக்கைப் பேரவை (The United States Political Action Council) பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அத்துடன் அமெரிக்காவின் பிரபல சட்ட அறிஞர் பிரான்ஸிஸ் பொய்லேயை இந்த நிபுணர் குழுவில் ஒருவராக இணைத் துக்கொள்ள வேண்டும் என்று இப்பேரவை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் - கீ - மூனுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாகப் பேரவையின் அறிக் கையில்தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் யுத்தக்குற்றங்கள் தொடர்பான விடயத்தில் சர்வதேச நிபுணர் கள் குழுவின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளும் ஐ.நாவின் யோசனையை பேரவை வரவேற்று ஆதரவளிக்கின்றது.

யுத்தக் குற்றங்களுக்காக இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு போதிய சான்றுகள் உள்ளனவா என்று இந்த நிபு ணர்கள் குழு ஆராய்ந்து ஐ.நாவுக்கு ஆலோசனை வழங்கும் எனக் கூறப்படு கின்றது. பேரவையின் அபிப்பிராயப்படி அமெ ரிக்காவின் சிக்காகோ நகரைச் சேர்ந்த சட் டப் பேராசிரியர் பிரான்ஸிஸ் பொய்லே இந்நிபுணர் குழுவில் அங்கம் வகிப்பதற்கு மிகவும் பொருத்தமானவர். அவர் சர்வதேச சட்டம், மனித உரிமைகள் ஆகியவற்றில் கைதேர்ந்த புலமையாளர். இனப்படு கொலைகள், மனிதப் பேரழிவுகள், மனித உரிமைகள் மீறல் சம்பந்தப்பட்ட சர்வதேச விசாரணை ஆணைக்குழுக்களில் அங்கத் துவம் வகித்து கடந்த காலங்களில் காத்திர மான பங்களிப்புகளை வழங்கி வந்துள்ளார்.

ஐ.நா. செயலாளரால் நியமிக்கப்பட இருக்கும் நிபுணர்கள் குழு மறைக்கப் பட்ட பல உண்மைகளை சர்வதேச சமூகத் துக்கு வெளிப்படுத்தும் என்பது எமது நம் பிக்கையாகும். எனவே, இந்த நிபுணர்கள் குழுவில் பேராசிரியர் பொய்லே அங்கம் வகிக்கின்றமை மூலம் ஐ.நாவுக்கு காத்திர மான பங்களிப்புகளை வழங்கமுடியும் என் பது எமது கருத்தாகும். - என்று உள்ளது.

## தமிழ்க்கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர் ஒருவர் அங்கு கேள்வி யெழுப்பினார். அதற்குப் பதிலளிக்கையி லேயே தேரர் இதைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வரு மாறு:-

வடக்கு - கிழக்கு தொடர்ந்தும் பிரிக் கப்பட்ட நிலையில் இருப்பதுதான் அனை வருக்கும் நல்லது. அந்த மாகாணங்கள் மீள இணைக்கப்படுவதால் எவருக்கும் எந்த நன்மையும் இல்லை.

இந்த நாடு மூவினத்தவர்களுக்கும் சொந்தமானது. எந்த இனமும் எங்கும் வாழ லாம். ஓர் இனத்திற்கு மட்டும் மட்டுப் படுத்தப்பட்ட பிரதேசம் என்று இந்த நாட் டில் இல்லை. மூவினங்களும் ஒன்று பட்டே வாழவேண்டும். நாம் பிரிவினை வாதத்தை ஆதரிக்கக்கூடாது. அதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

குறிப்பாக, வடக்கு - கிழக்கு மக்கள் பிரிவினைவாதம், சுயாட்சி, வடக்கு - கிழக்கு மீள இணைப்பு போன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனவில் சிக்கி விடக் கூடாது. அம்மக்கள் தேசியத்துடன் இணைந்திருக்க வேண்டும்.

இது தொடர்பில் தமிழரின் மனங்களை மாற்றுவோம். அவர்கள் சகல இனங்களுட னும் சேர்ந்து வாழ்வதற்கான வழிவகை களை நாம் செய்வோம். இன ரீதியாக, மாகாண ரீதியாகப் பிரிந்து நின்று எம்மால் எதையும் சாதித்துவிட முடியாது. ஒரு நாட் டின் கீழ் ஒற்றுமைப்பட்டு வாழ்வதே எம் அனைவருக்கும் நன்மை பயக்கும். - என் றார். (அ-சி)

## பம்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் செயற்பாட்டை நேற்று ஜனா திபதி வைபவரீதியாக ஆரம்பித்துவைத்த போதும், நாளையே சம்பந்தப்பட்டோர் அவர்களது உறவினர்களிடம் கையளிக்கப் படுவர்.

அவயங்களை இழந்த 1,175 பேரை யும் சிறுவர்களான 175 பேரையும், பல் கலைக் கழக மாணவர்களான 178 பேரை யும் விடு விப்பதற்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மாத இறு தியில் கல்வியைத் தொடர விடுவிக் கப் படுவர் என்றும் ஏனையோர் நாளை விடு விக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ள 12 ஆயிரம் முன்னாள் போராளி களில் விடுவிக்கப்படும் 1,528 பேரும் அடங்குவர் எனக்கூறப்பட்டது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கத் தகடில்லாத வாகனங்களில் வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரம்

## கண்காணிப்பு மத்திய நிலையம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 02

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிலர் இலக்கத் தகடுகள் பொருத்தப்படாத வாகனங்களைத் தமது பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகின்றனர் எனத் தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் திருப்தியளிக்கவில்லையெனத் தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு மத்திய நிலையத்தின் தேசிய இணைப்பதிகாரி சட்டத்தரணி ரஸங்க ஹரிஸ்சந்திர தெரிவித்தார்.

அத்துடன் சட்டவிரோத தேர்தல் சுவரொட்டிகள், மற்றும் பதாகைகளை அகற்றும் நடவடிக்கைகளும் வெற்றியளிக்கவில்லை எனவும் அவர் கூறுகிறார்.

இவை தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவித்தும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும்-

தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும் சில வாகனங்களின் இலக்கத் தகடுகள் மறைக்கப்பட்டுள்ளன என்றும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையத்தின் தேசிய இணைப்பதிகாரி டி எம் திஸாநாயக்க தெரிவித்தார்.

தேர்தல் சட்டங்களையும் போக்குவரத்து விதிகளையும் மீறும் இத்தகைய நடவடிக்கைகளால் பொது மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இத்தகைய வாகனங்களால் ஏற்படும் விபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. இதனைத் தவிர்த்துக்கொள்ளவேண்டியது அரசியல் கட்சிகளினதும் பொலிஸாரினதும் கடமையெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-சி)

# பிரிட்டிஷ் அரச பிரதிநிதிகளுடன் இலங்கை மக்கள் குழு சந்திப்பு

லண்டன், ஏப். 02

பிரிட்டனில் வசிக்கும் இலங்கை மக்கள் பிரதிநிதிகள் குழு, நேற்றுமுன்தினம் லண்டனில் அரச பிரதிநிதிகளைச் சந்தித்தது.

பிரிட்டனின் வெளிவிவகாரம் மற்றும் பொதுநலவாய அமைப்பு அலுவலகத்தினால் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச்சந்திப்பில் பிரதமர் கோர்டன் பிறெவுணின் இலங்கைக்கான பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெஸ் ப்ரெளன் மற்றும் மைக் பெஸ்டர் ஆகியோர் பிரிட்டன் பிரதமர் சார்பில் கலந்துகொண்டனர்.

பிரிட்டனில் வசிக்கும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மற்றும் பறங்கியர் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 25 பேர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர் எனப் பிரிட்டன் வெளிவிவகாரச் செயலகம் தெரிவித்தது.

இச்சந்திப்பின்போது இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் அரசியல் நிலைவரம் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பிரிட்டனின் வெளிவிவகாரம் மற்றும் பொதுநலவாய அமைப்பு விவகாரங்கள் தொடர்பான செயலாளர் டேவிட் மிலிபாண்ட் இந்தச் சந்திப்பின்போது ஒளிப்பதிவுச் செய்தியொன்றை அனுப்பியிருந்தார் எனவும் கூறப்படுகிறது.

இச் செய்தியில் அமைதியான அரசியல் நகர்வுகளின்மூலம் இலங்கையின் தேசிய ஒருமைப்பாடு வலியுறுத்தப்படவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் இலங்கையின் மனித உரிமைப் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசு விரைவில் கூடிய கவனம் செலுத்துமென டேவிட் மிலிபாண்ட் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

மனித உரிமைப் பிரச்சினை காரணமாக ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை தற்காலிகமாக நிறுத்தப்பட்டாலும் இலங்கையுடன் பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொள்ள ஐரோப்பிய ஒன்றியம் விரும்புகிறது எனப் பிரிட்டன் வெளிவிவகாரச் செயலாளர் தெரிவித்தார் எனவும் கூறப்படுகிறது. (அ-சி)

## காரைநகரில் ஐ.தே.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தவை வருமாறு:-

அராலி தெற்கில் நேற்றிரவு நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் எமது ஆதரவாளர்களுடன் காரைநகர் நோக்கிச் சென்றேன். பொன்னாலைப் பாலம் கடந்து வலந்தலை சந்திக்குச் சென்று அங்கு நின்று, கூட்டம் நடத்துவது பற்றிக் கலந்துரையாடிக் கொண்டிருந்தோம்.

அப்போது அங்கு மோட்டார் சைக்கிளிலும், ''பிக்கப்'' வாகனத்திலும் வந்த ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் தலைமையிலான கோஷ்டி ஒன்று எம்மைத் தகாத வார்த்தைகளால் ஏசியது. பின்னர் பொல்லுகள், பிஸ்ரல் ஆகியவற்றைக் காட்டி அச்சுறுத்தியது. எமது ஆதரவாளர்களைத் தாக்கியது.

அதுமட்டுமன்றி எமது வாகனங்களின் திறப்புக்களைப் பறித்துச் சென்றது. வாகனக் கண்ணாடிகளை அடித்து நொறுக்கியது.

இது குறித்து கடற்படை அதிகாரிகளுக் குத் தகவல் கொடுத்ததன் பேரில் கடற் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து அமைதியை ஏற்படுத்தினர் - என்றார்.

இதேவேளை -

தமது அராலிக் கூட்டத்தில் பங்குபற்றிய இரு ஆதரவாளர்கள் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, சங்கானையில் வழிமறித்த ஈ.பி.டி.பி.யினர் அவர்களைத் தாக்கியதுடன் அவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிளைச் சேதப்படுத்தியதாகவும் வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-1)

## கொழும்பு...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தமிழகம் தூத்துக்குடி கப்பல் சேவைப் பணிப்பாளர் ஜி.கே.ராவ் உறுதிப்படுத்தினார்.

இதன்படி கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதற்கான அனுமதி கோரி இந்திய கப்பல் போக்குவரத்து திணைக்களம் மற்றும் உள்துறை அமைச்சு என்பவற்றுக்கு கடிதம் அனுப்பியுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார். (சி)


சுயேச்சைக்குழு - 10



X 5

கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை
முதன்மை வேட்பாளர்
(முன்னாள் கல்விப்பணிப்பாளர்)

The Princess of Wales
Nursing Home
132, Kachcheri Nallur Road, Jaffna.
T.P: 021 222 6179 Fax No: 021 222 6180

புதிய சித்திரைப் புத்தாண்டில்
புதுப் பொலிவுடன் புதிய ஆரம்பம்
★ வெளிநோயாளர் பிரிவு (OPD) காலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் பார்வையிடப்படும்.
★ விசேட வைத்திய நிபுணர்களின் சேவையும் சிகிச்சையும்
★ நவீன ஸ்கானிங் (Scan) வசதி, ECG
★ சகலவிதமான இரத்த, சல பரிசோதனைகள்
★ மிகவும் வசதியான விடுதி வசதி

வேலை வெற்றிடம்
1. தாதிய மேற்பார்வையாளர் 2.தாதியர்/தாதிய பயிலுநர்
3.சுகாதாரத் தொழிலாளர் 4.கணக்குப் பதியுநர்
5. மருந்தாளர்

ஆர்வமுள்ளோர் தங்களது கல்வித் தகைமை, தொழில் ரீதியான சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தருமாறு கேட்டுகொள்கின்றேன்.

இடம்: Princess of Wales hospital
132, கச்சேரி நல்லூர் வீதி,
காலம்: 04.04.2010 ஞாயிறு காலை 9 மணி
Medical Director

CHEMISTRY
S.VASU
A/L 2010
மின் இரசாயனம்
ஆரம்பம்:
03.04.2010
(SAT 1.00PM)
Sat., Sun 1-2 pm
NEC
Clock Tower
Road,Jaffna.

தமிழ்க் காங்கிரஸ்



X 10
S.வரதராஜன்
(முதன்மை வேட்பாளர்)
பிரபல பொருளியல் ஆசிரியர்

நாளை ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
தரம் 6, 7, 8, 9, 10, O/L
வகுப்புக்களுக்கான
2ஆம் தவணை
ஆரம்பம் 03.04.2010
Sat. 10.30 a.m.
மு.கு. : ஒருசில புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

NEW SCIENCE CENTRE
யாழ்- நகர்
'சக்தியியல்'
SAT,SUN-11.30-12.30
ஆரம்பம் 03.04.2010 SAT 11.30
D BLOCK ELEMENTS
SAT,SUN- 2.00- 3.00
"BENZENE"
SAT,SUN-4.30-5.30
BY: அன்பு



காலம் காலமாக தொடரும் பேரினவாத அச்சுறுத்தலுக்கு முடிவுகட்ட சிந்தியுங்கள்

X

இரண்டாம் தர பிரஜைகள் என்ற அவப்பெயரில் இருந்து விடுபட ஒன்றுபடுங்கள்

1

எமது வாழ்வுரிமை,அரசியலுரிமையை வென்றெடுக்க வாக்களியுங்கள்

மக்கள் துயர் துடைக்க
மீண்டும் ஒரு தியாகராஜா மகேஸ்வரன்...
தியாகராஜா துவாரகேஸ்வரன்

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)

இளைஞர்களை அரசியலுக்கு வரவேண்டும் என அழைத்தீர்கள்!
நான் இளைஞனாக உங்கள் முன் தமிழ்த் தேசிய உணர்வோடு வந்து நிற்கின்றேன். உங்களுக்கு சேவை செய்ய எனக்கு ஒரு சந்தர்ப்பம் தருமாறு உரிமையோடும் அன்போடும் வேண்டுகின்றேன். தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வலியுறுத்தி தொடர்ந்தும் உரத்துக் குரல்கொடுப்பேன் என உறுதியளிக்கின்றேன். தமிழ் மக்களின் அன்றாட வாழ்வாதார பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எனது சக்திக்குட்பட்ட வகையில் அயராது செயற்படுவேன். எதிர்கால சந்ததியின் நலன்கருதி என்னை வெற்றிபெற வாக்களிக்குமாறு வேண்டுகின்றேன்.



விஸ்வலிங்கம் மணிவண்ணன்
(யாழ்.பல்கலைக்கழக சட்ட மாணவன்)
இளமை - துடிப்பு

X 8


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்



தொகுப்பு: ஐயந்தன்

எதிர்கால சந்ததியினர் கல்வி நிலையில் எமது முன்னோர்கள் எவ்வளவு அக்கறையில் இருந்துள்ளார்கள் என்பதை ஒவ்வொரு பாடசாலையின் தோற்றம் பற்றிய ஆய்வுகள் மூலம் தெரிய வருவதைக் காணமுடிகின்றது. கல்வித் துறையின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டிருந்த எமது முன்னோர்கள் தமது செலவில் தமது காணிகளில் பாடசாலைகளை அமைத்து தமது சொந்தப் பணத்தில் ஆசிரியர்களுக்கு வேதனத்தை வழங்கி கல்வித்துறைக்கு பெரும் அர்ப்பணிப்பினை வழங்கியுள்ளமை தற்போதைய கல்விச் சமூகத்திற்குப் பெரும் முன்னுதாரணமாகத் திகழ்கின்றது. அந்தவகையில் இன்று மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் தொடர்பான ஆய்வினை தங்களிற்குச் சமர்ப்பிக்கின்றேன்.

மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் சாவகச்சேரி நகர்ப் பகுதியிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. வித்தியாலயம் அமைந்துள்ள பிரதேசம் கடற்றொழிலாளர், விவசாயிகள், கூலிவேலை செய்வோர் ஆகிய குடும்பங்களைக் கொண்ட பிரதேசமாகும். அல்லாரை மேற்கு, கோவிற் குடியிருப்பு, மீசாலை கிழக்கு, மீசாலை தெற்கு சப்பச்சி மாவடி, தம்பு தோட்டம் போன்ற கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசமாகும். இங்குள்ள சிறார்கள் இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள பாடசாலைகளுக்கு தமது கல்விக்காகச் சென்று வந்தனர்.

அக்காலத்தில் இப் பாடசாலைக்குச் செல்லும் பாதைகளில் குடியிருப்புக்கள் குறைவாக இருந்ததாலும் போக்குவரத்து வாகன வசதி இல்லாததாலும் பல குடும்பங்கள் நகர்ப் பகுதியில் உள்ள பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பத் தயங்கினர். இதனால் பல குடும்பங்களின் பிள்ளைகள் கல்வி அறிவினைப் பெறும் சந்தர்ப்பங்களை இழந்த நிலையில் இருந்தனர்.

இந்த வேளையில் அப்பகுதியில் வசித்த ஆயுள்வேத வைத்தியரான பரமு வீரசிங்கம் என்பவர் தனது காணியில் ஓலைக் கொட்டகையை கடந்த 1930ஆம் ஆண்டு அமைத்து இப்பாடசாலைக் கல்விக்கு வித்திட்டார்.பாடசாலை ஆரம்பித்த காலத்தில் ஆரம்பப் பிரிவில் 100க்கு மேற்பட்ட மாணவர்கள் இணைந்ததால் ஐந்தாம் வகுப்பு வரை தலைமை ஆசிரியர் உட்பட ஐந்து ஆசிரியர்களை நியமித்து அவர்களின் மாதாந்த வேதனத்தையும் வழங்கி வந்தார். ஆரம்ப கால தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்ற மு.கந்தையா தமது கடமையினைச் சிறந்த முறையில் மேற்கொண்டதன் பயனாக ஒன்பதாம் வகுப்புவரை மாணவர்கள் கல்வி கற்க வழியேற்பட்டது.

இவ் வித்தியாலயக் கல்வி வளர்ச்சியின் பயனாக 1960ஆம் ஆண்டு அரசினால் பொறுப்பேற்கப்பட்டது. அரசினால் பொறுப்பேற்கப்பட்டபோது பெயரிடுவது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் ஸ்தாபகரின் செல்ல மகளாக இருந்த கமலாம்பிகையின் பெயரை வித்தியாலயத்துக்குச் சூட்ட வேண்டுமென அப்பகுதி மக்களும் கல்விமான்களும் ஏகமனதாக முடிவு செய்ததால் அன்று தொடக்கம் மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கி வருகிறது.

மு.கந்தையா இளைப்பாறிய பின்னர் அதிபர்களாக சிதம்பரப்பிள்ளை, வே.பொன்னம்பலம், சங்கரப்பிள்ளை ஆகியோர் தமது பணிகளைத் திறம்பட மேற்கொண்டதில் தையல், நெசவு போன்ற பாடங்களும் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

காலப்போக்கில் மாணவர்களுக்கு கல்லூரிகளில் கல்வி கற்கும் ஆர்வம் ஏற்பட்டதால் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டது. வகுப்புக்கள் படிப்படியாக குறைக்கப்பட்டு திருமதி ஆறுமுகம் அதிபராக இருந்த காலத்தில் ஐந்தாம் வகுப்பு வரை குறைக்கப்பட்டது.

அதன் பின்னர் வே.நாகராசா, சி.வேலாயுதபிள்ளை, வி.தெய்வேந்திரமூர்த்தி, ந.தியாகராசா, திருமதி கோ.தேவராசா ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றி வித்தியாலய வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியுள்ளதை மாணவர்கள் பெற்ற திறமைகள், சாதனைகள் மூலம் அறியமுடிந்தது.

இவர்களது சேவைக்காலத்தில் ஓலைக்கொட்டில்களாக இருந்த வகுப்பறைகள் கட்டடங்களாக மாறியிருந்தன.

இவ் வித்தியாலயத்தில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் வருடாவருடம் வெட்டுப் புள்ளிகளை நெருங்கும் அளவுக்குப் புள்ளிகளைப் பெற்று கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டதைக் காணமுடிகின்றது.

2000ஆம்ஆண்டு இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களின் போது மக்கள் இடம் பெயர்ந்த காலத்தில் கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் இயங்கியது.

மக்கள் மீளக் குடியமர்ந்த வேளையில் வித்தியாலயத்தில் இருந்த தளபாடங்கள் அனைத்தும் காணாமல் போயிருந்தன. அத்துடன் வித்தியாலய பதிவுகள் அனைத் தும் அழிந்து போயிருந்தன.

மாகாணக் கல்வித் திணைக்களத்தினர் சேதமடைந்த வித்தியாலய கட்டடங்களை புனரமைத்து வழங்கினர். வித்தியாலத்திற்காக தளபாடங்களை தென்ம ராட்சி கல்வி வலயத்தினர் வழங்கியிருந்தனர். வெளிநாட்டில் உள்ள நலன் விரும்பி ஒருவரின் நிதி உதவியுடன் விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டுள்ளது.

தேவைகள்

வித்தியாலயத்தில் கற்கும் மாணவர்களுக்கு மலசலகூட வசதிகள் இல்லை. அத்துடன் வித்தியாலயத்தைச் சுற்றி வேலிகள் அடைக்கப்படாத நிலையில் உள்ளன. *




# கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயம்

சைவசமயம் தழைத்தோங்கும் சாவகச்சேரியின் கல்வயல் கிராமத்தில் பல கல்வியாளர்களை உருவாக்கி அமுதவிழா காணும் யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயத்தைப் பற்றி நோக்குவோம்.

கிறிஸ்தவ மதப் பிரசாரம் மேலோங்கியிருந்த காலத்தில் சைவர்கள் அதிகமாக வாழ்ந்த கல்வயல் கிராமத்தில் 1900ஆம் ஆண்டு மிஷன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. கிறிஸ்தவ மத பிரசாரங்களில் மயங்காத கல்வயல் கிராம மக்கள் தமது பிள்ளைகளை மிஷன் பாடசாலைக்கு அனுப்ப மறுத்தனர். குறிப்பிட்ட காலம் வரை ஓரிரு மாணவருடன் இயங்கிய பாடசாலை கல்வயல் சைவப்பிரகாச வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கி 1980 களில் முற்றாகச் செயலிழந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் மூடப்பட்ட முதலாவது பாடசாலையாகியது.

கல்வயல் சைவப்பிரகாச வித்தியாலயம் இயங்கிய காலத்தில் அது மீண்டும் மிஷன் பாடசாலையாக மாறலாம் என்ற அச்சம் அப்பகுதி மக்கள் மத்தியில் இருந்ததால் தற்போது வித்தியாலயம் அமைந்துள்ள 12 பரப்புக் காணி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பங்காளர்களுக்கு சொரியலாக இருந்தது. இந்த நான்கு பங்குகளைச் சேர்ந்தவர்களும் ஒன்றிணைந்து காணியினை தர்ம சாசனமாக பாடசாலைக்கு உறுதி மூலம் எழுதிக் கொடுத்தனர். முருகரின் பிள்ளைகளான கதிர்காமு, கார்த்தி கதிரவேலு ஆகியோரும் ஆறுமுகத்தின் பிள்ளைகளான கூரசித்தம்பி, செல்லையா ஆகியோரும் கந்தரின் பிள்ளைகளான கணபதிப்பிள்ளை, சுப்பையா, அருணாச்சலம், இராமலிங்கம் ஆகியோரும் முத்தரின் மகனான சின்னையா பெண் அம்மாக்குட்டியும் இணைந்து 12 பரப்புக் காணியையும் எழுதிக் கொடுத்தனர்.

அந்தக் காணியில் அப்பகுதிப் பிரமுகரான வைத்திலிங்கம் விநாயகமூர்த்தி தலைமையிலான ஊர்ப்பிரமுகர்கள் ஓலைக் கொட்டிலை அமைத்து பாடசாலையை உருவாக்கினர். 1930.06.18ஆம் திகதி யாழ்ப்பாணம் வேதாந்த மடத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் மகாதேவா சுவாமி பாடசாலையினை ஆரம்பித்து வைத்து ஸ்ரீசண்முகானந்த வித்தியாசாலை எனப் பெயரிட்டார்.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட நாளில் 31மாணவர்கள் இணைந்து கொண்டனர். ஆரம்பகால தலைமை ஆசிரியராக பொறுப்பேற்றார். அவருடன் க.வேலுப்பிள்ளை, க.சிதம்பரப்பிள்ளை, செல்வி.க.பாக்கியம், செல்வி வி.இராசம்மா ஆகியோரும் ஆசிரியர்களாகச் சேர்க்கப்பட்டனர். ஸ்தாபகரான வைத்திலிங்கம் விநாயகமூர்த்தியின் தம்பியான வைத்திலிங்கம் இரத்தினசபாபதி பாடசாலையின் முகாமையாளராகச் செயற்பட்டு வந்தார்.

வித்தியாலய அதிபர்கள், ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையினால் குறுகிய காலத்தில் 1936 ஆம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலை பரீட்சை சான்றிதழ் ( எஸ்.எஸ்.சி) வகுப்பு வரை வளர்ச்சி அடைந்தது 1962ஆம் ஆண்டு வரை சைவவித்தியா விருத்திச் சபையினால் நடத்தப்பட்டு வந்தது. இக்காலப்பகுதியில் வித்தியாலய மாணவர்களின் கல்வி வளர்ச்சியும் அதிகரித்தது.

(தொடரும்)

தென்மராட்சி வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி திவ்யாஞ்சலி
தனபாலசிங்கம்
B.F.A(இசை) 2ஆம்வகுப்பு



தனபாலசிங்கம்
சுலக்ஷன்
B.F.A(சித்திரமும்,வடிவமைப்பும்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற சகோதரர்களை மேலும் பட்டங்கள், பதவிகள் பெற்றுச் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

தாய் திருமதி அ.தனபாலசிங்கம்
உதவிக் கல்விப் பணிப்பாளர்(அழகியல்)
மற்றும் மாமன்மாரும்.

யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக் கழகத்தின் 25ஆவது பட்டமளிப்புவிழாவில் 26.03.2010 அன்று பொருளியல் சிறப்பு கலைமாணி B.A(Hons) 2nd Upper Special in Economics பட்டம் பெற்ற

**செல்வி தாரணி தர்மலிங்கம்**

அவர்களை பல்கலையும் பெற்று மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா,
பிரசாத்(தம்பி-ஜேர்மனி),
சோபிகா (மைத்துனி-ஜேர்மனி),
சந்தோஷ் (மருமகன்),
தினேஷ் (தம்பி-டோகா),
நிஷாந்,சசிகாந் (தம்பிமார்).

சுதுமலை,
மானிப்பாய்.

(96258)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் 27.03.2010 அன்று நடைபெற்ற 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் வியாபார தொழில் நிர்வாகமாணிப் பட்டம் பெற்ற எமது நண்பன்

**தங்கவேலாயுதம் பிருந்தாகரன்**

அவர்களை மனமகிழ்ச்சியுடன் வாழ்த்துவதோடு, மேலும் பல பட்டங்கள் பெற்றுவாழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
திருக்குமரன், முரளி, பகி, கிரி, பார்த்தீபன், விஜி, றாதவன், கமலன், பிரதாப், மகேசன், ஜெயக்குமார், சுதன், கீதன், கணேசன், ரவீந்திரன், ராஜாஜி, திலீபன், கிரிஷாந், கோகுலன், ஜெயபாலன், குணசேகரம், வினோதன், மயூரன், ரமணன், அன்பு, ஜனுபன், சுவேந்திரன் (நண்பர்கள்).

நாகலிங்க சுவாமிகள் வீதி,
சங்கானை.

(96246)


## கனடாவில் கல்வியுடன் கூடிய தொழில் வாய்ப்பு!!

கனடா நாட்டில் உயர் கல்வியுடன் கூடிய தொழில் வாய்ப்பிற்கான விசா மூன்று மாதத்தினுள் பெற்றுத் தரப்படும். (*100% Visa* உத்தரவாதம்)

எதிர்பார்க்கப்படும் கல்வித்தகைமை - *O/L or A/L or Degree / Diploma*

முக்கிய குறிப்பு :- விசா பெற்றுத்தரும் வரை எவ்வித தொகைப்பணமும் எம்மால் உங்களிடம் இருந்து அறவிடப்படமாட்டாது.

நேர்முகப்பரீட்சை வெகுவிரைவில் நடைபெற உள்ளதால் உடன் எமது நிறுவனத்தில் உங்கள் பதிவுகளை மேற்க்கொள்ளவும்.

உங்கள் பதிவுகளுக்கான இறுதித் திகதி :- 10/04/2010

- Conditions for Apply -

விபரங்களுக்கு :- **UNI - ICT CAMPUS**
**No - 83, Palaly Road,**
**Kantharmadam, Jaffna.**
**Call :- 0777 110 862**


## திருமண சேவை

பொறியியலாளர்கள், டாக்டர்கள், B.A, B.Sc, M.Sc பட்டதாரிகள், கணனிப் பட்டதாரிகள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள் உட்பட அனேகரின் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன. உங்கள் பிள்ளைகளின் திருமணத்துக்கு ஏற்ற உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் தெரிவுக்கு நேரில் சந்தியுங்கள்.

த.சிவானந்தன் (பிரபல சோதிடர்)
"சிவா சோதிட நிலையம்"
இல.100, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்து மகளிர் கல்லூரி முன்பாக)

(96261)

# லொறிச் சாரதிகளுக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

தென்மராட்சிப் பிரதேசத்தில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற நான்கு பார ஊர்திகளின் சாரதிகளுக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சத்து30ஆயிரம்ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை விசாரித்த நீதிவான் இரு வாகனங்களின் சாரதிகளுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒருமாத சாதாரண சிறைத் தண்டனையும்,

மேலும் இரு வாகனங்களின் சாரதிகளுக்கு தலா 40 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா ஒரு மாதம்சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் வாகனத்தினை தலா 5 லட்சம் ரூபா பிணையில் செல்லவும் உத்தரவிட்டார்.(1-207)

### சேலைக் கண்காட்சி

கலாஞ்சலி சாரீஸ் நிறுவனம் நாளை சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கண்கவர் சேலைக் கண்காட்சி நடத்தவுள்ளது.

இக் கண்காட்சியில் கிறேம் ஷிட்டோன், றோஸ், சில்க் சேலைகள், பருத்திச் சேலைகள் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் இக் கண்காட்சியில் கலந்து கொள்ளலாம். (ஒ-6)

### காணி பதிவகத்தின் பணிகள் இடை நிறுத்தம்

எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை முன்னிட்டு காணி மாவட்டப் பதிவகத்தின் அனைத்துப் பணிகளும் எதிர்வரும் 5 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் பணிகள் வழமைபோல் 12 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## பாராட்டி வாழ்த்து



26.03.2010 அன்று யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில் இளங்கலை மாணிப்பட்டம் பெற்ற

செல்வி கந்தையா வனிதா

B.A (Hons) 2nd Upper Divisition (தமிழ் சிறப்புக் கலை) அவர்களை மேன்மேலும் பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம். ஐ.கணேஷ் குடும்பம்.

(98256)

ஓம் சக்தி

## பாராட்டி வாழ்த்துகிறோம்



**செல்வன் கணபதிப்பிள்ளை ஞானகரன்**

யாழ்.பல்கலைக்கழகத்தில் 27.03.2010 அன்று நடைபெற்ற 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானத்துறையில் B.S.c பட்டம் பெற்றதையிட்டு மனதார வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

ராஜ் ஜூவல்லர்ஸ்,
திருநெல்வேலி.

(96237)

வாழ்த்துவோர்:
பெரியம்மா குடும்பத்தினர்.


# STUDY IN INDIA

EST. 1968
ISO 9001 - 2000 Certified

## East West College Bangalore

AFFILIATED TO BANGALORE UNIVERSITY, VTU, RGUHS, Accredited by NBA -NewDelhi

க.பொ.த (உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியடைந்துள்ளீர்களா? கவலை வேண்டாம்!! நீங்களும் பட்டதாரியாகலாம்!!!

**Spot Admissions & Career Guidance**

உடனடி அனுமதிகளை பெற்றுக்கொள்ள எங்கள் கல்லூரியின் அதிபர்

**Prof. B. Purusotham M.Sc, PGDBA, Mphil, Phd.**

அவர்களை எங்கள் **Jaffna Admission Center** இல் நேரில் சந்திக்கலாம்.

திகதி: **01-04-2010** முதல் **03-04-2010** வரை

நேரம்: **10.00AM - 6.00PM**

**East West Admission Center :**

Colombo
#67, 1/1, Galle Road, Dehiwala. 011-564 0787

Jaffna
#5, 1st Floor, New Market Building, Jaffna.
Tel: 011-3050111

0777-168-777

**SCHOLARSHIPS for BBM / BCA / B.Sc**

COURSES OFFERED AT EAST WEST

Professional Degrees (A/L 2 Pass + English)
Bachelor of Computer Applications (BCA),
Bachelor of Business Management (BBM)
B.Sc-(BioTecnogy/Gene/MicroBio/BioChe)

Bachelor of Engineering(A/L - C,2S - Maths)
Electronics & Communications, Mechanics,
Computer Sci, Information Technology, Civil.

Dip. in Engineering (O/L with Maths)
Electronics & Communications, Mechanics,
Computer Sci, Information Technology, Civil.

Paramedical
Bachelor of Pharmacy,
B. Sc - Nursing,
Diploma in Medical Lab Technician,
Diploma in Pharmacy


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org